நன்றி - நூலகத்திட்டம்

SARINIHAR

# சரிநிகர்


சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ்-202, செப்.24-30,2000 விலை ரூபா 12.00

**நம் தலைவர் நா!**

செம்மணியும் இல்லைச் ஷெல்லடியும் இல்லைச் செத்தொழிந்த
எம்மனிதர் கதையெதுவும் இன்றில்லை- அம்மணியார்
ஆட்சி உகந்தளித்த அருந்தேர்தல் கள்வெறி முன்
நாட்டமுற நம் தலைவர் நாவில்!

—சுரமோகம்





## யாழ்: தலை கீழாக மாறும் இராணுவச் சமநிலை !



# அஷ்ரஃப் மரணம்: அரசியல் சதி?



எஸ்.எம்.ஜி. எழுதுகிறார்...



சல்மா கவிதைகள்
ஒரு மாலையும்
இன்னொரு மாலை



தலைமறைவு வாழ்க்கை !

றெஜி சிறிவர்த்தன

## அமைச்சர் அஷ்ரஃப்பின் மறைவிற்கு வவுனியா வர்த்தகர்கள் ஏற்பாடு செய்த துக்கக் கடையடைப்பு - முரண்பாட்டில் முடிந்தது...!

அமைச்சர் அஷ்ரஃப்பின் மறைவினையடுத்து தமது துக்கத்தை வெளிப்படுத்த வவுனியா வர்த்தகர்கள் செப்.19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கடையடைப் பொன்றை மேற்கொள்ள வேண்டுமென. வர்த்தக சங்கத்தினரால் முதல்நாளே தெரிவிக்கப்பட்டது. ஆனால் செவ்வாய்க் கிழமை காலை பூட்டியிருந்த கடைகளைத் திறக்குமாறு பொலிசாரும் வற்புறுத்தியுள்ளனர். அத்துடன் முஸ்லீம் வர்த்தகர்கள் மட்டுமே கடைகளை பூட்டியிருந்தனர். வர்த்தக சங்கத்தின் செயலாளரும், உபதலைவரும் வழமைபோல காலை கடைகளைத் திறந்துள்ளனர். இது ஏனைய வர்த்தகர்களிற்கு சினத்தை. உண்டாக்கியுள்ளது. ஆகவே தாமும் வழமை போல கடைகளைத் திறந்துள்ளனர். அதுமட்டுமல்லாது பல கேள்விகளையும் எழுப்பியுள்ளனர். அதாவது குமார்பொன்னம்பலம் அவர்கள் மறைந்த பின்னர் துக்கக் கடையடைப் பொன்றைச் செய்யவில்லை, தொண்டமான் அவர்கள் மறைந்த பின்னர் துக்கக் கடையடைப் பொன்றைச் செய்யவில்லை. அஷ்ரஃப் அவர்கள் மறைந்த பின்னர் மட்டும் எப்படி இந்த முடிவெடுக்கப்பட்டது. அதிலும் உடனடியாக கடையடைப்பதென்பது சாத்தியம். ஆனால் திட்டமிட்டு பரீட்சித்துப் பார்ப்பது போல நான்கு நாட்களிற்குப் பின்னர் ஏன் கடை அடைக்கப்பட வேண்டுமென பல வர்த்தகர்கள் கேள்வியெழுப்பினர். இதில் நியாயம் இருப்பதாக சில முஸ்லீம் வர்த்தகர்களே கூறியுள்ளனர். எது எப்படியிருந்த போதும் திட்டமிட்டு செய்யாது போன இப்படியான செயலால் தமிழ், முஸ்லீம் வர்த்தகர்களிடையே முரண்பாடொன்றை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இவையெல்லாம் இப்படியிருக்க விசயம் பிசகலாக வர்த்தக சங்கச் செயலாளர் தனது பதவியை இராஜினமா செய்து விட்டார். அதற்கு காரணமும் இருக்கலாம் இவர் இந்த நாடாளுமன்றத் தேர்தலில் வன்னியில் தமிழ் காங்கிரஸின் முதன்மை வேட்பாளராகத் தேர்தல் களத்திலும் குதித்துள்ளார்.

o

## திருமலை: தேர்தல்களம்

# பரபரப்பு ஏதுமில்லை!

திருகோணமலையில் தேர்தல் பிரச்சாரங்கள் மிகவும் அமைதியாக நடைபெறுகின்றன. ஒவ்வொரு வேட்பாளர் குழுக்களும் ஏனைய வேட்பாளர் குழுக்களுக்கு எதிராக வசை பாடாமல் தங்கள் தங்கள் பிரச்சாரங்களை மேற்கொள்வது ஆச்சரியப்படத்தக்கதாக இருக்கிறது.

சுவரொட்டிகள் வண்ணமயமாகக் கவர்ச்சிகரமாகத் தெருவெங்கும் காட்சியளிக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன தங்கள் வேட்பாளர்கள் சார்பிலான சுவரொட்டிகளைப் பெரும் பணச்செலவில் தயாரித்துத் தெருவெங்கும் ஒட்டியிருக்கின்றன.

செல்வம் அடைக்கலநாதன் கை உயர்த்தியபடி காட்சியளிக்கும் சிறிய வண்ணச் சுவரொட்டியை டெலோ வெளியிட்டிருக்கிறது. ஈ.பி.டி.பியினர் டக்ளஸ் தேவனந்தாவின் "கட் அவுட்களை" பல இடங்களிலும் நிறுவியிருக்கின்றனர். தமிழர் விடுதலைக் கூட்டணி, சுயேச்சைக் குழுக்கள் என்பவை சிறிய அளவிலான சாதாரண சுவரொட்டிகளை வெளியிட்டுள்ளன. ஒருவரது சுவரொட்டிக்கு மேல் இன்னொருவர் சுவரொட்டி ஒட்டாமல் நேர்த்தியாகச், சுவரொட்டிகளை ஒட்டி ஜனநாயகத்தைக் காப்பாற்றியிருக்கிறார்கள் வேட்பாளர்கள்.

சிறிய கருத்தரங்குகளையும், சந்திப்புக்களையும் ஏற்படுத்தி வாக்காளர்களுடன் தொடர்பு கொள்ளும் முறையைத் தமிழர் தரப்பிலான வேட்பாளர்கள் கைக்கொண்டு வருகிறார்கள். சில வேட்பாளர்கள் வீடுவீடாகச் சென்று தத்தமக்கு வாக்களிக்குமாறு வாக்காளர்களைக் கோரி வருகின்றனர்.

வசைபாடும் துண்டுபிரசுரங்கள் கட்சிகளாலோ சுயோட்சைக் குழுக்களாலோ இதுவரை வெளியிடப்படவில்லை. எனினும், பெயர் குறிப்பிடப்படாத சில அனாமதேயத் துண்டுப்பிரசுரங்கள் இரா. சம்பந்தனையும், சுயேச்சைக் குழு வேட்பாளர்களையும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் சுபாஷினி சித்திரவேலுவையும் தரக் குறைவான வார்த்தைகளால் தாக்கி வெளியிடப்பட்டு வருகின்றதாயினும், அவற்றின் வார்த்தைப் பிரயோகங்களும் ஆதாரமற்ற பழிகளும் மக்களை முகஞ்சுழிக்க வைக்கின்றதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

தமிழ் வேட்பாளர்கள் தரப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் பிரச்சாரங்கள் பரந்த அளவில் காணப்படுகின்றன. எனினும் முன்னரெப்போதும் இல்லாத வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தமது விருப்பு வாக்குகளை உயர்த்திக்

-19ம் பக்கம்


## பிராமனாலன்குளம் ஊடான படைநகர்வு செஞ்சிலுவைக்குழுவின் தலையீட்டால் தடை

வன்னிப் பகுதியிலிருந்து வெளியிடங்களுக்கான மக்கள் போக்குவரத்து பிராமனாலங்குளம் ஊடாகவே நடைபெறுகின்றது. இதற்கு அனைத்துலக செஞ்சிலுவைக் குழுவினர் வழித்துணையாக இருக்கின்றனர். பிராமனாலன்குளம் படையினரின் முன்னணி காவலரண் - விடுதலைப் புலிகளின் முன்னணி காவலரண் ஆகிய பகுதிகளுக்கு இடைப்பட்ட பகுதியில் மக்களின் போக்குவரத்துக்களை கண்காணித்து படையினரதோ, அல்லது விடுதலைப் புலிகளினதோ தலையீடு எதுவும் இல்லாது சுதந்திரமாக மக்கள் பிரயாணத்தை மேற்கொள்ள அனைத்துலக செஞ்சிலுவை குழுவினரின் உதவி இருந்து வருகின்றது.

ஆனால் கடந்த செப். 05 திகதி செவ்வாய்க்கிழமை மக்கள் போக்குவரத்து ஆரம்பித்ததும் பிரயாணம் செய்யும் வீதிக்கு மேற்குப் பக்கமாக படையினர் நகர்வொன்றை மிகவும் இரகசியமாக மேற்கொண்டனர். இதை அவதானித்த செஞ்சிலுவை அதிகாரிகள் மக்கள் போக்குவரத்தை நிறுத்திவிட்டு படை உயரதிகாரிகளை தொடர்பு கொண்டு படைநகர்வை மேற்கொள்வதால் மக்கள் போக்குவரத்து செய்வது பொருத்தப்பாடில்லை எனக் கூறிவிட்டனர்.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத படையதிகாரிகள் மக்கள் போக்குவரத்திற்கு இடையூறு இல்லை. போக்குவரத்து செய்யலாம் எனக்கூறியுள்ளனர். ஆனால் இந்தச் சூழ்நிலையில் மக்கள் போக்குவரத்து சாத்தியமில்லை எனக்கூறிய செஞ்சிலுவை அதிகாரிகள் 150 பேர் பிரயாணம் செய்த நிலையில் தமது வழித்துணையினை நிறுத்த முடிவெடுத்தனர். இதன் போது படையதிகாரிகள் தமது கட்டுப்பாட்டிற்குள்ளிருக்கும் மக்களை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் செல்வதற்கு ஒழுங்கு செய்யுமாறு கேட்டதற்கும். செஞ்சிலுவை அதிகாரிகள் மறுத்து விட்டனர். இதன் பின்னர் படைநடவடிக்கையினை இடைநிறுத்தி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்து வந்த மக்களில் 350 பேரை அடுத்த நாள் புதன் கிழமை தமது கட்டுப்பாட்டிற்குள் எடுப்பதாக எழுத்து மூலம் உறுதிப்படுத்தியதன் பின்னர் படையினரின் கட்டுப்பாட்டிலிருந்த மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் செல்வதற்கு வழித்துணை நின்றனர் செஞ்சிலுவை அதிகாரிகள். செஞ்சிலுவை அதிகாரிகள் கண்காணிப்பிற்காக நின்றதால். பிரயாணிகளுக்கு இடையூறு இல்லாதிருக்க படை நடவடிக்கை மேற்கொள்ளாது தடுக்கப்பட்டது. வழமைக்கு மாறாக புதன்கிழமை மக்கள் உள்வர படையினர் அனுமதியும் கொடுத்தனர். ஆனால் அன்றைய தினம் மக்களுக்கு பாதுகாப்புப் பிரச்சினை இருந்ததாலேயே போக்குவரத்து நடைபெறவில்லை என செஞ்சிலுவை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

o



## இலக்கிய மாநாடா? அரசியல் மாநாடா?

இன்னும் சில தமிழ் இனி 2000 தகவல்கள்.

மாநாட்டின் ஒருங்கமைப்பாளர்களான சரிநிகர், காலச்சுவடு சார்பாக மாநாட்டுத் தீர்மானங்கள் என்ற தலைப்பில் சில தீர்மானங்களை நிறைவேற்றுவது என்றும், கலந்து கொள்ளும் பேராளர்களிடம் அத்தீர்மானத்தில் கையொப்பம் பெறுவதும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தில் இலங்கையின் இனப்பிரச்சினை இலங்கை தமிழ் அகதிகள் பிரச்சினை, இந்தியாவிலுள்ள தமிழ்வழிக் கல்வி பற்றிய பிரச்சினை, தமிழகத்திற்கு தமிழ் நூல்களை அனுப்புவதிலும் தருவிப்பதிலும் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் மரண தண்டனை ஒழிப்பு ஆகிய விடயங்களை உள்ளடக்குவதென்பது தீர்மானிக்கப்பட்டது.

தீர்மானம் தயாராகி பேராளர்களிடம் கையெழுத்துக் கேட்பதற்காக அனுப்பப்பட்டது.

இந்தத் தீர்மானங்கள் பற்றிய இரண்டு விதமான அபிப்பிராயங்கள் வெளி வந்தன. ஒன்று இலங்கையின் மலையக மக்களது பிரச்சினை தொடர்பாக தீர்மானம் எதுவும் கூறவில்லை என்பது, இந்தக் கருத்தை மலையகத்தை சேர்ந்த எழுத்தாளர் ஒருவரும், கனடாவைச் சேர்ந்த ஒரு அன்பரும் தெரிவித்தார்கள்.

இன்னொரு அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. இதை தெரிவித்தவர் ஈழத்தைச் சேர்ந்த ஒரு பேராளர். அதுவும் இலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் இடையிலான உறவு பற்றி நிறைய எழுதிய ஒருவர். பல்கலைக்கழக மட்டத்தைச் சேர்ந்தவர்.

"இது ஒரு அரசியல் மாநாடாக இருந்திருந்தால் இதில் கையொப்பமிடலாம். இலக்கிய மாநாட்டிற்கு வந்து இவ்வறிக்கையில் எப்படிக் கையெழுத்திடுவது"

இரண்டு கேள்விகளுக்கும் அடிப்படை வேறுபாடு இருந்தது. ஒன்று ஒரு அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தை தப்ப விட்டு விட்டீர்கள் என்ற விமர்சனம். இரண்டாவது அரசியலை ஏன் சேர்க்கிறீர்கள் என்ற விமர்சனம்.

ஆம், இலக்கியத்தில் அரசியல் இருக்கக் கூடாது அரசியலிற்கு இலக்கியம் தேவையில்லை என்பவை கடந்த காலம் முழுக்க நாம் காது புளிக்கக் கேட்ட கருத்துக்கள்.

அவை இன்னமும் தொடர்கின்றன!

எப்படியோ தீர்மானம் பின்னர் வெளியிடப்பட்டது-

அரசியலை 'இலக்கியத்தில் கலக்க விரும்பாதவர்களது கையெழுத்து இல்லாமலே!

## சர்ச்சைக்குரிய சர்ச்சை!

மாநாட்டு நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்த மூன்று நாட்களிலும் முக்கியமாக அவதானிக்க கூடியதாக ஒரு விடயமும் இருந்தது. அது தான் சில குறிப்பிட்ட அமர்வுகட்கு நிறைந்த கூட்டம் சேர்ந்தது. அவ்வமர்வுகளில் படிக்கப்பட்ட கட்டுரைக்கு பெரும் மவுசு ஏற்பட்டது. சில கட்டுரைகளில் நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிகள் எடுக்கப்பட்டிருந்தன.

பெண்ணியம், தலித்தியம், மார்க்சியம், தேசிய இனப்பிரச்சினை போன்ற விடயங்கள் தொடர்பான அமர்வுகளின் போது பெருமளவு கூட்டம் அமர்ந்திருந்தது - ஈழத்து அமர்வுகளிலும் கூட. கூட்ட முடிவுகளில் விவாதங்களும் நடந்தன.

இறுதி நாளன்று கைலாசபதி அரங்கில் நடைபெற்ற அமர்வில் தவிர்க்க முடியாமல் இரண்டு அமர்வுக்குரிய விடயங்கள் ஒன்றாகச் சேர்க்கப்பட வேண்டி வந்து விட்டது. ஒன்று பெண்ணிய விமர்சனம் பற்றிய அமர்வு. மற்றையது பத்திரிகைத் துறையும் பெண்களும் பற்றிய அமர்வு. இந்த அமர்விற்கு எழுத்தாளர் அம்பை தலைமை தாங்கினார்.

முடிவில் பார்வையாளர்கள் கருத்துரைப்பதற்கு நேரம் போதாமையால் கலந்துரையாடலை வெளியே நடாத்துவோம் என்று அறிவித்து அமர்வை முடித்துக் கொண்டார் அம்பை அவர்கள்.

அமர்வில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பான காரசாரமான சர்ச்சை ஒன்று மண்டபத்திற்கு வெளியே நடைபெற்றது.

பல்கலைக்கழக றாகிங்கை ஞாபகப்படுத்தும் விதத்திலான இந்தச் சர்ச்சை கட்டுரை படித்தவர்களில் ஒருவரான ரேவதியை நோக்கி குவியப்படுத்தப்பட்டிருந்தது.

கருத்துக்கள் தொடர்பான சர்ச்சைகள் இன்னும் சுமுகமான விதத்தில் நடாத்தப்பட முடியாதா என்ற ஆதங்கத்தை இந்த நிகழ்வு என்னுள் ஏற்படுத்தியது.

மாற்றுக் கருத்துக்களை தனிப்பட்ட தாக்குதல்களாக கருதுவது கருத்துத்தளத்திலான விவாதத்திற்கும் வளர்ச்சிக்கும் ஊறுவிளைவிக்கவே செய்யும் என்பதை இவ்விடயத்தில் குறிப்பிட்டு வைக்க வேண்டும்!

## நானுங்கூட!

இந்தப் பத்தியில் 'ஊதுகுழல்கள்' என்ற தலைப்பில் எழுதியிருந்த குறிப்பு தொடர்பாக கலாநிதி நுஃமான் அவர்களின் கடிதம் சென்ற இதழில் வெளியாகியிருந்தது.

அதிகம் விளங்க தேவையில்லாமலே அவரது கடிதம் முழு விடயங்களையும் தெளிவுபடுத்தி விட்டது. தவறு பிழையான ஒரு தகவலின் அடிப்படையில் நேர்ந்து விட்டது. சுட்டிக்காட்டியதற்கு அவருக்கு நன்றிசொல்லும் அதேவேளை, இத்தவறால் அவருக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகிறேன்.

எவ்வாறாயினும், நுஃமான் அவர்களின் இந்தக் கடிதம் பத்தியில் எழுதப்பட்ட குறிப்பையும், அது தெரிவித்த கருத்தையும் கேள்விக்குள்ளாக்கவில்லை. அவர் இவ்விடயத்தில் சம்பந்தப்படவில்லையெனறு நான் குறிப்பிட்ட தவறை தானே திருத்தியிருக்கின்றார். 'நானும் கூட' என்று அறிவித்த அவரது நேர்மை பாராட்டுக்குரியதே!.

நன்றி - நூலகத்திட்டம்



# தலைகீழாக மாறும் இராணுவச் சமநிலை?

❑ டி.சிவராம்

சாவகச்சேரி - அரியாலை ஆகிய பகுதிகளைக் கைப்பற்ற ஏன் சிறிலங்காப் படையினர் மீண்டும் மீண்டும் கடும் முயற்சி எடுக்கின்றனர்?

தேர்தலுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் ஒரு பெரிய வெற்றியைப் பெற்று அதைப் பற்றி சிங்கள மக்களுக்குப் பறை சாற்றி அரசியல் இலாபம் அடைவதற்காகவே சந்திரிகா அரசு பலத்த இழப்புக்களுக்கு மத்தியிலும் தொடர்ந்து தனது படைகளை புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள அரியாலை, சாவகச்சேரி பகுதிகள் மீது ஏவி விடுகிறது என்பதே இன்று பலரிடம் நிலவும் பொதுவான கருத்து.

இது நம்பக் கூடியதாக பலருக்குத் தோன்றுகிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரை இதுவல்ல உண்மை. சிங்களப் படைகள் கொழும்புத்துறையையோ அல்லது அரியாலையையோ அல்லது இந்த ஞாயிற்றுக்கிழமை அறிவித்ததைப் போல சாவகச்சேரியையோ கைப்பற்றினால் அது பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஒரு குறிப்பிட்டளவு திருப்தியைக் கொடுக்கும் என்பது ஓரளவு உண்மை தான். ஆனால் தேர்தலுக்காகத் தான் சந்திரிகா அரசு பெரும் அழிவுகளையும் பொருட்படுத்தாது தனது படைகளைப் புலிகளின் மீது ஏவி விடுகின்றது என்பது முற்றாகச் சரியானதொரு கூற்றல்ல.



ஒன்று, சிங்கள மக்கள் இன்று யாழ்ப்பாண வெற்றியென்பது ஒரு மாயை என்று கருதுமளவிற்கு வடபுலப் போரைப் பற்றி சலிப்படைந்துள்ளனர். இம்மாதம் 3ம் திகதி கொழும்புத்துறையில் இருந்து அரியாலை வரைக்கும் புலிகள் தம் கட்டுப்பாட்டில் வைத்துள்ள பகுதிகள் மீது சிறிலங்காப் படைகளின் அதிமுக்கிய டிவிஷன்களான 51ம், 53ம் மும்முனை நகர்வை மேற்கொண்ட போது, காயம்பட்ட 956 படையாட்களின் ஆயிரக்கணக்கான உறவினர்களுக்கும் போரின் உண்மை நிலைமை புரியாமல் இல்லை. அத்துடன் சிங்களப் பத்திரிகைகள் போர்க்கள நிலவரங்கள் பற்றி, பட்டும் படாமலும் எழுதி வருகின்ற போதிலும், வாய்மூலமாக வடபுலச் சண்டைகளில் படைகள் தடுமாறுகின்றன, பெரும் இழப்புக்களைச் சந்திக்கின்றன என்கின்ற உண்மைகள் சிங்கள மக்கள் மத்தியில் பரவுவதை யாராலும் தடுக்க முடியாதுள்ளது. இதைச் சந்திரிகா அரசு அறியாமல் இல்லை. யாழ்ப்பாணத்தில் புலிகளுடன் சண்டையிட்டு வெற்றி பெற்றோம் என்ற பிரச்சாரம் இனிச் சிங்கள மக்களிடையில் எடுபடாது என்பதை சந்திரிகா அரசு இன்று ஓரளவு உணர்ந்து கொண்டுள்ளது. ஆயின், படையினர் மீண்டும் மீண்டும் பல இழப்புக்களையும் சகித்துக் கொண்டு குடாநாட்டிலுள்ள புலிகளின் தளப் பகுதிகள் மீது படையெடுக்க முற்படுவதன் நோக்கம் என்ன என்ற கேள்வி மீண்டும் நம் முன் தோன்றுகிறது. இதற்கான விடையை நான் முன்னர் எழுதியுள்ள கட்டுரையில் விளக்கியுள்ள போதும் தற்போது சில மேலதிகமான தகவல்களை எழுதலாமென்று எண்ணுகின்றேன். நான் ஏலவே முன்வைத்த விளக்கம் சிறிலங்காப் படைகள் வடபுலத்தில் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினை பற்றியது. அதாவது சிறிலங்காப் படைகளின் போர்வலு நூற்றுக்கு 70 வீதம் குடாநாட்டுக்குள்ளே குவிக்கப்பட்டிருக்கின்றது. ஓயாத அலைகள் மூன்று படை நடவடிக்கை வன்னியிலும், குடாநாட்டின் தென்மராட்சிப் பகுதியிலும் முன்னேறிச் சென்றதைப் போல் வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளினுள்ளும் நகரத் தொடங்குமாயின் சிறீலங்காப் படையினரின் போர்வலு 30 சதவீதத்தை விடக் குறைந்து விடும். தமிழீழப் போரின் வெற்றிவாயிலைப் புலிகள் அடைந்திடுவர் எனும் உண்மைகளை இன்று சந்திரிகா அரசும் அதன் புதிய படைத் தலைமையும் ஓரளவு உணரத் தலைப்பட்டுள்ளன. இங்கனம் புலிகளின் ஓயாத அலைகள் மூன்று படை நடவடிக்கை மீண்டும் தொடங்குகையில் குடாநாட்டில் சிக்கப் போகும் 51,52,53,54 ஆகிய நான்கு டிவிஷன்களைச் சேர்ந்த 30 ஆயிரத்துக்கு மேற்பட்ட படையாட்களை ஏன் இந்தியா வந்தால் கூடப் பாதுகாப்பாக வெளியெடுத்துக் கொண்டுவர முடியாதென்பதை நான் ஏலவே விளக்கி ஒரு கட்டுரை வரைந்துள்ளேன். தற்போதுள்ள பிரச்சினை படையாட்கள் வெளியெடுப்பு என்பதை விடச் சிக்கலானதாகும். புலிகளினுடைய எறிகணை வீச்சு வலுவும் முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்துள்ளமையாலும், அவர்களுடைய அரண்கள், கண்ணிவெடி வயல்கள் ஆகியவற்றின் அழிவாற்றல் பெருகியுள்ளதாலும், இன்று ஒரு சிறு படைநகர்வை மேற்கொள்ளுவதாயினும் பெரும் பீரங்கிப் பலத்தைப் பிரயோகிக்க வேண்டியுள்ளது.

உதாரணமாக இம்மாதம் 3ம் திகதி நடந்த சிறிலங்காப் படைகளின் முன்நகர்வின் போது சுடப்பட்ட பல்குழல் எறிகணைகளின் தொகை 640க்கு மேல் எனக் கூறப்படுகிறது. (இதில் பாகிஸ்தானிடம் வாங்கிய பல்குழல் எறிகணை வீசிகள் எட்டுக்கும் உரிய ரொக்கெட்டுக்களின் விலை ஒன்றுக்கு 800 அமெரிக்க டொலர்களாகும். இது ஊழலால் வந்த வினை. செக்கோஸ்லொவாக்கியாவிடமிருந்து வாங்கிய இரு பல்குழல் எறிகணை வீசிகளின் ரொக்கெட்டுக்களின் விலை ஒன்றுக்கு 350 அமெரிக்க டொலர்களாகும்.) எனவே பல் குழல் எறிகணை வீசிகளின் ரொக்கெட்டுக்களை ஆயிரக்கணக்கில் யாழ்.குடாநாட்டின் முக்கிய தளங்களான பலாலி, அச்செழு ஆகிய இடங்களில் குவிக்க வேண்டியுள்ளது. இத்துடன் கனரக பீரங்கிகளுக்கான குண்டுகளையும் பல்லாயிரக்கணக்கில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு சேமித்து வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இன்று சிறிலங்காப் படைகளுக்குண்டு. ஜெயசிக்குறு படை நடவடிக்கை புலிகளின் கடும் எதிர்ப்புக்களைச் சந்திக்கத் தொடங்கிய காலகட்டத்தில் இருந்து சிறிலங்காப் படையின் ஆட்லறிப் பிரிவினர் தமது சூட்டுச் செறிவை படிப்படியாக அதிகரிக்க வந்துள்ளனர். அதாவது ஒரு குறியை நோக்கி ஒரு நேர எல்லையினுள் வீசப்படும் கனரகப் பீரங்கிக் குண்டுகள், பாரமோட்டர் எறிகணைகள் என்பவற்றின் எண்ணிக்கையையே நாம் இங்கு சூட்டுச்செறிவு என்கிறோம். சில வருடங்களின் முன்னர் சிறிலங்காப் படைகள் புலிகளின் புவியியல் இலக்கொன்றை நோக்கி நகருகையில் 30 தொடக்கம் 40 பீரங்கிக் குண்டுகளை வீசினால் போதும் என்ற நிலை மாறி இன்று போரியலாளரால் ஆங்கிலத்தில் பராஜ் (barrage) என்று அழைக்கப்படும் சூட்டுச் செறிவு மிகை உச்சமான பார எறிகணை வீசி மற்றும் கனரக பீரங்கித் தாக்குதல்களை மேற்கொள்ளுவதை எவ்வகையிலும் தவிர்க்க முடியாத ஒரு சிக்கல் தோன்றியுள்ளது.

வழமையாக இவ்வாறு சூட்டுச் செறிவு மிகை உச்சநிலையை அடைந்திடும் போர் முனைகளில் இருந்து பாதுகாப்பான தூரத்தில் பார எறிகணைகள், கனரக பீரங்கிக் குண்டுகள் என்பன பெருந்தொகையாகச் சேமித்து வைத்து விநியோகிப்பதற்கான களஞ்சியங்கள் அமைந்திருக்கும். (இவற்றை ஆங்கிலத்தில் Forward Supply Base என்பர்) யாழ்.குடாநாட்டைப் பொறுத்த வரை களமுனையில் இருந்து பாதுகாப்பான தூரத்தில் அமைந்துள்ள இடம் எதுவுமில்லை. தீவுப் பகுதியில் இவ்வாறான களஞ்சியங்களை அமைத்துப் பாதுகாப்பது சாத்தியமல்ல. கடற்புலிகளின் அச்சுறுத்தலே இதன் பிரதான காரணமாகும். எனவே ஆபத்தையும் கணக்கிலெடாது யாழ்ப்பாணக் குடாநாட்டின் வலிகாமப் பகுதியில் மேற்படி களஞ்சியங்களை சிறிலங்காப் படையினர் விரிவாக்க வேண்டிய நிலை ஆனையிறவின் வீழ்ச்சிக்குப் பின்னர் ஏற்பட்டுள்ளது. இதில் முக்கியமான சிக்கல் என்னவெனில் பார எறிகணைகளும், கனரகப் பீரங்கிக் குண்டுகளும் அடிக்கடி இடமாற்றப் படக்கூடிய வகையில் பெட்டியடைப்பு (pack) செய்யப்படுவதில்லை. ஒரு இடத்திலேயே நீண்டகாலம் களஞ்சியப் படுத்துவதற்குரிய முறையிலேயே அவை உற்பத்தி செய்யப்படும் தொழிற்சாலைகளில் பெட்டியடைப்பு செய்யப்படுகின்றன. எனவே பல்லாயிரக் கணக்கில் குடாநாட்டில் தற்போது குவிக்கப்பட்டுள்ள பார எறிகணைகள், பல்குழல் எறிகணை வீச்சுகளுக்குரிய ரொக்கெட்டுகள் மற்றும் கனரக பீரங்கிக் குண்டுகள் என்பவற்றை இனி இடம் மாற்ற முடியாது. இடமாற்ற முடியாதெனில் யாழ்ப்பாணக் குடாநாட்டினுள் இனியும் புலிகள் முன்னேறி வருவதை எப்படியாவது தடுத்தேயாக



வேண்டும். தடுக்காவிடில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள அனைத்தும் புலிகளின் கையில் போய் விடும். படையாட்களின் வெளியெடுப்பு என்ற ஒரு சிக்கல் மீண்டும் குடாநாட்டில் தோன்றி அது சாத்தியமானால் கூட இப்பார எறிகணைகள் ராக்கெட்டுக்கள், கனரகப் பீரங்கிக் குண்டுகள் என்பவற்றை எவ்வகையிலும் மீட்டுக் கொண்டு வரமுடியாது. அவை பெட்டியடைப்பு செய்யப்பட்ட முறை அப்படி. அதுமட்டுமல்லாது குடாநாட்டின் தனிமைப்படுத்தப்பட்ட நிலை இதை மேலும் சிக்கலாக்கியுள்ளது. இரண்டாம் உலகப்போரின் போது பிரான்ஸ் நாட்டிலுள்ள டன்கேக் (Dunkirk) என்னுமிடத்தில் இருந்து பிரிட்டிஷ் படைகள் வெளியெடுக்கப்பட வேண்டி ஏற்பட்ட போதும், முதலாம் உலகப்போரில் வெர்டுன் (Verdun) என்ற இடத்தில் நடைபெற்ற பெரும் பீரங்கிச் சண்டைகளின் முடிவிலும் அந்தக் களமுனைகளின் பின்புலக் களஞ்சியங்களில் குவிக்கப்பட்டிருந்த பல்லாயிரக்கணக்கான பீரங்கித் தோட்டாக்களும், பார எறிகணைகளும் அங்கேயே கைவிடப்பட்டன. குடாநாட்டினுள் இன்னொரு பெரும் படையெடுப்பிற்குப் புலிகள் தயார் செய்வதற்கான தளப் பிரதேசங்களாகவே தென்மராட்சிப் பகுதியும் அரியாலை-சாவகச்சேரி-தனங்கிளப்புப் பிராந்தியமும் அமைந்துள்ளன. தமது கனரகப் பீரங்கிகளின் சூட்டெல்லைக்குள் குடாநாட்டின் சிறிலங்காப் படைத்தளப் பகுதிகள் வரக்கூடிய முறையிலேயே ஓயாத அலைகள் மூன்றின் புவியியற் குறிக்கோள் அமைந்திருந்தது என்பதுவும் அறியப்படாததல்ல.

இதனால் உண்டாகக் கூடிய பல்வேறு ஆபத்துக்களில் நான் இங்கு ஆராய்ந்துள்ள விடயமும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. முந்தித் தாக்குதலே சிறந்த தற்காப்பு என்ற கோட்பாட்டிற்கிணங்கவே பலத்த இழப்புக்களுக்கிடையிலும் சிறிலங்காப் படையினர் மீண்டும் மீண்டும் படை நடவடிக்கைகளில் இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். ஆனால், இந்த முன்னேற்ற முயற்சிகளுக்கு முன்னெப்போதுமில்லாத அளவிற்கு ரொக்கெட்டுகள், பார எறிகணைகள், கனரக பீரங்கித் தோட்டாக்கள் என பல்லாயிரக்கணக்கில் தேவைப்படுகின்றன. இதற்காகப் பாதுகாப்பான பின்புலக் களஞ்சியப்படுத்தல் வசதியற்ற யாழ்ப்பாணத்தில், இருபெரும் நாடுகளுக்கிடையிலான போர்களின் போது நடைபெறுகின்ற அளவிற்கு, பொருட்குவிப்பைச் செய்ய வேண்டிய கட்டாயம் சிறிலங்கா அரசுக்கு. அதேவேளை தப்பித்தவறியேனும் புலிகள் மீண்டும் முன்னேறிவிட்டால் இலங்கைத் தீவின் இராணுவச் சமநிலை தலைகீழாக மாறிவிடும் என்னும் பயங்கரமும் மறுபக்கத்தில் உண்டு.

எல்லாமே நூலிழையில் உள்ளன யாழ் குடாநாட்டில்.

# நாட்டின் ஒரு பகுதி ஆட்சி பிரபாகரனிடம்!

**பொதுத்தேர்தலில் பிரதான அரசியல் கட்சிகளோடு புதிதாக ஆரம்பமான இனவாதக் கட்சிகளும் களத்தில் குறித்துள்ளன. நாட்டின் இனப்பிரச்சினை குறித்தும், யுத்தம் குறித்தும் அவை தமது கொள்கை பரப்புரையை ஊடகங்களில் தொடர்ச்சியாக நிகழ்த்தி வருகின்றன. இந்த வகையில் இனவாதக் கட்சியாகவும், கட்சி உருவாகி 140 நாட்களில் அதிகப்பிரபலத்தைப் பெற்றுள்ள கட்சியாகவும் திகழும் சிஹல உறுமயவின் தலைவர் எஸ்.எல். குணசேகரவின் நோர்காணல் கீழே தரப்படுகிறது. சிஹல உறுமய சிறுபான்மை மக்கள் இனப்பிரச்சினை, யுத்தம் என்பன தொடர்பாக எவ்வாறான நிலைப்பாட்டினை கொண்டுள்ளது என்பதனை இந்நேர்காணல் புலப்படுத்துகிறது.**

**சிஹல உறுமய பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான காரணத்தை விளக்குவீர்களா?**

மாறி மாறி ஆட்சிக்கு வரும் கட்சிகள் இரண்டும் நாட்டுக்கு என்ன அநியாயம் செய்தாலும் சிங்களவர்களின் வாக்குகள் தமக்குத் தான் என எண்ணிக் கொள்கின்றன. சிங்களவர்களின் வாக்குகளினால் வந்த இவர்கள் சிங்களவர்களை தாரை வார்த்து விட்டு தமிழ், முஸ்லிம் இனவாதக் கட்சிகளை ஆதரிக்கின்றனர். இதன்படி இந்நாட்டு சிங்களவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து சிறுபான்மை இனவாதிகளுக்கு அடிபணியாது வாழும் சூழலை ஏற்படுத்த வேண்டும் என்பது எமது நோக்கமாகும்.

**சிறுபான்மைக் கட்சிகளினால் மேற்கொள்ளப்படும் சிங்கள விரோத செயற்பாடுகளுக்கு உதாரணம் ஏதாவது கூற முடியுமா?**

அஷ்ரஃப்பின் புனர்நிர்மாண புனர்வாழ்வு அமைச்சு, 1994ல் அம்பாறை முஸ்லிம்களுக்கு 450 லட்ச ரூபாய்களையும், தமிழ் மக்களுக்காக 113 லட்ச ரூபாய்களையும் செலவழித்தது. ஆனால், பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்ட சிங்களவர்களுக்கு 33 லட்ச ரூபாய்களே செலவளிக்கப்பப்பட்டுள்ளன. இது ஒரு சிறந்த உதாரணமாகும்.

**தேசியப் பிரச்சினை இந்நாட்டில் இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்கின்றீர்களா? யுத்தத்தை நிறுத்தி சமாதானம் காண தீர்வுகள் ஏதும் உங்கள் கட்சியிடம் உள்ளனவா?**

தேசியப் பிரச்சினை என்று இந்நாட்டில் சிலர் புலிப் பயங்கரவாதத்தையே குறிப்பிடுகின்றனர். இதைத் தவிர எத்தனை பல தேசியப் பிரச்சினைகள் இந்நாட்டில் உள்ளன?

அத்துடன் அரசியல் தீர்வு என்பது புலிப்பயங்கரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி இணக்கத்திற்கு வருதல் ஆகும். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தி எந்த இணக்கப்பாட்டிற்கும் வர முடியாதென்பது ஏற்கனவே நிரூபிக்கப்பட்டாயிற்று. பிரபாகரன் இன்று நாட்டில் ஒரு பகுதியை ஆட்சி செய்யும் நபர். அவரைப் போன்ற நலன்களைப் பெறும் நபர் உலகத்தில் வேறு எவரும் இல்லை எனலாம்.

சிங்களவர்களின் அழுத்தங்களில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்கப் பிரபாகரன் போராடுகிறாராம். அவ்வாறாயின் அவர் முஸ்லிம்களை வடக்கில் இருந்து வெளியேற்றியதும் முஸ்லிம்களைக் கொல்வதும் ஏன்?


இவ்வாறான ஒரு நபருடன் பேச்சுவார்த்தை நடாத்தினால் அவர் ஆளும் அப்பகுதிகளை அவரிடமே ஒப்படைக்க நேரிடும். எனினும், பயங்கரவாதத்தை போரினால் அழித்து ஒழிப்பதே இப்பொழுது செய்ய வேண்டியுள்ளது.

**சிஹல உறுமய எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டால், மீண்டும் தற்போதுள்ள படையினருடன் சேர்ந்து போர் செய்ய வேண்டிய நிலை ஏற்படும் அல்லவா?**

பிரபாகரன் நிர்வாகம் செய்யும் பிரதேசங்களுக்கு உணவு, மருந்து வகைகள் உட்பட அத்தியாவசியப் பொருட்கள் அனுப்புதலை உடனடியாக நிறுத்த வேண்டும். எதிரிகளுக்கு உதவி செய்து கொண்டே அவர்களுடன் போரிட முடியாது. இவற்றை தமிழ் மக்களுக்கு அனுப்புவதாக அரசாங்கத்தினால் கூறிக் கொண்டிருக்க இயலாது. இதன்படி புலிகளின் நிர்வாகத்திலிருந்து மீட்டு கொழும்பு அரசாங்கத்தின் நிர்வாகத்திற்குட்படும் பிரதேசங்களுக்கு மக்களை அழைத்து வருதலையே செய்யவேண்டியுள்ளது.

புலிகளின் நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசங்களில் அரச ஊழியர்கள் அவர்களது ஆணைகளையே பின்பற்றுகின்றனர். ஆனால், அவர்களுக்கு ஊதியம் கொடுப்பது நாமே.

நாம் ஆட்சிக்கு வந்தால் எந்த வேறுபாடுமின்றி திறமைசாலிகளுக்கு படையில் உயர்பதவியை அளித்து யுத்தம் ஒரு தேசியத் தேவை என்ற நிலைமைக்கு மாற்றி போரைச் சிறப்பாக நடத்துவோம். இன்று யுத்தம் என்ற பேரில் பணம்



சம்பாதிக்கும் தொழிலே மேற்கொள்ளப்படுகின்றது.

**இந்நாட்டில் தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கின்றது என நீங்கள் கேள்வி எழுப்புகிறீர்கள். ஆனால் நீங்கள் சிங்களவர்களுக்காக குரல் கொடுப்பது அவர்களின் எந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக..?**

ஸ்ரீபாத தொழினுட்ப கல்வி நிறுவனத்திற்குள் அனுமதிக்கப்பட இந்தியத் தமிழர்களுக்கு சாதாரண புள்ளிகளே தேவைப்படுகின்றது. ஆனால், சிங்களவர்களுக்கு அப்படியில்லை. சிங்களவர்கள் தம் நாட்டில் முகம் கொடுக்கும் இவ்வாறான வேறுபாடுகளை என்னவென்பது?

இந்திய மற்றும் சிங்களத் தொழிலாளர்கள் ஒரே தோட்டத்தில் ஒன்றாக வேலை செய்தாலும் ஒரே அளவு ஊதியம் பெற்றாலும், தமிழர்களுக்குக் கிடைக்கும் வரப்பிரசாதங்கள் சிங்களத் தொழிலாளர்களுக்குக் கிடைக்காதது நீதியானதா?


எல்லைக் கிராமங்களில் வாழும் சிங்களவர்களைப் பற்றி அரசாங்கம் கவலைப்படுவதே இல்லை. உதாரணமாக வெலிஓய மக்களின் பாதுகாப்புக்கு பங்கர் தேவை. அவற்றுக்கு 75 லட்சம் செலவாகும். இதைச் செய்யாத அரசாங்கம் கடந்த ஆண்டு வடமேல் மாகாண தமிழ் முஸ்லிம் பாடசாலைகளுக்கு 185 லட்சத்தை புனர்நிர்மான நிதியிலிருந்து செலவளித்துள்ளது.

**சிங்களவர்கள் குறித்து உங்களுக்கு உண்மையான அக்கறையிருப்பின் நீங்கள் பூமிபுத்திர கட்சியுடன் இணைந்து போட்டியிட்டிருக்கலாம் அல்லவா?**

இது குறித்து நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் அவர்களது தவறுகளினாலேயே தோல்வியுற்றது. நாம் பலமாக உள்ள பிரதேசங்களில் பூமிபுத்ர சின்னத்தில் போட்டியிட வேண்டுமென ஹரிஸ்சந்திர விஜயதுங்க கோரிக்கை விடுத்தார். நாம் அக் கோரிக்கையை மறுதலித்தோம். தினேஷ் குணவர்த்தன அவரது கட்சி சின்னத்தில் கொழும்பில் போட்டியிடவேண்டுமென கூறினார்.

விஜயதுங்க அவர்கள், சிங்கள பௌத்தர்களை ஆள சிங்கள பௌத்தர்களே வேண்டுமெனக் கூறினார். நாட்டைப் பிரிக்கும் நிலைப்பாட்டிலேயே அவர் உள்ளார். பிரிந்திருக்கும் சிங்களவர்களை ஒன்று சேர்க்க நாம் முனையும் போது மதத்தின் பேரில் அவர்களைப் பிரித்தாள விஜயதுங்க முயற்சிக்கிறார். நாம் இவற்றை வன்மையாக எதிர்த்தோம்.

**நன்றி: லங்காதீப செப். 18**



# விபத்து அல்ல அரசியல் சதி!

செய்திகளைக் கவனிக்கும் ஒருவருக்கு முதலில் இதை விபத்து என்று கருதிய பலரும் இப்போது அதை ஒரு குண்டு வெடிப்புத் தான் என்ற முடிவிலிருந்து பேசுவது தெரியும்.

அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் பயணம் செய்த ஹெலி அரநாயக்க பகுதியில் விபத்துக்குள்ளான விடயம் குறித்துப் பல ஊகங்கள் கிளம்பியுள்ளன. பரஸ்பரம் ஒன்றுக்கொன்று முரணான விதத்தில் வெளிவரும் இச்செய்திகள், தகவல்கள் ஒரு சதித் திட்டம் தான் இவ்விபத்திற்குக் காரணமா என்ற சந்தேகத்தை வலியுறுத்துவதாக உள்ளன.

விமானப் படைக்குச் சொந்தமான எம். ஐ. 17 ரக ஹெலிகொப்டர் அரநாயக்க ஊறாகந்த மலைத்தொடரில் மோதி வெடித்துச் சிதறி விழுந்ததாகக் கூறப்படுகின்றது. அதற்குச் சான்று பகரும் விதமாக ஹெலியின் பாகங்கள் எரிந்து சாம்பராகியுள்ளன. எனினும், கடந்த சனி இடம் பெற்ற விபத்தின் பின் இன்று வரை விபத்துக் குறித்துப் பல ஐயப்பாடுகள் நிலவுவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

விபத்து நடந்ததைக் கண்ணுற்ற மக்கள் தெரிவித்த கருத்தின்படி, விபத்து நடந்து ஹெலி விழுந்த பின் சுமார் 10 - 12 தடவைகள் வெடிப்பு நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. மேலும் வெடிப்புக்கள் நிகழும் என்ற சந்தேகத்தில் மக்கள் வெகு தூரத்தில் நின்று சம்பவத்தை அவதானித்ததாகத் தெரிய வருகின்றது.

எனினும், செப். 19 அன்று இரசாயனப் பகுப்பாய்வாளர்கள், விமானப் படை விசாரணை அதிகாரிகள், அரநாயக்க பொலிஸ் விசாரணைக் குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளில் வெடிப்பு நிகழவில்லை என உறுதிப்படுத்தியுள்ளனர். இது முரண்பாடான கருத்தைத் தோற்றுவிப்பதாக உள்ளது.

விபத்து நிகழ முன் கொழும்பு பம்பலப்பிட்டி பொலிஸ் மைதானத்திலிருந்து ஹெலி புறப்பட்டுச் சுமார் 40 நிமிடங்களுக்குப் பின் விமானி கட்டுப்பாட்டறைக்குப் பிரச்சினையின்றிப் பயணித்துக் கொண்டிருப்பதாக அறிவித்துள்ளார். கட்டுநாயக்க விமானக் கட்டுப்பாட்டறைக்கு அவர், ஹெலி 1,500அடி உயரத்தில் பறந்து கொண்டிருப்பதாகவும், 15 நிமிடங்களுக்குள் கண்டியை அடையலாம் எனவும், பயணம் சுமுகமாக நடைபெறுகின்றது எனவும் தெரிவித்துள்ளார். காலநிலை சுமுகமாக இருப்பதால் காட்சித் திரை தெளிவாக இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அப்படியிருக்கத் திடீரென்று விமானி இதை அறிவித்து ஒரு சில நிமிடங்களில் உலங்கு வானூர்தி மலையில் மோதியது என்று கூறுவதை நம்புவது எப்படி ? தொடர்பு சாதனங்களின் தொடர்ச்சியான

அமைச்சர் பௌசி முதல் ஜனாதிபதி மற்றும் பல அரசியல் தலைவர்களும் இவை திட்டமிட்ட சதியாக இருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகக் கூறியதை அடுத்து, இக் குண்டு வெடிப்புக்கு எப்படியாவது புலிகளைச் சம்பந்தப்படுத்த முடியுமா என்று முயலும் போக்கும் தெரிகிறது. அஷ்ரஃப் அவர்களுடன் பயணித்த அம்பாறை வேட்பாளர், கதிர்காமத்தம்பியுடன் வந்த ஒரு ஆண் குறித்துச் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. ஏதேனும் சதித் திட்டத்தைத் தான் அவர் நிறைவேற்ற அஷ்ரஃப்புடன் புறப்பட்டாரா என்றும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. 14 பேர் பயணம்செய்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்ற போதிலும், சிதைவுகளுக்கிடையே 13 சடலங்களை மட்டுமே மீட்க முடிந்துள்ளது.

இவ்வாறான சம்பவம் குறித்தான முரண்பாடுகள் காணப்படுகின்றன. அத்துடன் அஷ்ரஃப் அவர்கள் வெள்ளிக்கிழமை தனது பயணத்தைத் திட்டமிட்டுப் பின்னர், சனிக்கிழமை சென்றதும், ஹெலியில் ஏற்றப்பட்ட நபர்கள் குறித்தான விபரங்கள் திரட்டப்படாமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

எவ்வாறாயினும், இவ்விபத்து, எதிர்பாராமல் நடந்ததற்கான சாத்தியங்கள் அருகி வருகின்றமையானது ஒரு சதித் திட்டத்தின் பிரதிபலிப்பையே வெளிக்காட்டுகின்றது எனலாம். விமான விபத்தின் போது எந்தப் பாதிப்பையும் அடையாத கறுப்புப் பெட்டி இதுவரையில் கண்டுபிடிக்கப்படாமை இங்கு முக்கியமான நிகழ்வாகக் காணப்படுகின்றது.

இவ்விபத்துக் குறித்தும், விபத்து நடைபெறுவதற்கு முன்னர் அஷ்ரஃப், கொழும்பு அரசியலில் வகித்த பங்குகளும் மீட்டிப் பார்க்கப்பட வேண்டியனவாகும்.

எவ்வாறாயினும், விமானப் படைக்குச் சொந்தமான ரஷ்யத் தயாரிப்பு எம். ஐ. 17 ரக ஹெலியில் வெடி மருந்துகள், ஆயுதங்கள் கொண்டு செல்வதற்கு உபயோகிக்கப்படுகின்றது என்பது நாடறிந்த விடயம்.

மலையில் மோதி, வெடித்துச் சிதறும் அளவுக்கு விமானி கவனமின்றி இருந்ததும், ஹெலியில் ஏறுவதற்கு முன் அஷ்ரஃப் அவர்கள் கூறியதாகத் தெரிவிக்கப்படும் வாசகமும் உள்ளகச் சதியின் சாத்தியப்பாட்டினைத் தசமக் கணக்கில் அதிகப்படுத்துகின்றது.

"வாசகம் :- இந்தப் பயணம் முடிந்து வந்தவுடன், பொ. ஐ. முவுக்கும், ஸ்ரீ. ல. மு. காவுக்கும் இடையிலான தொடர்பைத் துண்டிக்க வேண்டும்."

**— அமுதினி**

நன்றி - நூலகத்திட்டம்



பொ.ஐ.முவின் தேசியப் பட்டியலில் முன்னாள் வட- கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் குறித்து எழுந்த சர்ச்சை படிப்பவர்களுக்கு சுவாரஷ்யமாக இருக்கக்கூடும்.

1990இல் ஈழப்பிரகடனம் செய்த ஒருவரை பொ.ஐ.மு. எப்படி தேசியப்பட்டியலில் சேர்த்துக்கொண்டது என்பது தொடர்பாக ஐ.தே.க தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கேள்வி

ஆனால், இவற்றை வெறும் தேர்தல் கால பேச்சுக்கள் என்று ஒதுக்கி விடலாம் என்று யாரும் நினைக்கக்கூடும் என்றாலும் அந்தக் கூற்றுகளுக்குப் பின்னால் உள்ளது திட்டவட்டமான பேரினவாத உணர்வு என்பதை மறுக்க முடியாது.

சந்திரிகாவிடமும் சரி, ரணிலிடமும் சரி தமிழ் அரசியல் தலைமைகளுடன் கூட்டுச் சேர்வது அல்லது உறவை ஏற்படுத்திக்-கொள்வது என்ற முடிவு ஒன்றும் தமிழ் மக்களது அரசியல் பிரச்சினை தொடர்பான ஒரு தீர்வை காண்பதற்கான

பாராளுமன்றத்தில், தமிழ் மக்கள் சார்பான ஒருவராக வெளியிலே காட்டக்கூடிய ஆனால், தனக்கு விசுவசமாக இயங்கக்கூடிய ஒருவர் தேவைப்பட்டதன் காரணமாகவே வரதரை அவர் சேர்த்துக் கொண்டுள்ளார். லக்ஷ்மன் கதிர்காமர் போன்ற ஒரு தமிழரோ, தமிழ்ப் பிரதேசம் என்ன நிறமென்றே தெரியாத ஒருவரை தன்னுடன் வைத்துக் கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினையில் தனக்கு அக்கறை இருப்பதாக நீண்ட காலம் வெளிக்காட்ட முடியாது. அதற்கு மிகவும் பொருத்தமானவரும் தமக்கு விசுவாசமாக நடக்கக்


தேசியப்பட்டியல் அந்தஸ்துக்கு வளர்ந்து விட்டிருக்கிறது.

எப்படியோ பாராளுமன்ற அரசியல் என்ற சகதிக்குள் மிகவும் ஆழமாகத் தன் கால்களைப் புதைத்துக் கொண்டுள்ள அவர் ஒருவர் மாறி ஒருவராக யாரை-யாவது பற்றிக் கொள்ளாமல் தன்னைப் பேண முடியாத பரிதாப நிலைக்கு வந்து சேர்ந்து விட்டுள்-ளார்.


வரதருக்கு மட்டுமல்ல, இன்று தேர்தல் களத்தில் குதித்துள்ள அனைத்துத் தமிழ்க் கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ள பரிதாப நிலையும் இது தான்.

நிறுத்தி வெற்றி பெற்று விடும் என்ற காரணத்தைத் தவிர அவர்களுக்குத் தம் பங்கு பற்றல் குறித்து விளக்க வேறு எதுவும் அவர்களிடம் இல்லை.

அரசாங்கக் கட்சிகள் வேறு யாரையாவது நியமித்தால் என்ன நடந்து விடும்? இந்த 'வேறு யாராவது வந்து விடுவார்கள்' என்ற நியாயப்படுத்தல் உண்மையில் மக்களை திரும்பத் திரும்ப பாராளுமன்ற அரசியல் மூலம் நிறையப் 'புடுங்கலாம்' என்ற மாயைக்குள் வைத்திருக்கிற ஒரு விடயமே அன்றி வேறல்ல. தமிழ் மக்களை இந்தக் கட்சிகளோ.



சித்தார்த்தன்




சுரேஷ்



வரதராஜப்பெருமாள்



ஆனந்தசங்கரி



டக்ளஸ்

# அநியாயத்துக்கும் மோசடிக்கும் துணை!

எழுப்பியிருந்தார். ஜனாதிபதி இந்தக் கேள்விக்கு எந்தப் பதிலும் அளிக்கவில்லை. பதிலாக தன்னுடன் விவாதத்திற்கு வருமாறு கேட்டார் வரதராஜப் பெருமாள்.

ரணிலிடமிருந்து இதற்கு உடனடியாக பதில் வந்தது.

"நான் பொம்மைகளுடன் பேச விரும்பவில்லை. பொம்மை-யாட்டியுடனேயே பேச விரும்புகிறேன்."

மேலோட்டமாகப் பார்த்தால் இந்தச் சர்ச்சை வெறும் கேலிப்-பேச்சுப் போலவும், மெல்லிய சிரிப்பொன்றுடன் ஒதுக்கிவிடக் கூடிய ஒரு விடயம் போலவும் தோன்றக் கூடும். ஆனால், சற்று நிதானமாகக் கவனித்தால் ரணிலின் இந்தக் கூற்று அத்துணை இலேசாக தட்டிக் கழித்து விடக் கூடிய ஒன்றல்ல என்பது புரியும்.

"புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தாமல் இனப்பிரச்சினைக்கோ, யுத்தத்துக்கோ ஒருபோதும் தீர்வு காணமுடியாது. எவ்வளவு காலம் கடந்தாலும் தீர்வு இல்லை" என்று தனது தேர்தல் பிரசார மேடைகளில் அடித்துக் கூறிய ரணில் அதே வாயால் தான் வரதராஜப் பெருமாளை தேசியப் பட்டியலில் நிறுத்தியபடி ஐக்கிய இலங்கையை கட்டியெழுப்புவதாக கூறுவது கேலிக்கூத்து என்று அறிவித்திருக்கின்றார்.

புலிகளுடன் ரணிலுக்கு கள்ளக்கூட்டு இருப்பதாகவும் தேர்தலில் ரணிலின் வெற்றிக்கு புலிகள் முயல்கிறார்கள் என்றும், குற்றம் சுமத்தி வரும் ஜனாதிபதிக்கு பதிலடி கொடுக்கும் நோக்குடனேயே ரணில் இப்படி அறிவித்திருக்கிறார்

அக்கறையிலிருந்து எடுக்கப்படுவதல்ல, மாறாக தம்முடைய அரசியல் லாபத்துக்காக, தமது வாக்குப் பெட்டிகளில் தமிழ் வாக்குகளையும் சேர்த்துக் கொள்வதற்காக செய்யப்படுவதே என்பதை இந்தப் பொம்மை - புலி விவகாரம் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

சிங்கள இனவாத சக்திகளை சார்ந்து நின்று அவர்களின் வாக்குகளைப் பெற விரும்பும் இவர்கள் அதற்காக ஒருவரை ஒருவர் தமிழர்கட்கு சார்பானவர் என்று குற்றம் சுமத்துவர். அதேவேளை இரு தரப்பாரும் தம்மைத் தமிழர் பிரச்சினையில் அக்கறை உள்ளவராகக் காட்டிக் கொள்ள தமிழ் அரசியல்வாதி-களுடன் உறவையும் மேற்கொள்வர்.

வரதராஜப் பெருமாளின் புகழ்பெற்ற ஈழப்பிரகடனம் என்ற கேலிக்கூத்து, ஒன்றும் உண்மையான ஈழப்பிரகடனம் அல்ல. அது ஒரு நிபந்தனைகளடங்கிய அறிக்கை மட்டுமே என்பது ஐ.தே.க ரணிலுக்குத் தெரியாததல்ல. தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு கிடைக்காவிட்டால் ஈழத்தை தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை என்று சொல்வதற்கு ஒப்பான ஒரு பிரகடனம் தான் அது.

ஆனால், ரணில் அதைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு இப்போது விவாதத்துக்கு ஜனாதிபதியை அழைத்திருக்கிறார்.

சந்திரிகாவைப் பொறுத்தவரை, அவர் வெற்றி பெற எதிர்பார்க்கும் புதிய

கூடியவருமான ஒருவரை தேடிக் கொண்டிருந்த சந்திரிகாவுக்கு ஒரு விபத்துப் போல வந்து சந்தித்தார் வரதர்.

சந்திரிகாவைப் பொறுத்த வரை, தமிழ் அரசியலுக்கு தான் முக்கிய இடம் கொடுத்துள்ளதாக நியாயம் கற்பிக்க முழுக்க முழுக்க பொருத்தமான ஒருவர் வரதர் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

ஆனால், தனக்கு ஒரு தனியான சுயேட்சைக் குழுவை உருவாக்கிக்கொண்டு தேர்தல் களத்தில் குதித்துள்ள வரதரின் அரசியல் நிலை தான் என்ன?

ஈ.பி.ஆர்.எல்.எப்.இல் அவர் இணைந்த காலம் முதல் எல்லாக் காலங்களிலும் அவர் ஏதோ ஒரு வகையில் யாரோ ஒருவருடைய பொம்மையாக இருப்பது தான் அவரது அரசியல் விதியாகப் போய் விட்டதா?

முதலில் அவர் இந்திய அரசின் செல்லப்பிள்ளையாக இருந்தார். பின்னர் இந்தியப் படையின் ஆதரவுடன் முதலமைச்சர் ஆனார். பின்னர் ஒரிசாவில் இந்திய அரசின் விருந்தினராகத் தங்கியிருந்தார். பிறகு சந்திரிகாவின் சிறகுக்குள் வந்து உட்கார்ந்து கொண்டு தனது அரசியலை 'இரகசியமாகத்' தொடங்கினார். 'ராசிக் குறூப்' போன்ற சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்ட குழுக்களுடன் உறவைப் புதுப்பித்துக் கொண்டு செயற்படத் தொடங்கினார். ராசிக்கின் மறைவுடன் தேங்கிய அந்த முயற்சி பின்னர் கட்சிக்குள் உடைவை உருவாக்குவதாய் தொடர்ந்து இன்று பொ.ஐ.மு.

'தமிழ் மக்களின் இனப்-பிரச்சினைக்கான தீர்வு' என்ற சொற்றொடர் இன்று அவர்கள் தமது இருப்புக்காக உச்சரிக்க வேண்டிய ஒரு சொற்றொடராகப் போய்விட்டது. நாமறிந்த வரலாற்றுக் காலம் முழுவதும் தமிழ் அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தில் போய் அங்கம் வகித்ததன் மூலமாக எந்த அரசியல் ரீதியான பயன்களையும் தாம் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களுக்கு பெற்றுத் தந்ததில்லை. மாறாக அவர்களது உரிமைகள் ஒவ்வொன்றாகப் பிடுங்கப்படுவதற்கு சாட்சிகளாக இருக்க மட்டுமே அவர்களால் முடிந்திருக்கிறது.

இப்போது வடக்கு கிழக்கி-லுள்ள தேர்தல் களத்தில் குதித்துள்ள இந்தக் கட்சிகள் எவையும் தாம் தேர்தலில் குதித்தது ஏன் என்பதை மக்களிடம் வெளிப்படையாகச் சொல்ல முடியாதவர்களாகவே உள்ளனர். உண்மையைச் சொல்வதானால் அவர்களுக்கு எந்த நியாயங்களும் இல்லை - தனிப்பட்ட தமது நலன்களைத் தவிர.

பாராளுமன்றத் தேர்தலோ, வேறெந்த அதிகார அலகுக்கான தேர்தலோ தமிழ் மக்களைப் பொறுத்தளவில் அவர்களுக்கு அதிகாரத்தில் பங்கையோ பகிர்-வையோ வழங்கப் போவதில்லை. சகல அதிகாரங்களும் ஆளும் பேரினவாத அரசின் கைகளிலேயே குவிந்துள்ளன.

தாம் தேர்தலில் பங்கு கொள்ளாவிட்டால் ஆளும் கட்சிகள் வேறு யாரையாவது

இப்படிக்கூறும் எந்த அரசியல் வாதியுமோ ஒரு காலமும் ஒரு சக்தியாக அணி திரட்டுவதில் வெற்றி பெற்றது கிடையாது. நாட்டில் இனப்பிரச்சினை பூதாகரமாக வெடித்துள்ள ஒரு சூழலில், அரச இயந்திரம் பூரண இனவாத மயப்பட்டிருக்கையில், மக்களை அந்த இயந்திரத்தில் நம்பிக்கை வைக்கத் தூண்டும் தேர்தலில் இவர்கள் இறங்குவதன் மூலமாக எதைத் தான் செய்கிறார்கள்?

மக்களும் தமக்கு வேறு வழியில்லை வாக்களித்துத் தான் ஆக வேண்டும் என்ற நிலைக்குள் மாட்டுப்பட்டிருப்பது போன்ற ஒரு பிரமைக்குள் சிக்கிப் போய் இருக்கிறார்கள்- வாக்குரிமை என்பது ஒரு அடிப்படை ஜனநாயக உரிமை.

ஆனால், அந்த உரிமை இருப்பதால் யாரும் வாக்களித்துத்-தான் ஆக வேண்டும் என்று எந்த அவசியமும் இல்லை.

வெல்பவரும் தோற்பவரும் யாராக இருந்தால் என்ன. மக்களைப் பொறுத்த வரை இரண்டுமே ஒன்று தான் என்றாகிப் போன பின்.

சரி, தேர்தலில் பங்கு பற்றாமல் இருப்பதனால் எதைச் சாதிக்கலாம் என்று வாசகர்கள் யோசிக்கக் கூடும்.

குறைந்த பட்சம் அநியாயத்-துக்கும் மோசடிக்கும் துணை போகாமலாவது இருக்கலா-மல்லவா?

நன்றி - நூலகத்திட்டம்




# மட்டக்களப்பு:



## தேர்~~தல்~~கள அறிக்கை

## கொலைக்கள அறிக்கை




அ.சந்திரகுமார்

மட்டக்களப்பில் 90களில் நடந்த படுகொலைகள் மறைக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் இருந்த வேளையில் மட்டக்களப்பு பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் செழியன் ஜே.பேரின்பநாயகத்தின் படுகொலையைக் கண்டித்த அரச பிரச்சார வெகுசன தொடர்பு சாதனமான ரூபவாஹினியில் தமிழ் செய்தி அறிக்கையின் பின் ஒளிபரப்பப்படும் எதிரொலி நிகழ்ச்சியில் 90களில் நடைபெற்ற தமிழினத்துக்கு எதிரான அரச படுகொலைகளை சிறிலங்கா இராணுவமே செய்தது என்பதை உலகே வியக்கும் வண்ணம் என்றுமில்லாத வகையில் சிறிலங்கா அரசு பகிரங்கமாக ஒப்புக் கொண்டது. அன்றைய தினம் இந்நிகழ்ச்சியினை தொகுத்தளித்த அறிவிப்பாளர் மட்டக்களப்பு வந்தாறு மூலையில் நடைபெற்ற 192 அப்பாவிப் பொதுமக்களின் கொலையிலும், சத்துருக் கொண்டானில் நடைபெற்ற 184 பொதுமக்களின் கொலையிலும் மற்றும் பல கொலைச் சம்பவங்களிலும் சிலங்கா இராணுவம் ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் கட்டுக்கடங்காமல் செயற்பட்டது என்றும் தெரிவித்தார். இப் படுகொலைகள் தச வருடங்களின் பின் இந்நினைவுகள் கூர்மைப்படுத்தப்பட்டு மீட்டுப் பார்க்கும் வேளையில், மீண்டும் அப்பாவிப் பொதுமக்களும் மாணவர்களும் சுட்டுக் கொல்லப்படுவதும், சிரச் சேதம் செய்யப் படுவதும், ஆண்உறுப்பு வெட்டப்படுவதும் பழையவற்றையெல்லாம் நீங்கள் மீட்டுப்பார்க்க வேண்டிய அவசியமில்லை அவர்களுக்கு நாங்கள் சளைத்தவர்கள் அல்ல புதிது புதிதாக செய்வதற்கும் எங்களாலும் முடியும் என கூறுவது போலவே அண்மைக்காலச் சம்பவங்கள் அமைந்துள்ளன.


கடந்த மாதம் 18ந் திகதி முறக்கொட்டாஞ் சேனை இராமகிருஷ்ண மிஷன் வித்தியாலய மாணவன் மாணிக்கவேல் விஜயதர்ஷன்(20) களுவன்கேணியில் வைத்து மிருகத்தனமாக மாவடிவேம்பு இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டான். ஆனால் இராணுவத்தினரோ இவனுக்கு புலிச்சாயம் பூசி புலியாகக் காட்டிவிட்டனர். இதேபோன்று கடந்த மாதம் 9ந் திகதி சித்தாண்டியைச் சேர்ந்த அருணாசலம் சந்திரகுமார்(20) என்னும் விவசாயி இராணுவத்தினரால் கழுத்து வெட்டப்பட்டு முண்டமாக்கப்பட்டிருக்கின்றார். 'நான் புலி இல்லை ஐயா என்ன ஒண்டும் செய்யாதிங்க ஐயா உங்கள கும்பிடுறனையா' என்று சந்திரகுமார் கத்தக்கத்த இராணுவத்தினர் சந்திரகுமாரின் தலையை வெட்டி சொப்பிங் பேக்கில் போட்டுக் கொண்டு போனாங்க என்று பக்கத்து வயலில் வெடிச்சத்தத்தைக் கேட்டு பற்றைக்குள் மறைந்திருந்து நடந்தவற்றைப் பார்த்துக் கொண்டிருந்த மாடு மேய்க்கும் சிறுவன் ஒருவன் கூறினான்.

உண்மையில் சந்திரகுமாரைக் கொலை செய்தது இராணுவம்தான் என்பதற்கு இச்சாட்சியம் போதுமாக இருந்தாலும்கூட சிறுவனால் கொலை செய்தவனை அடையாளம் காட்டமுடியாமையினால் குற்றவாளி கைது செய்யப்படவில்லை. இந்நிலைமையே இன்று இராணுவத்தினருக்கு சாதகமான ஒரு நிலைமையைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கிறது. சம்பவங்களைக் கண்ணால் கண்டவர்கள் கூட சாட்சி சொல்லப் பயப்படுகின்றனர்.


இதற்கும் ஒரு காரணமிருக்கின்றது. இராணுவத்திற்கோ அல்லது அவர்களைச் சார்ந்தவர்களின் செயற்பாடுகளின் அநியாயத்துக்கோ எதிராக இருப்பவர்களையும் பயங்கரவாதி என்றே நோக்குகின்ற தன்மை கூட எல்லோரையும் மௌனிகளாக்கி விட்டது. இம்மாதம் முதலாந்திகதி வாழைச்சேனை வீதியிலுள்ள கிண்ணயடி பிரம்படித்தீவு என்னுமிடத்திற்கு சென்ற இராணுவமும் தேசியதுணைப்படையும் மகேந்திரன் நாகேந்திரன்(17) என்பவரின் ஆணுறுப்பை வெட்டி எடுத்து வந்துவிட்டன. கிண்ணயடியில் இருந்து 25 யார் அகலமுள்ள ஆற்றைக் கடந்தால் தான் பிரம்படித் தீவுக்குச் செல்லலாம். ஆற்றைக் கடக்கச் செல்லும் பாதைக்கு கிண்ணயடி இராணுவமுகாமுக்குள்ளாலேயே செல்லவேண்டும். சம்பவதினம் மாலை 5.00 மணியளவில் முகாம் வாசலில் வெள்ளை டொல்பின் வான் வந்து நின்றதாகவும், அதில் வந்த இராணுவ உடையணிந்தவர்கள் முகாமுக்குள் செல்லும் வரையும் பாதைக்கு செல்பவர்களையும் பாதையில் வந்தவர்களையும் முகாமுக்குள்ளால் செல்லாமல் தடுத்து வைத்திருந்தனர் என்றும் தெரியவருகிறது. அன்றிரவு 8.30 மணியளவில் புலிவேட்டைக்காக இவர்கள் பிரம்படித்தீவுக்கு சென்று பற்றைகளில் பதுங்கியிருந்திருந்ததை அறிந்து எவரும் வெளியில் வரவில்லை. இவர்கள் வந்து சிறிது நேரத்தில் துப்பாக்கிச் சத்தம் கேட்டதாகவும் சத்தம்கேட்டு வெகுநேரத்தின் பின் ஆளரவம் இல்லை என்று அறிந்து வெளியில் வந்து பார்த்த போது துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடனும் உடம்பெல்லாம் கத்தி வெட்டுக காயங்களுடனும், ஆண்உறுப்பு இல்லாமலும் நாகேந்திரன் இரத்த வெள்ளத்தில் கிடந்திருக்கிறார். இரவில் எங்களால் ஒன்றும் செய்ய முடியாததால் மறுநாட்காலை சடலத்தை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்காக கொண்டு வந்தபோது இராணுவத்தினர் தடுத்து விட்டனர் எனவும் அவ்வூர்வாசி ஒருவர் தெரிவித்தார். செப்.2ந் திகதி காலையில் 9.00மணியளவில் அதே வெள்ளை வானில் வந்தவர்களில் ஒரு பகுதியினரை ஏற்றிச் செல்ல மீதிப்பேர் நடந்து சென்றதையும் அவதானித்திருக்கின்றனர். வந்தவர்களில் பலகொலைகளுக்குப் பெயர் போன தேசிய துணைப்படையைச் சேர்ந்த (ராசிக்குழு) கிண்ணயடி வேலன் சௌந்தரமும் வந்திருந்ததை அவதானித்திருக்கிறார்கள். புலிவேட்டைக்கு வந்தவர்கள் குடும்பச் சுமையை சுமந்து கொண்டிருந்த அப்பாவி விவசாயியின் உயிரை வேட்டையாடிச் சென்று விட்டார்கள். 'உள்ளவன் செத்தால் ஊர்செத்ததுபோல் இல்லாதவன் செத்தால் எலி செத்ததுபோல' யார் கேட்பார்கள் இந்த ஏழையின் சாவைப் பற்றி.



பூ.சிறிகாந்தன்



மா.விஜயதர்ஷன்



க.கருணாகரன்

இவ்வாறான ஒரு சம்பவமே இம்மாதம் 12ந் திகதி ஆரையம்பதியிலும் இடம் பெற்றிருக்கின்றது. பூபாலபிள்ளை சிறிகாந்தன் (23), கனகசபை கருணாகரன்(22) ஆகிய இருவரும் ஈபிடிபி யின் சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருக்கும் போது விசேட அதிரடிப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர். சுவரொட்டி ஒட்டிக் கொண்டிருந்தவர்களை அழைத்து அடையாள அட்டைகளைப் பார்த்து விட்டு ஓடச்சொல்லி விட்டே சுட்டுள்ளனர்.

ஆனால் விசேட அதிரடிப்படையினரோ தங்களை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டதாகவும் தங்களை நோக்கி வந்த இருவரை நில் என்று கட்டளையிட்டும் முன்னேறி வந்ததால் சுட்டதாகவும் கூறுகின்றனர். அவசரகாலச் சட்டத்தின்படி படையினருக்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தாலும் தங்களை நோக்கி இருவர் வருவது தெளிவாகத் தெரிந்திருக்கிறது. கூப்பிடு துாரத்திற்கு மிக அண்மையில் வந்தபடியினால் நில் என்று கட்டளை இட்டிருக்கிறார்கள். அவ்வாறாயின் அவர்களுக்கு முழங்காலுக்கு கீழே சுட்டு கைது செய்ய முடியாமல் போனது எப்படி? முன்னால் வருபவனை எதிர்த்து சுட்டால் குண்டுநெஞ்சில் பட்டே முதுகுப் பகுதியால் வெளிக்கிளம்பியிருக்கும்.

ஆனால் சிறிகாந்தன்,கருணாகரன் ஆகிய இருவருக்கும் இடுப்புக்கு மேலேயும் அதுவும் பின்தலையிலும் பின்முதுகிலுமே துப்பாக்கிக் குண்டுகள் பட்டிருக்கின்றன அதுமட்டுமல்லாமல் அவர்களின் தொடைகளிலும் கத்தியால் கீறப்பட்டுள்ள காயங்கள் காணப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. வைத்திய பரிசோதனை அறிக்கையின்படியும் சூட்டுக்காயம் பின்தலையிலும், பின்முதுகிலுமே காணப்படுகின்றது என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

எனவே இந்தக்கொலைகள் திட்டமிட்டுச் செய்யப்பட்டது என்பதில் எந்தவித சந்தேகத்திற்கும் இடமில்லை.

**ஜே.கே.வி**

## ரெலோவும் சம்பந்தம்!

'புலிகள் அவ்வழியால் வருவதாகக் கிடைத்த தகவலை அடுத்து தாம் அங்கு பதுங்கி இருந்ததாகவும், அவ்வழியே வந்த இந்த இரு இளைஞர்களையும் தாம் நிற்கும்படி உத்தரவிட்ட போதிலும், அவர்கள் அதற்கு கீழ்படியாமல் தம்மை நோக்கி வந்ததாகவும், அவ்வேளையில், அப்பகுதியில் இருந்து தம்மை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகவும், தாமும் வேறு வழியின்றி தம்மைக் காப்பாற்றிக் கொள்ள துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாகவும் கடந்த 18ம் திகதி மட்டக்களப்பு நீதிமன்றத்தில் இடம்பெற்ற மீள் விசாரணையின்போது ஆரையம்பதி விஷேட அதிரடிப்படைப் பொறுப்பதிகாரி சாட்சியம் அளித்திருந்தார்.

ஆனால், கொலைசெய்யப்பட்ட இளைஞர்கள் உடலில் பலமாகத் தாக்கப்பட்ட காயங்கள் காணப்பட்டதாகவும், அவர்களது பற்கள் கடைவாய் என்பன அடித்து உடைக்கப்பட்டு காணப்பட்டதாகவும் ஒரு இளைஞனின் உடலில் கத்திக்குத்து காயங்கள் காணப்பட்டதாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இதிலிருந்து இந்த இரு இளைஞர்களும், படையினரால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு பின்னர் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்றே தெரிய வருகின்றது.

இது இவ்வாறு இருக்க கொலை செய்யப்பட்ட இளைஞர்கள் ஆரையம்பதி பிரதேசத்தில் உள்ள டெலோ அமைப்புடன் ஏற்கெனவே பல தடவைகள் முரண்பட்டிருப்பதாகவும் இதற்காக 'டெலோ' உறுப்பினர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதியில் இரவினில் விஷேட அதிரடிப்படையினருடன் சேர்ந்து பதுங்கி இருந்து 'புலிவேட்டை' நடாத்தும் நடவடிக்கைகளில் டெலோ உறுப்பினர்களும் ஈடுபடுவதால், சம்பவ தினமன்று 'டெலோ' உறுப்பினர்களும் இருந்திருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த ஆரையம்பதி பொலிஸ் அதிரடிப்படை பொறுப்பதிகாரி, தமது தரப்பில் ஆறு விஷேட அதிரடிப்படையினர் மட்டுமே சம்பவம் நடந்த இடத்தில் இருந்ததாகக் குறிப்பிட்டிருந்தனர்.

இது வழமைக்கு மாறாறன ஒரு கூற்றாகும். ஸ்ரீலங்கா இராணுவத்தைப் பொறுத்தவரை பதுங்கி இருந்து தாக்கும் நடவடிக்கைகளில் குறைந்தது 11 பேர்களாவது ஈடுபடுத்தப்படுவது வழக்கம்.

அதிகாரி கூறுவது போன்று அதிரடிப்படை தரப்பில் ஆறுபேர் மட்டுமே அன்றைய நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது உண்மையானால், அந்த இடத்தில் தமிழ் குழு உறுப்பினர்களும் நிச்சயம் இருந்திருப்பர் என்பதில் சந்தேகம் இல்லை. இதனால் அதிரடிப்படையினர் மேற்கொண்ட இளைஞர்களின் கொலையில் ரெலோ உறுப்பினர்களும் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஆரையம்பதி மக்களால் எழுப்பப்பட்டுள்ளது.

மொத்தத்தில் இந்த அப்பாவி இளைஞர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சித்திரவதை கொலை தமிழ் இளைஞர்கள் மீது 'புலி முத்திரை' குத்தி நடாத்தப்பட்டு வரும் இனவாதக் கொலைகளினுள் சேர்க்கப்பட்டு அமுக்கப்பட்டுவிடும் என்றே தெரிகிறது.

*விகடகவி*

# பொதுத் தேர்தலும் தமிழர் அரசியலும்

- சிசைரோ

இலங்கையின் அரசியல் வரலாற்றைப் பொறுத்த வரையில் ஒரேயொரு தடவையைத் தவிர பொதுத்தேர்தலானது காலந்தப்பி வந்ததேயில்லை. நான்கு, ஐந்து, ஆறு வருடங்களுக்கு ஒருமுறை என்று இது வந்து போகின்றது. ஆனால் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை மக்களைப் பொறுத்தளவில் இந்தத் தேர்தல்கள் ஒவ்வொரு முறையும் ஏதாவதொரு எதிர்பார்ப்பினை உருவாக்குவதும் தேர்தலின் பின்னர் அது பொய்த்துப் போய்விடுவதுமாகவே இருந்து வந்துள்ளன. அந்த வரிசையில் தான் இம்முறையும் பொதுத்தேர்தல் ஒன்று எம்மை எதிர்கொள்கின்றது. ஆனால் இம்முறை தேர்தல் சற்று வித்தியாசமாகத் தான் இருக்கப் போகின்றது. எப்படியெனப் பார்ப்போம்.

அரசாங்கத்தை அமைக்கும் வாய்ப்புள்ள இரண்டு பெரிய கட்சிகளுமே இனப்பிரச்சினை தொடர்பான புதிதான எந்தத் தீர்வுத் திட்டத்தினையோ முயற்சியினையோ தமிழ் மக்கள் முன்வைக்கவில்லை. இந்த இரண்டு கட்சிகளுமே தங்கள் நிலைப்பாட்டில் வெகு தெளிவாகவேயுள்ளன. ஐக்கிய தேசியக் கட்சி தான் பதவிக்கு வந்தால் புலிகளோடு பேச்சுவார்த்தை நடாத்துவோம் என்று கூறுகின்றது. அது இதனை வெளிப்படையாகக் கூறிவருவது வரவேற்கத்தக்கது தான். ஆனால் இப்படி அது கூறிவருவதற்குக் காரணம் உண்மையிலேயே அப்படியொரு நோக்கம் அதற்கு உள்ளது என்பதாலா அல்லது கணிசமான தமிழ் வாக்குகளைக் கொழும்பிலும், மலையகத்திலும், கிழக்கு மாகாணத்திலும் பெறக்கூடியதான வாய்ப்பினை நழுவ விட்டுவிடக் கூடாது என்பதாலா என்பதும் உன்னிப்பாக அவதானிக்கப்பட வேண்டியதொரு விடயமாகும். அதற்கும் மேலாக தம்மிடம் இருக்கும் தீர்வுத் திட்டம் என்ன? அது எந்தளவுக்குத் தமிழ் மக்களினால் ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதாகும் என்பது பற்றியெல்லாம் அக்கட்சி இப்போது கவலைப்படத் தயாரில்லை.


மறுபுறத்தில் இம்முறை பொதுஜன ஐக்கிய முன்னணியும் நேர்மையான முறையில் தான் கொள்கைகளை முன்வைத்துள்ளது என்று கூறவேண்டும். அதாவது எங்களது தீர்வுத்திட்டம் என்ன என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். ஏற்கனவே பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியதன் மூலம் அதைப் பகிரங்கப்படுத்தியுள்ளோம். இத்தீர்வுத் திட்டத்தை ஆதரிப்பதாக எமக்கு வாக்குறுதியளித்துவிட்டு பின்னர் அதை மீறிவிட்டது ஐக்கிய தேசியக் கட்சி. எனவே அது தமிழ் மக்கள் முன் வாக்குக் கேட்டு வருதற்கு யோக்கியதை அற்றது என்று ஆளுங்கட்சி கூறுகின்றது. ஆனால் தீர்வுத் திட்டத்தின் உள்ளடக்கம் பற்றி விவாதிக்க நேர்ந்தால் மட்டுமே இக்கட்சி இரட்டை வேட நிலைக்குத் தள்ளப்படும் அபாயமுள்ளது. அதாவது தமிழர்களுக்குப் பெரிதாக எதையுமே கொடுக்கவில்லையே என்று தென்னிலங்கை மக்களுக்கும் அதேவேளை சகலவற்றுக்கும் இதனுள்ளே தீர்வுள்ளது என்று தமிழ் மக்களுக்கும் அது மாற்றி மாற்றிக் கூறவேண்டியுள்ளது.

ஆனால் இதுவிடயத்தில் ஐக்கிய தேசியக்கட்சி போலன்றி புலிகளுடன் பேசுவது பற்றியோ அவர்களது பங்களிப்புப் பற்றியோ ஆளுங்கட்சி எதுவும் கூறாமல் மாறாக, புலிகளைத் தோற்கடிப்பது அல்லது அவர்களை அடியோடு அழிப்பது தான் தமது நிலைப்பாடு என்று பிரதமர் வெகுகம்பீரமாகப் பேசி வருகின்றார். எனவே புலிகளை ஆதரித்துப் போவது பற்றிய விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி மௌனமாகச் செயற்பட ஆளுங்கட்சியோ பகிரங்கமாகவே புலியெதிர்ப்பு நிலைப்பாட்டை எடுத்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் புலியெதிர்ப்பாளர்களாக உள்ள தமிழர்களது வாக்குகள் மட்டும் தமக்குக் கிடைத்தால் போதுமானது என்ற முடிவுக்கு அது வந்திருக்க வேண்டும். தேசியப்பட்டியலில் வரதராஜப் பெருமாளை இடம்பெறச் செய்ததன் மூலம் இதனை இக்கட்சி நிரூபித்துமுள்ளது. அத்துடன் வேறு சில இராஜரீக நெருக்கடிகளும் ஜனாதிபதியின் இந்த முடிவின் மீது செல்வாக்குச் செலுத்தியிருக்க முடியும்.

எனவே இம்முறை இரு கட்சிகளதும் நிலைப்பாடு மிகத் தெளிவாக உள்ளது என்பதில் ஐயமில்லை. தமிழ் மக்களைப் பொறுத்தளவில் இந்த இரண்டு நிலைப்பாடுகளினாலும் எவ்வித பயனும் விளையப் போவதில்லை என்பதை அறிந்தே உள்ளனர் எனலாம். ஏனென்றால் 1994 இல் இதைவிட மிக உத்வேகமாகவும், பகிரங்கமாகவும் உத்தரவாதமளித்த பொதுஜன ஐக்கிய முன்னணி அதன்படி இனப்பிரச்சினை விவகாரத்தில் நடந்து கொள்ளவில்லை. எல்லாம் தலைகீழாகவே நடைபெற்றன. ஐக்கிய தேசியக் கட்சியும் தன்பங்குக்கு புதிய அரசியலமைப்பு அறிமுக நகலைப் பாராளுமன்றத்தில் எதிர்த்து ஆடிய கூத்தின் மூலம் தனது நிலைப்பாட்டை தமிழ் மக்களுக்கு விளக்கிவிட்டது என்று தான் கூறவேண்டும்.

ஆக, வரப்போகும் அரசாங்கத்திடமிருந்து தமிழ் மக்கள் இனப்பிரச்சினைத் தீர்வு எதனையும் எதிர்பார்த்து இப்போது வாக்களிக்கப் போகின்றார்கள் என்றால் நிச்சயம் இல்லை என்று தான் கூற வேண்டும். இதையும் மீறி யாரேனும் இந்தப் பெரிய கட்சிகள் இரண்டில் ஒன்றுக்கு வாக்களிக்கின்றார்கள் என்றால் அதற்கான காரணம் நிச்சயம் பொதுநலன் சம்பந்தப்பட்டதாக இருக்கவே முடியாது எனலாம்.

வடக்குக் கிழக்கில் போட்டியிடும் ஏனைய இயக்கங்களும் தமிழ் மக்களின் கொள்கைப்பற்று மீது பந்தயம் கட்டியோ அல்லது இதோ தீர்வு- இதற்குக் குறைய எதனையும் பெற்றால் திரும்பி வரவே மாட்டோம் என்று சூளுரைத்தோ வாக்குகளைக் கேட்டு நிற்கவில்லை. பதிலுக்கு, தற்போதுள்ள அரசியல்



சூழ்நிலையில் குளிர்காய்ந்து கொண்டு அதேவேளை எந்தப் பெரிய கட்சி அரசாங்கத்தை அமைக்கின்றதோ அதனுடன் பேரம்பேசிச் சில தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதனையுமே இலக்காகக் கொண்டுள்ளன. மலையகத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் (2) இதே துர்ப்பாக்கிய நிலைக்கே தள்ளப்பட்டுள்ளது.

ஆக, தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ்க் காங்கிரஸுமே வித்தியாசமான அரசியல் நிலைப்பாட்டை முன்வைத்துள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணி தனது முன்னைய கொள்கையான தனித் தமிழ் ஈழத்தை மீளுருப்போட முடியாதபடிக்கு பல்வேறு தடைகள். திம்புக்கோட்பாடுகள் பற்றிக்கூட கிழக்குக் கூட்டணியே இடைக்கிடை குறிப்பிடுகின்றது. ஆனால் தமிழ்க் காங்கிரஸுக்கு சட்டத்தடைகளைவிட வேறேதேனும் தடைகள் திம்புக் கோட்பாடுகள் பற்றிப் பேசுவதற்குக் கிடையாது. ஆனால் எந்தளவு தூரத்துக்கு வாக்காளர் மத்தியில் அதை பிரபல்யப்படுத்தி வாக்குகளாக மாற்றிவிடும் என்பது குமார் இல்லாத



காங்கிரஸைப் பொறுத்தளவில் சந்தேகமானதே. போட்டியிடும் எந்தவொரு மாவட்டத்திலும் ஆளுமைமிக்க வேட்பாளர்கள் எதனையும் அதனால் நிறுத்திட முடியவில்லை.

அன்றாடப் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கின்றோம். எமக்கு வாக்களியுங்கள் என்று இயக்கங்கள் கேட்கின்றன. கொள்கைக்கு வாக்களியுங்கள் என்று கூட்டணியும், காங்கிரஸும் கோருகின்றன. ஆனால் அவையே தமக்கிடையில் மோதும்போது எந்தக் கொள்கை என்பது சாதாரண வாக்காளரைத் தடுமாறச் செய்யலாம். இந்த வகையில் வடக்கில் காங்கிரஸுக்குக் கூடுதலான லாபமும் கிழக்கில் கூட்டணிக்குக் கூடுதல் வாய்ப்பும் உள்ளதை ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்.

1994 இல் வாக்களித்த போது தமிழ் மக்கள் பெரும் எதிர்பார்ப்புகளோடு இருந்தார்கள். பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கிட்டும் என்பதில் பெரும் நம்பிக்கை துளிர்த்திருந்தது. தனிநபர்கள் ஆளுமை கொண்டு இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. புரட்சிகரமான முறையில் மனமாற்றம் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று என்னைப் போல ஒரு சிலரே அவ்வேளையில் கருதியிருந்தமையால் நாங்கள் பின்தள்ளப்பட்டோம்.

கடந்த ஆறாண்டு ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்கள் எத்துணைதான் துயரங்களை அனுபவித்திருந்தாலும் இக்காலப்பதியில் பெற்ற முக்கிய பாடமொன்று எமக்குப் பெரும் நன்மை பயப்பதாயமைந்திருப்பதை மறுப்பதற்கில்லை. அது என்னவெனில் எந்தப் பாராளுமன்றவாதக் கட்சியும் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் இதயசுத்தியுடன் இல்லை என்பதும் தமிழ் மக்கள் மேலும் மேலும் தேர்தல்களை நம்பி ஏமாறத் தயாராக இல்லை என்பதுமேயாகும். இருப்பினும் அவர்கள் வாக்களிக்கத் தான் போகின்றார்கள். தமிழர் பிரதிநிதிகள் என்று சிலர் பாராளுமன்றம் வரத்தான் போகின்றார்கள். ஆனால் அவர்களது ஏதேனும் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டுமா? இல்லவேயில்லை என்பது தமிழ் வாக்காளர்களுக்கு நிச்சயம் தெரிந்தே இருக்கின்றது.

இங்ஙனம் பார்க்கும் போது, போன தடவை போலன்றி இம்முறை மிக வித்தியாசமான முறையில் தமிழ் மக்கள் பொதுத் தேர்தலை நோக்குகின்றார்கள் என்றே கூறுவேன். அதாவது, வாக்களிப்பதனாலோ அல்லது நாம் பாராளுமன்றம் அனுப்பி வைப்பவர்களினாலோ எங்கள் பிரச்சினை தீரவே தீராது என்பதைத் தெளிவாக அறிந்திருந்து கொண்டும் நாங்கள் வாக்களிக்கப் போகின்றோம் அல்லவா. அது தான் புதுமை. புதுமையிலும் புதுமை - இல்லை என்கிறீர்களா?


> **“அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கின்றோம். எமக்கு வாக்களியுங்கள் என்று இயக்கங்கள் கேட்கின்றன. கொள்கைக்கு வாக்களியுங்கள் என்று கூட்டணியும், காங்கிரஸும் கோருகின்றன. ஆனால் அவையே தமக்கிடையில் மோதும் போது எந்தக் கொள்கை என்பது சாதாரண வாக்காளரைத் தடுமாறச் செய்யலாம். இந்த வகையில் வடக்கில் காங்கிரஸுக்குக் கூடுதலான இலாபமும், கிழக்கில் கூட்டணிக்குக் கூடுதல் வாய்ப்பும் உள்ளதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.”**

நன்றி - நூலகத்திட்டம்



## அவர்கள் என்ன சொல்கிறார்கள்?

கடந்த வாரத்துச் சிங்களப் பத்திரிகைச் செய்திகள் குறித்த ஒரு அலசல்



கே.சி.ஜே.ரட்ணாயக்க

# அரச ஊடகங்கள் அஷ்ரஃபின் பூதவுடலை விற்கின்றன ... !

கடந்த வார இறுதி நிகழ்வுகள் இரண்டு எதிர்வரும் வார பத்திரிகைகளின் தலைப்புச் செய்திகளை ஏற்கெனவே தீர்மானித்து விட்டன.

செப்டம்பர் 15 வெள்ளிக்கிழமை காலை 10.10மணிக்கு கொழும்பு கண் வைத்தியசாலை முன்னரங்கில் வெடித்துச் சிதறிய தற்கொலைக் குண்டுதாரி பற்றிய செய்தி வார இறுதி சனி, ஞாயிறு பத்திரிகைகளின் முகப்புகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை கொலை செய்வது அம்மனிதக் குண்டின் நோக்கமாக இருந்த போதிலும் அம் முயற்சி வீணானது என பத்திரிகைகளில் அறிக்கையிடப்பட்டிருந்தது. வார இறுதி ஞாயிறு பத்திரிகைகளின் அறிக்கையிடல்கள் பின்வருமாறு:-

**'ஞாயிறு லங்காதீப'**

புலிப்பயங்கரவாதியை சோதனையிடும் போது குண்டு வெடித்தது.

7 பேர் மரணம், 25 பேர் காயம் இருவர் மோசமான நிலையில்.

தற்கொலைப் போராளிகள் அறுவர் கொழும்பில்.

**'ஞாயிறு லக்பிம'**

கண் வைத்தியசாலைக்கு அருகில் குண்டு வெடித்ததில் 6 பேர் மரணம், 30பேருக்கு காயம்.

**'ஞாயிறு திவயின'**

கண் வைத்தியசாலையின் அருகில் குண்டு

கரும்புலிகளின் இலக்கு அரசியல்வாதியா?

**'சிலுமின'**

கொழும்பில் 21 மனித குண்டுகள்.

**'இரிதா பெரமுன'**

குண்டுவெடிக்கும் என்று பாதுகாப்பு பிரிவுக்கு ஏற்கெனவே தெரிந்திருந்தது.

வார இறுதியில் சிங்களப் பத்திரிகைகளில் சுடச்சுட செய்தியாக இச் செய்தி அமைந்திருந்தது. ஆனால், 24 மணித்தியாலம் கடப்பதற்குள் இச் செய்திகளை விட முக்கியமான செய்தி ஒன்று வெளிவந்தது. அது சனிக்கிழமை காலை 9.30மணிக்கு நடந்த ஹெலி விபத்தாகும். இந்த அவலம் ஞாயிறு செய்தித்தாள்கள் எவற்றிலும் பிரசுரிக்க முடியாமல் போனதற்குக் காரணம் அந்த நேரத்திற்குள் அப்பத்திரிகைகள் எல்லாம் விற்பனைக்கு அனுப்பப்பட்டிருந்தமையே. இதனால் திங்கள் நாளாந்தப் பத்திரிகையின் செய்தி நினைக்க முடியாதளவுக்கு உயிர்த்துடிப்புள்ளதாய் விளங்கியது. திங்கள் செய்தித்தாள்களில் இச் சம்பவம் இவ்வாறே பிரசுரிக்கப்பட்டிருந்தது.

அமைச்சர் அஷ்ரஃப் உடனான குழுவைப் பலிகொண்ட ஹெலிகொப்டர் விபத்து சதித்திட்டமோ என சந்தேகம்.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அங்கத்தினர் முழு விசாரணையை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுள்ளார்கள்.

**லக்பிம செப்.18 திங்கள்**

ஹெலிகொப்டர் விபத்தை சோதனையிட உக்ரேனிலிருந்து வருகிறார்கள்.

**தினமின செப்.18**

ஹெலிகொப்டர் உடைந்து விழுந்ததற்கு காரணம் இன்னும் மர்மம்.

**லங்காதீப**

தீப்பொறியுடன் புகை மேலெழுந்தது அமைச்சர் அஷ்ரஃப்புடன் 15 பேர் மரணம்.

**திவயின**

இவற்றில் லக்பிம மற்றும் லங்காதீப பத்திரிகைகளின் அறிக்கையிடல்களில் விபத்து குறித்து சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அமைச்சர் அஷ்ரஃப்புடன் பயணித்த பயணிகளில் சந்தேகத்திற்கிடமான வகையில் தமிழர் ஒருவர் பயணித்துள்ளதாகவும், இதன்படி இவ்விபத்து புலிகளினால் திட்டமிடப்பட்டிருக்கலாம் எனவும் ஐயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் இவ்விடயம் குறித்து முழுமையான விசாரணையொன்றை நடத்துமாறு கோரியுள்ளதாகவும் லக்பிம பத்திரிகை முக்கியத்துவமளித்து செய்தி வெளியிட்டுள்ளது. லக்பிம பத்திரிகையின் சில பக்கங்கள் அமைச்சர் அஷ்ரஃப்பிற்கு அஞ்சலி செலுத்துவனவாகக் காணப்பட்டன. அதில் ஒரு கட்டுரையின் தலைப்பு இவ்வாறு காணப்பட்டது.

> **அமைச்சர் அஷ்ரஃப்புடன் பயணித்த பயணிகளில் சந்தேகத்திற்கிடமான வகையில் தமிழர் ஒருவர் பயணித்துள்ளதாகவும், இதன்படி இவ்விபத்துப் புலிகளினால் திட்டமிடப்பட்டிருக்கலாம் எனவும் சிங்களப்பத்திரிகைகள் ஐயம் தெரிவித்துள்ளன.**

"அரசை உருவாக்குபவரின் மரணம்".

அமைச்சர் அஷ்ரஃப்பையும், எஸ். தொண்டமானையும் ஒப்பிட்டு ஒரு கட்டுரை வரையப்பட்டிருந்தது. அத்துடன் அமைச்சர் அஷ்ரஃப்பின் அரசியல் விமர்சகரான கங்கொடவில சோம தேரர் அஞ்சலிக் குறிப்பொன்றை வெளியிட்டிருந்தார்.

அதன் தலைப்பு "தனது இனத்திற்காக அதிக பட்சம் வேலை செய்த ஒரு நபர்" என்பதாகும். அவர் என்ன கூறினாலும், அவர் தமது இனத்திற்காக மிகப்பெரிய சேவைகளைப் புரிந்தவர். ஒரு சில வேளைகளில் அது அளவுக்கு மிஞ்சியதாகவும் மாறிவிட்டது. எவராவது தவறு செய்வதை கண்ணுற்றால் அதனைச் சுட்டிக்காட்டுவது அவசியமாகும். தீகவாபி போன்ற தவறுகளை நான் அதனால் தான் சுட்டிக் காட்டினேன். எனினும், தற்போது அரச ஊடகங்கள் அஷ்ரஃப்பின் பூதவுடலை விற்றுக்கொண்டு அரசியல் இலாபம் பெற முயற்சிக்கின்றன. இது அவரை இழிவுபடுத்தும் செயல். நான் அதனை வன்மையாகக் கண்டிக்கிறேன்" என்றவாறு அக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது. கடந்த வாரங்களில் அஷ்ரஃப் அவர்களுடன் அரசியல் மோதலில் ஈடுபட்டிருந்த ஏ.எச்.எம். பௌஸி வெளியிட்ட கண்ணீர் அஞ்சலிகளும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்து.

"முஸ்லிம் மக்களின் உரிமைகளைக் காக்க எப்பொழுதும் முயற்சித்தார்" என்ற தலைப்பு பயன்படுத்தப்பட்டிருந்தது.

லக்பிம பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த இரு செய்திகள் மூலம் வாசகர்களை கவர எத்தனிக்கப்பட்டிருந்தது.

"முச்சக்கரவண்டியில் குண்டு கொண்டு வரப்பட்டது. கொழும்பில் வெடிக்க வைக்கவன்றி அஷ்ரஃப்பைக் கொல்லவே"

கடந்தவாரம் அம்பாறை தமன பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட வெடிமருந்துகளுடன் கூடிய முச்சக்கரவண்டி அமைச்சர் அஷ்ஃரப்பை படுகொலை செய்ய புலிகள் எடுத்த முயற்சியாகத் தெரியவருகிறதென அறிக்கையிடப்பட்டிருந்தது. மற்றச் செய்தி அஷ்ரஃப்பின் இழப்பின் பின் ஸ்ரீ.மு.காவின் புதிய தலைவர் தெரிவு குறித்ததாகும்.

"மோதல் துப்பாக்கிச் சமர் மத்தியில் தலைவர் தெரிவு" என்ற தலைப்பைக் கொண்ட அச் செய்தியில் முஸ்லிம் காங்கிரசின் புதிய தலைவரை தெரிவு செய்ய மு.கா. உறுப்பினர்கள் 3 குழுக்களாகப் பிரிந்து போராடியதாகவும், துப்பாக்கிச்சமர் மற்றும் ஊடகவியலாளர் மீது தாக்குதல் என்பன இடம்பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

"சிலர் அஷ்ரஃப்பின் மரணச் சடங்கின் போது நடந்து கொண்ட விதம் மிகவும் மோசமானது" முன்னாள் பா. உ. காதர் கூறுகிறார்.

"இறுதி மரியாதை செலுத்த வந்த பௌசியை சுற்றி வளைத்து எதிர்ப்பு தெரிவிப்பு" - கூட்டத்தைக் கலைக்க ஆகாயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டு.

இவை செப். 18ம் திகதி லங்காதீப பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த செய்திகளாகும்.

தினமின, திவயின, லங்காதீப, லக்பிம ஆகிய 18ம் திகதிய அனைத்துப் பத்திரிகைகளின் ஆசிரியர் தலையங்கங்கள் அமைச்சர் அஷ்ரஃப்புக்கு அஞ்சலி செலுத்த ஒதுக்கப்பட்டிருந்தன. அமைச்சர் அஷ்ஃரப் சிறந்த அரசியல் தலைவர் எனவும், அவர் முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க மற்றும் இனப்பிரச்சினையைத் தீர்க்க நேர்மையாகப் போராடிய தலைவர் எனவும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அடுத்த நாள் அதாவது செப். 19ம் திகதி நாளாந்த சிங்களப் பத்திரிகைகளின் முதல் பக்கத்தின் தலைப்பு செய்தி விபத்து குறித்து ஐயத்தை எழுப்பும் வகையில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதாவது;

1. தினமின செப். 19 : "ஹெலியில் பயணித்த தமிழ் இளைஞர் மீது சந்தேகம்'

2. லங்காதீப செப். 19 : ஹெலி வெடித்தது பயங்கரவாத செயலாகும், எமக்குச் சந்தேகம் உண்டு. - றவூப் ஹக்கீம்.

3. திவயின செப். 19 : "திட்டவட்டமான விசாரணை வேண்டும்" மு. கா. தலைவர் ஹவூப் ஹக்கீம் நேற்று ஜனாதிபதியைச் சந்தித்து வேண்டுகோள்.

4. லக்பிம செப். 19 : அமைச்சர் அஷ்ரஃப் அவசரமாகப் பயணத்தை பிற்போட்டத்தில் மர்மம்.

இத்தலைப்புச் செய்திகள் அனைத்தும் ஹெலி விபத்தின் ஐயப்பாட்டைத் தெரிவித்துப் பல்வேறு ஊகங்களைக் கிளப்பியிருந்தன.

குறிப்பாக வெள்ளி திரும்ப இருந்த பயணம் சனிக்கிழமைவரை பிற்போடப்பட்டது தேர்தல் வேட்பாளர் கதிர்காமத்தம்பியின் கோரிக்கையின் பேரில் எனவும், அவருடன் பயணம் செய்த தமிழர்கள் இருவர் புலிகளா என்ற ஐயத்தை தோற்றுவிக்கும் தகவல்கள் அறியக் கிடைப்பதாகவும் லக்பிம பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தினமின தலைப்புச் செய்தியிலும் இவ்வாறான சந்தேகம் குறித்து தகவல் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்துடன் பிரசுரிக்கப்பட்டிருந்த இன்னொரு செய்தியில் அமைச்சர் அஷ்ஃரப் வகித்த பதவி தற்பொழுது ஜனாதிபதியின் கீழ் உள்ளதாகவும் அவ் அமைச்சுப்பதவியை ஸ்ரீ.ல.மு.கா. றவூப் ஹக்கீமுக்கு வழங்காவிட்டால் பொ.ஐ.முவுக்கும், ஸ்ரீ.ல.-மு.காவுக்கும் இடையில் பாரிய நெருக்கடி நிலை தோன்றும் என அறிக்கையிடப்பட்டுள்ளது.


ஹெலி விபத்து குறித்து முழுமையான விசாரணை நடாத்துமாறு லக்பிம மற்றும் லங்காதீப பத்திரிகைகளில் ஆசிரியர் தலையங்கங்கள் எழுதப்பட்டுள்ளன. சிங்கள நாளாந்த பத்திரிகைகளில் காணக்கிடைக்கும் இந்தப் போக்கு அஷ்ரஃப் மரணம் பற்றி காணப்படும் சந்தேகங்கள் குறித்து ஒரு விடயத்தை தெளிவுறுத்துவதாகவே அமைந்திருந்தன. அமைச்சர் எம்.எச்.எம்.-அஷ்ரஃப் சிங்களப் பத்திரிகைகளுக்கு ஒரு செய்திக் கதம்பமாக விளங்கியவர். அவரது மரணமும் அதேபோன்று செய்திகளைத் தரும் விடயமாகியுள்ளது. அவரது மரணத்தின் பின்னர் ஸ்ரீ.ல.மு.காவின் நிலை என்ன என்றவாறான செய்திகள் அறிக்கையிடப்படலாம். அல்லது செய்திகள் உருவாக்கப்படலாம். அஷ்ரஃப் மரணம் குறித்து லக்பிம பத்திரிகையில் எழுதப்பட்ட ஆசிரியர் தலையங்கம் இவ்வாறு நிறைவுறுகின்றது.

"'... அவர் பின்பற்றிய சில நடைமுறைகள் பிறரின் விமர்சனங்களுக்குரித்தாகியது. இனப்பிரச்சினையைத் தீர்ப்பது குறித்த அவரது நடைமுறைகளின் சரி, பிழை என்பன வரலாற்றினால் தீர்மானிக்கப்படும். எனினும், ஒரு போதும் வரலாறு அவரை மறந்து விடாது..."

சரிநிகர் இதழ் - 202, செப். 24 - செப். 30, 2000 

**எனது பத்திரிகை உலக அனுபவங்கள் - 2**

# ராஜகோபாலுக்கு வந்த சோதனை!



**எஸ். எம். ஜி. அறிமுகம்**

தேவைப்படாத தமிழ்ப் பத்திரிகையாளர். இன்றைய தலைமுறைப் பத்திரிகையாளர்களுக்கு ஒரு முன்னோடியாக இருந்து பல்வேறு நெருக்கடிகளின் மத்தியிலும் பத்திரிகையாளராகச் செயற்பட்டு வந்தவர்/வருபவர் அவர். சரிநிகருக்காக அவர் தனது பத்திரிகை உலக அனுபவங்களைத் தொடர்ந்து எழுதுகிறார்.
சென்ற இதழில் இத்தொடரின் முதற்பகுதி வெளியானது.

ஆ-ர்

"செய்தி" என்று ஒரு வாரப் பத்திரிகை கண்டியிலிருந்து வெளிவந்துகொண்டிருந்தது. ஆர். எம். நாகலிங்கம் என்பவர் யாழ்ப்பாணத்திலிருந்து 'ஈழநாடு' வெற்றிகரமாக வெளிவந்து கொண்டிருந்ததனால் ஏற்பட்ட உந்துதலால் "செய்தி"யை ஆரம்பித்தார். இதன் ஆசிரியராகப்

பெரி சுந்தரலிங்கம் இருந்தார். பின்னர் இவர் 'ஈழநாடு' கொழும்புச் செய்தியாளராகவும் இருந்து, வழக்கறிஞராக

என். சத்தியேந்திராவிடமிருந்து தொழில் புரிந்தார்.

பெரி சுந்தரலிங்கம் மலை நாட்டில், புதிய கோணத்தில் "செய்தி"யை வழி நடத்தினார். தொண்டமான் காங்கிரசுக்குத் துதி பாடினால் தான் பத்திரிகை தாக்குப் பிடிக்கும் என்ற மாயையை உடைத்தெறிந்து, தமிழுக்கும், அதே சமயம் சோஷலிஸத்துக்கும் முக்கியத்துவமளித்தார்.

'ஈழநாடு' பத்திரிகையில் பத்திரிகைத் தொழில் பயிற்சியை ஆரம்பித்த கே. ஜி. மகாதேவா, "ஈழநாடு"விலிருந்து வெளியேற வேண்டியேற்பட்டது. கம்பளையில் பெண்ணெடுத்த உறவு முறையில், கண்டியில் 'செய்தி' பத்திரிகையில் சேர்ந்தார். பெரி சுந்தரலிங்கம் வெளியேறினார்.

யாழ்ப்பாண அரசியலில் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ் கட்சியென்ற போட்டியும், போராட்டமும் தொடர்ந்து கொண்டிருந்த காலம்.

தமிழ்க் காங்கிரசுடன் இரண்டறக் கலந்த குடும்பம் கொடிகாமம் புறக்டர் கார்த்திகேசுவினுடையது. இவரது மகன்களில் ஒருவர் யோகநாதன், வீரகேசரியில் சிறிது காலம் ஒப்பு நோக்காளராகவும் பணியாற்றியவர். 'ஈழநாடு' பத்திரிகையில் தொடக்க காலத்திலேயே நிருபராகச் சேர்ந்தவர். அரசியல் கூட்டங்கள், நீதிமன்ற வழக்குகள், பிசகில்லாமல் திரட்டி வருபவர். அரசியல் கூட்டங்களில், தமிழ்க் காங்கிரசுக்குச் சார்பாக மாற்றுக் கட்சியினரின் பேச்சையும் நாசூக்காகப் பயன்படுத்துவதில் வல்லவர். கோகிலாம்பாள் கொலை வழக்கு விசாரணையை நல்ல முறையில் ஒன்று கூட விடாமல் எடுத்து, எழுதிப் பெயர் பெற்றவர்.

சாவகச்சேரித் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் சார்பில் 1956ஆம் ஆண்டு தொடக்கம்,

வி. என். நவரத்தினம் தொடர்ந்து தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்று அத்தொகுதியின் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தார். இத்தொகுதியின் பிரதிநிதியாக முன்பு விளங்கிய

வி. குமாரசாமியை மீண்டும் வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று எடுத்த முயற்சிகளில் யோகநாதன் வெற்றியீட்ட முடியாமல் போய்விட்டது !

எப்படியாவது நவரத்தினத்தை ஒரு தடவையாவது தோல்வியடையச் செய்ய வேண்டுமென்பதுடன், அவருக்கு ஈடுகொடுக்கக் கூடியதாகத் தமது அண்ணன் முறையான பரிஸ்டர் சிவானந்தனைத் தேர்தலில் நவரத்தினத்தை எதிர்த்துத் தமிழ்க் காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்துவதற்குத் தேர்தலுக்குச் சில வருடங்களுக்கு முன்னரே திட்டமிட்டுச் செயல்பட்டார்.

யோகநாதனின் இராஜதந்திரம் எல்லோருக்கும் விளங்கிக் கொள்ள முடியாது. ஆனால்,

வி.என்.நவரத்தினம் இவரது நடவடிக்கைகளையும், இவர் எழுதும் செய்திகளையும் படித்துக் கவனித்து வந்திருக்கிறார்.

மகாதேவா 'ஈழநாடு' பத்திரிகையிலிருந்தபோது,

இதே தமிழரசுக் கட்சி எதிர்ப்பு மனப்பான்மையுடைய நண்பர்களையும் யோகநாதன் தமது அரசியல் சாணக்கியத்துக்குத் தயார்படுத்தி வந்திருக்கிறார்.

நவரத்தினத்துக்கு எதிரான சில செய்திகள் கண்டியிலிருந்து வெளியான "செய்தி" இதழிலும் வெளிவந்திருக்கிறது.

இச் செய்திகளை மறுத்தாலும் நவரத்தினத்துக்கு நல்லதல்ல ! இந்தச் செய்திகளை மகாதேவாவின் நண்பரான 'ஈழநாடு' உதவி ஆசிரியர்களில் ஒருவரான ஈ. கே. இராஜகோபால் மூலம் மகாதேவாவுக்கு, யோகநாதன் அனுப்பி வந்திருக்கிறார்.

'செய்தி' இதழுக்கு இராஜகோபால் யாழ்ப்பாண நிருபர் மாதிரிச் செயல்பட்டு மகாதேவாவுக்கு உதவி வந்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் அசைஸ் நீதிமன்றம் ஆண்டுக்கு ஒரு தடவையோ, இரண்டு தடவையோ கூடிக் கொலை மற்றும் முக்கிய பெரிய வழக்குகளை விசாரிக்கும். அசைஸ் நீதிமன்றத்தைச் சுப்ரீம் கோர்ட் என்றே பொதுவாக மக்கள் அழைப்பார்கள். யாழ்ப்பாண நகர மண்டபத்தில் தான் நீதிமன்றம் நடைபெறும்.

அசைஸ் நீதிமன்றத்தில்

ஒரு முக்கியமான வழக்கு விசாரணைக்கு வந்தது.

இந்த வழக்கை விசாரிக்கும் நீதிபதி நீதியரசர் எச். டபிள்யூ. தம்பையா. எதிரியின் சார்பில் ஆஜராகி வாதாடியவர் வி. என். நவரத்தினம்.

நான்கைந்து தினங்கள் இந்த வழக்கு ஜூரிகள் முன்னிலையில் விசாரிக்கப்பட்டு வந்தது.

வழக்கு விசாரணைகளைக் கவனித்து யோகநாதனே செய்தி கொண்டு வந்து தந்தார். இடையில் ஒரு நாள் யோகநாதனுக்கு அவசரமாக லீவு தேவைப்பட்டது. தமக்காக நீதிமன்றத்துக்குச் சென்று வழக்குச் செய்தியை எடுத்துக் கொடுக்குமாறு இராஜகோபாலை, யோகநாதன் கேட்டிருக்கிறார். அவரும் சம்மதித்திருக்கிறார்.

வழக்கு விசாரணைச் செய்தி இராஜகோபால் கொண்டு வந்து, பத்திரிகையிலும் வெளிவந்து விட்டது. இச்செய்தியில் தவறு கண்டு பிடித்த

வி. என். நவரத்தினம் நீதியரசரிடம் இது பற்றிப் புகார் செய்தார்.

"நாளை காலை 'ஈழநாடு' இராஜகோபால் நீதிமன்றத்தில் சமூகமளித்து விளக்கம் தரவேண்டும்" என்று நீதிமன்றத்திலிருந்து சமன்ஸ் வந்து விட்டது. மாலை நேரம் சமன்ஸ் வந்தது. என்ன செய்வதென்று தெரியாமல் யோகநாதனும், இராஜகோபாலும் மற்றும் அவர்களது சகாக்களும் மூலைக்கு மூலை நின்று யோசிப்பதும், வெளியே ஓடித் திரிவதுமாக இருந்தனர். என்னிடம் வந்து யோகநாதன் யோசனை கேட்டார். தமிழ்க் காங்கிரசில் தான் எஸ். ஆர். கனகநாயகம் மற்றும் பல வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் உதவி பெறலாமே என்று சொன்னேன். எல்லோரிடமும் கேட்டு விட்டோம். இந்த விஷயத்தில் எதுவும் செய்ய முடியாது என்று அவர்கள் கையை விரித்துவிட்டார்கள் என்று யோகநாதன் சொன்னார். இராஜகோபால் விழிபிதுங்கி நின்றார் !

புகார் செய்த சாவகச்சேரிப் பிரதிநிதி

வி. என். நவரத்தினத்திடமே சென்று காலில் விழுவதைத் தவிர வேறு வழியில்லையென்று சொன்னேன்.

தான் போனாலும், இதற்கு அவர் சம்மதிக்க மாட்டார் என்று யோகநாதன் மெதுவாக நழுவிக் கொண்டார். இராஜகோபால் பரிதாபமாக நின்றதுடன் மற்றவர்கள் எல்லோரும் கைவிட்ட நிலையில் !

நவரத்தினத்திடம் தான் நேரடியாகப் போக முடியாதென்றும், என்னை உதவி செய்யுமாறும் வேண்டிக் கொண்டு நின்றார், பரிதாபமாக இருந்தது.

நான் கதிரவேற்பிள்ளையுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நவம் யாழ்ப்பாணத்தில் எங்கே நிற்கிறார் என்பதை அறிந்து கொண்டதுடன், இந்த விஷயத்தில் வேறு என்ன செய்யலாம் என்பதையும் விசாரித்தேன். வேறு எவரும் இதில் உதவ முடியாதென்றும், நவம் தான் இதற்கு வழி சொல்ல வேண்டுமென்றும், இன்னும் சிறிது நேரத்தில் நவம் தமது வீட்டுக்கு வருவாரென்றும் சொன்னார்.

சிறிது நேரம் கழித்துக் கதிரவேற்பிள்ளை வீட்டுக்குத் தொடர்பு கொண்டு, நவத்துடன் பேசினேன். நான் தங்களைச் சந்திக்க வேண்டுமென்றேன். நீங்கள் என்னைச் சந்திப்பதற்கு முன் அனுமதி தேவையோ, எப்போதும் போல் நீங்கள் மட்டும் சந்திப்பதற்குத் தடையில்லையே என்றார்.

நான் இன்னொருவரையும் கூட்டிக் கொண்டு வருகிறேன் என்றேன்.

"செய்தி" நிருபர்களை நான் சந்திக்கத் தயாராக இல்லை, தேவையுமில்லை" என்று சொல்லிவிட்டார். நீண்ட நேரம் அவருடன் வாதாடிக் கெஞ்சிச் சந்திப்பதற்குச் சம்மதம் வாங்கிவிட்டேன். இராஜகோபாலையும் கூட்டிக்கொண்டு, யாழ். நகரில் கடையிற்சாமி கோயில் ஒழுங்கை முடிவில், கல்லூரி வீதியில் இருந்த கதிரவேற்பிள்ளை வீட்டுக்குப் போனேன். அந்த வீட்டில் தான் தமிழரசுக் கட்சி எம். பிக்கள், வழக்கறிஞர்கள் பலரும் வந்து சந்திப்பதும்,

சிலர் தங்கியிருப்பதுமுண்டு. அங்கே நவத்தைச் சந்தித்து இராஜகோபாலுடைய நிலையை விளக்கிக் கூறினேன். நான் ஒன்றும் செய்ய முடியாது என்று முதலில் கூறிவிட்டார். பின்னர் இராஜகோபாலிடம், உமக்கும் எனக்கும் ஏதாவது தகராறு,

> **“புறாவ் றீடர் மாணிக்கத்திடம் நஷனல், வேட்டி இரவல் வாங்குவதென்று தீர்மானித்து, மாணிக்கத்தைத் தேடி இரவு பத்து மணிக்கு மேல் அவர் தங்கியிருந்த அந்திம காலச் சங்கக் கட்டிடத்தில் கண்டு பிடித்து, உடுப்புக்களை இரவல் வாங்கி, மறுநாள் காலை இராஜகோபால் நீதிமன்றத்துக்கு வந்தார், நானும் சென்றேன்.**
>
> **நவம், ஆலால் வந்து சேருவதற்கு முன்பே அன்ரனி சேம்பரில் நீதியரசரைச் சந்தித்துப் பிரச்சினைக்கு முடிவு கண்டு கொண்டார். நவத்தின் ஒப்புதல் பெற்றே இது நடந்தது.”**

பிரச்சினை எதுவும் உண்டா, உமக்கும் எனக்கும் ஏதாவது தொடர்புண்டா, நீரும், நானும் எப்போதாவது சந்தித்திருக்கிறோமா? என்று பல கேள்விகள் கேட்டார். நீங்கள் பத்திரிகைகளில் எழுதிய போது நான் ஏதாவது அதுபற்றி உங்களிடம் கேட்டிருக்கிறேனா? உங்களுக்கு எழுதுவதற்கு உரிமை இருக்கிறது. இப்பொழுது எனக்குள்ள உரிமையை நான் பயன்படுத்தியிருக்கிறேன். உங்களை ஏன் எழுதினாய் என்று கேட்க முடியாது, நான் கேட்க மாட்டேன். இப்பொழுது எனது தொழில், எனக்குள்ள உரிமையை நான் பயன்படுத்தியிருக்கிறேன் என்று கூறிவிட்டார்.

இதன் பின் வேறு வழியில்லை என்ற நிலையில் நீங்கள் எடுத்த நடவடிக்கையில் குற்றம் காணவில்லை. 'ஈழநாடு' பத்திரிகையின் மதிப்பும் கேள்வியாகிவிடும்,

எனக்கும் தேவையில்லாத பிரச்சினையென்றேன்.

சிறிது மனம் இளகிய நவம், தாம் கொடுத்த புகாரைத் தாமே திரும்பப் பெற முடியாதென்று கூறி மற்றொரு அட்வகேட் மூலம் மனுச் செய்யலாம் என்றார்.

ஒரு அட்வகேட் என்றதும், ஆலாலைப் பிடி என்று கதிரவேற்பிள்ளை யோசனை சொன்னார். அவரே ஆலாலைத் தொலைபேசியில் பிடித்து என்னிடம் தந்தார். ஒரு சின்னப் பிரச்சினை, உங்கள், உதவி தேவை என்று ஆலாலிடம் சொல்லி, நான் நிற்குமிடத்தையும் தெரிவித்தேன். "உடனே அங்கே வருகிறேன்" என்று கூறிய ஆலால், சிறிது நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தார்.

நவம், ஆலால், கதிரி ஆகிய மூவரும் ஆலோசித்தனர். இனி ஒரு புறக்டர் தேவை என்றனர். அன்ரனியைப் பிடிக்கலாம் என்று அவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு

ஆலால் சுந்தரமே அவருடன் பேசிச் செய்ய வேண்டியது பற்றித் தெரிவித்துச் சம்மதம் பெற்றுக்கொண்டனர்.

நாளை காலை, இராஜகோபாலை நீதிமன்றத்துக்கு வருமாறும், தாங்களும் வந்து ஆவன செய்வதாகவும் சொன்னார்கள்.

இராஜகோபாலும், நானும் அலுவலகம் திரும்பினோம்.

இனி இராஜகோபால் வல்வெட்டியிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்று, காலையில் வர முடியாது. இரவு இங்கேயே தங்கலாம். ஆனால், காலையில் நீதிமன்றத்துக்குச் சாதாரண உடையில் செல்ல முடியாது. அதுவும் நீதியரசர் தம்பையா மிகவும் கண்டிப்பானவர் !

கோட், சூட், ரை என்று பூரணமாக உடை அணிய வேண்டும்.

அல்லது வேட்டியும், நஷனலும் உடுக்க வேண்டும். இவற்றுக்கு எங்கே அந்த நேரத்தில் போவது?

புறாவ் றீடர் மாணிக்கத்திடம் நஷனல், வேட்டி இரவல் வாங்குவதென்று தீர்மானித்து, மாணிக்கத்தைத் தேடி இரவு பத்து மணிக்கு மேல் அவர் தங்கியிருந்த அந்திம காலச் சங்கக் கட்டிடத்தில் கண்டு பிடித்து, உடுப்புக்களை இரவல் வாங்கி, மறுநாள் காலை இராஜகோபால் நீதிமன்றத்துக்கு வந்தார், நானும் சென்றேன்.

நவம், ஆலால் வந்து சேருவதற்கு முன்பே அன்ரனி சேம்பரில் நீதியரசரைச் சந்தித்துப் பிரச்சினைக்கு முடிவு கண்டு கொண்டார். நவத்தின் ஒப்புதல் பெற்றே இது நடந்தது.

இராஜகோபால் நிம்மதியுடன் திரும்பினார். அரசியலில் அவர் படித்த முதல் பாடம் இதுவாகத்தானிருக்கும்.

இதுவே கடைசிப் பாடமாகவுமிருந்திருக்க வேண்டும். ஆனாலும் இதையெல்லாம் இராஜகோபால் பின்னர் மறந்து விட்டதாகவே நினைக்கிறேன்.

# ஒரு சகாப்தத்தின் முடிவு



*"கனவில் கலைய மறுக்கின்றாய்"*

'கடந்து வந்த பாதையெனும்
நினைவுகட்கும்
கடக்கப்போகும் பாதையெனும்
கனவுகட்கும், இடையில்
எங்கிருந்து இங்கே
இங்கிருந்து எங்கே
என்கின்ற கேள்விகட்கு
எவ்வித விடையும் தெரியாமல்
வந்த பாதை சரியா?
வலமா? இடமா? இல்லை
முன்னே முடங்கிச் செல்லும்
முட்கள் செறிந்த பாதையா?'

-எம்.எச்.எம்.அஷ்ரஃப்
("நான் எனும் நீ" கவிதைத்
தொகுதி பக்கம் - 61)

அஷ்ரஃப்புடைய மரணச் செய்தி நம்மை வந்தடைந்தபோது யார் யாரெல்லாம் களிப்புறுவர் என நாம் நம்பியிருந்தோமோ, அவர்கள் அனைவருமே ஆற்றாது அழுது புரண்ட நிஜம் அஷ்ரஃப் யார் என்பதை நமக்கு நிதர்சனமாக உணர்த்துகிறது இந்தப் பிரிவு. ஒரு பொய்யாக இருந்து விடக்கூடாதா என்று ஒவ்வொரு முஸ்லிம் தனிமனிதரும் ஏன் எண்ணத் தலைப்பட்டார்? இங்கு தான் அஷ்ரஃபுடைய மிகப்பெரும் ஆளுமையை நாம் அடையாளம் காண்கின்றோம். முஸ்லிம்களைப் பொறுத்தவரை அஷ்ரஃப் என்பவர் வெறுமனே ஒரு தனி மனிதரல்ல. நெருக்குவாரங்கள் நிறைந்த ஒரு காலகட்டத்தில் நிர்க்கதிக்குள்ளான ஒரு சமூகத்தின் கனவுகளையும் ஒட்டுமொத்த அபிலாஷைகளையும் தன் தோள்களில் சுமந்து சென்ற ஒரு துருவ நட்சத்திரம்.

பேரினவாதக் கட்சிகளின் எடுப்பார் கைப்பிள்ளைகளாக தமது அரசியல் தனித்துவம் பற்றிய எந்தப் பிரக்ஞையுமில்லாமல் வாழ்ந்த முஸ்லிம் சமூகத்தை முற்றிலும் புதியதோர் அரசியல் கலாசாரத்தை நோக்கி அவர் நகர்த்தினார். தனித்துவ அரசியல் பற்றிய பிரக்ஞையை முஸ்லிம்களின் ஆன்மாவில் ஊன்றி விதைக்கும் பாரிய சவாலில் மிகக் குறுகியதொரு காலத்தில் அவர் பெரும் வெற்றியும் பெற்றார். சமகால முஸ்லிம்களது வரலாற்றை உன்னிப்பாக அவதானிக்கும் எவரும் எண்பதுகளின் பிற்கூறில் முனைப்பாக மேற்கிளம்பிய முஸ்லிம் விரோத சதிகளை மிகத் தெளிவாக அறிவர், நெருக்குதல்களும் பதற்றமும் நிறைந்த அந்த நாட்களில் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தினது உணர்வுகளுக்கு வடிகாலாக முஸ்லிம் காங்கிரஸ் என்ற தேசிய அரசியல் நிறுவனத்தை அஷ்ரஃபும் அவரது சகாக்களும் முஸ்லிம் சமூகத்தின் ஒரே தெரிவாக முன்வைத்தனர். அதனது ஆரம்ப காலத்தில் முஸ்லிம்களின் ஆன்மாவாகவே அக்கட்சி எதிரொலித்தது. இது வரலாற்றின் மாற்ற முடியாத மறைக்க முடியாத நிஜம்.

பின்னாட்களில் முஸ்லிம் காங்கிரஸ் - குறிப்பாக அஷ்ரஃப்பின் அரசியல் பாதை படித்த முஸ்லிம்கள் மத்தியில் மிகக் கடுமையான அதிருப்தியையும் எதிர் விமர்சனங்களையும் ஏற்படுத்தியது என்பதும், யதார்த்தமே. அஷ்ரஃப்புக்கு எதிரான விமர்சனங்கள் வலுக்கத் தொடங்கிய காலகட்டத்தில் கூட அவரது ஆதரவுத் தளம் பலமாகவே இருந்தது. ஆனாலும் சமீபகாலமாக அதில் வெடிப்புகள் விழத்தொடங்கியிருந்தமையையும் நாம் அறிந்ததே. அஷ்ரஃப்புக்கு எதிரான விமர்சனங்கள் மூன்று வகையினதாக அமைந்திருந்தன.

முஸ்லிம் காங்கிரசின் உள் இருந்து கொண்டே அவரை விமர்சித்தல் முதல் வகை. முஸ்லிம்களுக்கென்று இருக்கும் ஏக அரசியல் நிறுவனமான முஸ்லிம் காங்கிரசைப் பலவீனப்படுத்தாது, அஷ்ரஃப்பை நெறிப்படுத்தி முஸ்லிம் அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்பது இவ்வணியினரது வாதம். ஆனால் கொள்கையளவில் இந்நிலைப்பாடு சரியாக இருந்த போதிலும் நடைமுறையில் அது தோல்வியையே தழுவும் என மற்றொரு தரப்பினர் நம்பினர். அவர்களைப் பொறுத்தவரை அஷ்ரஃப்புடைய ஒரு தலைப்பட்சமான நடவடிக்கைகளிலிருந்து கட்சியை விடுவித்து கட்சியின் உள்ளும், புறமும் கூடியளவு ஜனநாயக சூழலொன்றைக் கட்டமைப்பதனூடாக மட்டுமே முஸ்லிம் அரசியலை முற்போக்காகவும், வினைத்திறனுடையதாகவும் மாற்ற முடியும். முஸ்லிம் காங்கிரசிலிருந்து அஷ்ரஃப் என்ற நபரைக் களைய வேண்டும் என்பதல்ல. மாறாக அவரிடமுள்ள (அல்லது அஷ்ரஃபிஸத்திலுள்ள) பலவீனமான கூறுகளைக் களைந்தாக வேண்டும் என இவர்கள் அழுத்திக் கூறினார்.

இந்த இரு அணியினருமே முஸ்லிம்களது தனித்துவ அரசியல் பாதையின் மீது நம்பிக்கை கொண்டவர்கள். ஆனால், மூன்றாவது தரப்பினர் அஷ்ரப் விரோத அரசியலையே முதன்மைப்படுத்தினர். இவர்களுள் கணிசமானோர் முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்த தனித்துவ அரசியல் குரலை நசுக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தனர். மு.காவிற்கு எதிரான பேரினவாத முகாம்களின் செல்லப் பிள்ளைகளாகவோ அல்லது அனுதாபிகளாகவோ தான் இவர்கள் இருந்தனர். இவர்களுக்கு அஷ்ரஃப்பின் தலைமை ஒரு சவாலாகவே அமைந்திருந்தது. இம் மூன்றாவது தரப்பினர். கிழக்கு மாகாண முஸ்லிம் ஒருவர் தேசிய அரசியல் அரங்கில் முஸ்லிம்களது தலைமையைக் கையேற்பதையும் நாட்டின் பொது அரசியல் போக்கை நிர்ணயிப்பதையும் ஏற்றுக் கொள்ள முடியாத சபல புத்தியோடும் காழ்ப்புணர்ச்சியோடும் இயங்கினர். இவர்களது சந்தர்ப்பவாத சுயநல அரசியல் உள்நோக்கம் நாம் நன்கறிந்துதான். முஸ்லிம்களை பேரினவாத முகாம்களுக்கு மீண்டும் இட்டுச் செல்வதே இவ்வணியினரது ஒரே நோக்கமாக இருந்தது.

முஸ்லிம்களை ஒரு தேசமாகக் கட்டமைப்பதிலும், அவர்களது அடையாளத்தை நன்கு ஸ்தாபிப்பதிலும் அஷ்ரஃப் ஆற்றிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பை எவரும் எளிதில் நிராகரித்துவிட முடியாது. முஸ்லிம் பெரும்பான்மை அதிகார அலகொன்றை வென்றெடுப்பதனூடாக மட்டுமே முஸ்லிம்களது சமூக இருப்பை உறுதி செய்ய முடியும் என அவர் தீர்க்கமாக நம்பி, அதற்காக இறுதிவரை போரடினார். அது தென்கிழக்கு அலகா அல்லது நிலத்தொடர்பற்ற முஸ்லிம் பெரும்பான்மை அலகா அல்லது வேறு ஏதேனும் வடிவமா என்பதில் நமக்குக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், அந்த எண்ணக்கருவின் அரசியல் முக்கியத்துவத்தையும் பெறுமானத்தையும் நாம் மறுதலிக்க முடியாது.

அஷ்ரஃபுடைய மிகக் கடுமையான விமர்சகர்கள் கூட ஏற்றுக் கொள்ளும் ஒரு விடயம் அவரது அசைக்க முடியாத ஆளுமை. அந்த ஆளுமையின் குறைபாடுகளை நாம் ஈவிரக்கமின்றி விமர்சித்திருந்தோம். அந்த விமர்சனங்களின் உள்நோக்கம் நேர்மையானதாக இருந்தால், எல்லா விமர்சனங்களிற்கும் அப்பால் அவரது இருப்பும் ஆளுமையும் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்திற்கு ஒரு பலமான பாதுகாப்பு அரணாக அமைந்திருந்தது என்கிற உண்மையை ஏற்றுக்கொண்டே ஆக வேண்டும்.

அஷ்ரஃப் என்ற மனிதருக்கு பலங்கள் இருந்தது போல் பலவீனங்களும் இருந்தன. அந்தப் பலவீனங்கள் பலங்களை மிகைக்க முற்பட்டதைத் தான் நமது விமர்சனங்கள் கட்டுடைத்தன. சரியோ பிழையோ முஸ்லிம்களது தலைமைத்துவ வெற்றிடத்தை தனது சொந்தப்பாணியில் நிரப்ப அஷ்ரஃப் முனைந்தார். அதில் கணிசமான அளவு வெற்றியும் பெற்றார். இன்று அவர் இல்லாத அரசியல் சூழல் ஏற்படுத்தியிருக்கும் வெறுமையைக் கற்பனை செய்யக் கூட முடியாமல் இருக்கிறது.

பௌத்த சிங்கள பேரினவாத சக்திகளின் ஒரே இலக்காக அஷ்ரஃப் குறிவைக்கப்பட்டார். அஷ்ரஃப்பைக் குறிவைப்பதனூடாக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் எதிரியாகக் கட்டமைப்பது தான் பேரினவாதக் கூறுகளின் உள்நோக்கமாக இருந்தது. கங்கொடவில சோம தேரருடனான தீகவாபி தொடர்பான டி.என்.எல். தொலைக்காட்சி விவாதத்தில் பேரினவாத சக்திகளின் முகத்தில் அஷ்ரஃப் ஓங்கி அறைந்தார்.

➡

## அஷ்ரப்பிற்கு பிறகு

அஷ்ரஃப்பிற்குப் பிந்திய முஸ்லிம் அரசியல் என்ன வடிவமெடுக்கும் அல்லது எவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்ளும் என்பது தற்போது பரவலான விவாதத்திற்குள்ளாகியுள்ளது. உடனடிப் பிரச்சினையாக எல்லோரது கவனத்தையும் ஈர்த்த போது மு.காவின் அடுத்த தலைமையை யார் கையேற்கப் போகின்றனர் என்பது தான் புதிய தலைமையைத் தெரிவு செய்வதில் குழப்பங்கள் ஏற்படும் என்ற ஊகங்களும் பரவலாக அடிபட்டன.

றவூப் ஹக்கீம் தான் தற்போது கட்சியில் உள்ளவர்களுள் தலைமைத்துவத்தைக் கையேற்பதற்கு ஆகப் பொருத்தமானவர் என்பதில் சந்தேகமில்லை. எனினும், கிழக்கு மாகாணத்தில் தனது பலமான ஆதரவுத் தளத்தைக் கொண்டுள்ள மு.காவின் தலைமையைக் கிழக்கிற்கு வெளியே உள்ள ஒருவர் பொறுப்பேற்பதா என்ற விவாதங்கள் தற்போது மேலெழத் தொடங்கியுள்ளன. பாரம்பரியமாக தென்னிலங்கைத் தலைமைத்துவமே முஸ்லிம் அரசியலை வழிநடாத்தியது. இந்த மரபை உடைத்து கிழக்குத் தலைமை கூட தேசிய அரங்கில் முஸ்லிம்களது தலைமையைக் கையேற்க முடியும் என முதன்முதலில் யதார்த்தமாக நிறுவியவர் அஷ்ரஃப் ஒருவர் மட்டுமே. இந்த அம்சம் அஷ்ரஃபுடைய அரசியல் வாழ்வின் மிக முக்கியமான ஒரு சாதனையாகக் கொள்ளப்படுகிறது. இவ்வாறான ஒரு சூழலில் கட்சி ஆதரவாளர்களை சமாதானப் படுத்தும் நோக்கிலேயே அஷ்ரஃபுடைய பாரியார் ஃபேரியல் அஷ்ரஃப், றவூப் ஹக்கீமுடன் கூட்டுத்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக நம்ப இடமுள்ளது. எனினும், பொதுத்தேர்தலின் பின் இது பூதாகாரமாக வெடிக்கும் வாய்ப்புகளையும் நாம் மறுதலிக்க முடியாது.

எது எப்படியோ மு.காவின் ஆதரவாளர்களோடு சேர்த்து கணிசமானளவு அனுதாப வாக்குகள் மு.காவிற்குக் கிடைக்கும் வாய்ப்பு இப்போது ஏற்பட்டுள்ளது. அஷ்ரஃபுடைய இடத்திற்கு அவரது பாரியாரை அம்பாறை மாவட்ட பொ.ஐ.மு. தலைமை வேட்பாளராக மு.கா. நியமித்திருப்பது இலங்கைக்குப் பழகிப்போன "விதவை அரசியலின்" அனுதாப அலையை நம்பித்தான் என்பது நாமும், எல்லோரும் நன்கு அறிந்த விடயம். இந்த அனுதாப அலையையும் மீறி பிரதேசவாதம், பிராந்தியவாதம் என்பன வழக்கம்போல வாக்காளர்களது நடத்தையைத் தீர்மானிக்கும் குறிகாட்டியாகச் செயற்படும் என்ற அம்சத்தையும் கடந்தகால முஸ்லிம் அரசியலை உன்னிப்பாக அவதானிக்கும் எவரும் மறுக்க முடியாது என்றாலும் அனுதாப அலை மு.காவின் பாரம்பரிய வாக்கு வங்கிகளான முஸ்லிம் பெண்கள் மத்தியில் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும். ஃபேரியல் அஷ்ரஃப் ஒரு பெண்ணாக இருப்பதும் மிக முக்கியமானது. அவர் அவ்வாறு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்படுவாராயின் பாராளுமன்றம் நுழையும் முதல் முஸ்லிம் பெண்ணாக இருப்பார். மேலும் இது இலங்கை முஸ்லிம்களது அரசியல் வரலாற்றில் ஒரு புரட்சிகரமான மாற்றமாகவே எடுத்துக் கொள்ளப்படும்

நெருக்கடி மிகுந்த சூழலில் முஸ்லிம்களது அரசியல் எதிர்காலம் குறித்து பொறுப்புணர்வோடு சிந்திக்கும் எவரும் சகல அரசியல் கருத்து வேறுபாடுகளையும் மறந்து ஓரணியில் இணைவதன் மூலம் முஸ்லிம்களது தேசிய அரசியல் நிறுவனத்தைப் பலப்படுத்த வேண்டும் என்ற குரல்கள் கிழக்கில் பரவலாக மேலெழுந்துள்ள. இதன் நடைமுறைச் சாத்தியத்தைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். சேகு இஸ்ஸதீனை மீண்டும் மு.கா. உள்வாங்க வேண்டும் என்ற கருத்தும் பொதுத்தேர்தலின் பின்னர் தான் இந்த விடயங்கள் கூடுதல் முக்கியத்துவம் பெறும் எனக் கருத இடமுள்ளது.

முகாவைக் கலைத்து தேசிய ஐக்கிய முன்னணியை (நுஆ) வளர்க்கும் அஷ்ரஃபின் இறுதி நேர அரசியல் தவறை மு.காவின் புதிய தலைமையும் அரசியல் அதியுயர் பீடமும் மீள்பரிசிலனைக்குட்படுத்தி நிராகரிப்பதன் மூலம் மு.காவைப் பலப்படுத்துவதே முக்கியமான அம்சமாகும்.

எது எவ்வாறாயினும் முஸ்லிம் காங்கிரஸ் சுயவிமர்சனம் செய்வதனூடாக உட்கட்சி ஜனநாயகத்தைக் கட்டியெழுப்புவதே அதனது உடனடிப் பணியாக அயைம முடியும். கடந்த காலங்களில் கட்சி தொடர்பாகவும், அஷ்ரஃபை முன்வைத்தும் செய்யப்பட்ட விமர்சனங்களின் நியாயத்தன்மையை சீரியசாக விவாதிப்பதனூடாகவும் குறைபாடுகுளைக் களைந்து புத்துணர்வோடு கட்சியை மீளக் கட்டியமைப்பதே அதன் முன் இன்றுள்ள ஒரேயொரு தெரிவாகும். உடனடியாக அல்லாவிடினும் பொதுத்தேர்தல் அலைகள் ஓய்ந்த பின்னாவது இவ்விடயம் தொடர்பான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வது மிக அவசியமாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



ஒரு சிறுபான்மை அரசியல் தலைவரின் மதிநுட்பமான பதில்களின் முன்னே பௌத்த சிங்களப் பேரினவாதம் தூள் தூளாகச் சிதறித் தோற்றுப்போனதை கடைசிவரை அவர்களுக்குச் சகிக்க முடியாமலேயே இருந்தது.

'மாக்கான் மாக்கார், ரஷாக் ....... முஸ்லிம் தலைமைகளே தமது தேவை' என சண்டே டைம்ஸில் "கும்பகர்ண" எழுதுகிறார். அஷ்ரஃப்பை பேரினவாத முகாம்களால் கடைசிவரை செரித்துக் கொள்ள முடியவில்லை. அவர்களுக்கு அஜீரணமாகும் அஷ்ரஃபின் தலைமையில் ஏற்பட்ட வெற்றிடம் இந்த இக்கட்டான சூழலில் நமக்கு ஒரு மிகப்பெரிய இழப்பேயாகும்.

மறுபுறம் தமிழ்த்தேசியவாத சக்திகளின் பிற்போக்குக் கூறுகள் முஸ்லிம் விரோத நிலைப்பாட்டை எடுத்த போது அதையும் அஷ்ரஃப் துணிச்சலோடு எதிர்கொண்டார். ஒவ்வொரு முஸ்லிமின் உள்வீட்டிற்கும் துப்பாக்கி ஏந்திவந்த கொலைஞர்களின் வடிவில் மரணம் தேடி வந்தபோது அஷ்ரஃபும் மு.காவும் நமக்குப் பாதுகாப்புக் கவசங்களாக அமைந்த நிதர்சன உண்மையை இன்று நாம் யாரேனும் மறுக்க முடியுமா? இணைந்த வடகிழக்கினுள்ளேயே தமிழர்களுக்கான நியாயமான அரசியல் தீர்வு காணப்பட்ட வேண்டும் என்பதில் அஷ்ரஃப் உறுதியாக இருந்தார். முஸ்லிம்களது பாதுகாப்பை, சமூக இருப்பை உத்தரவாதம் செய்யும் ஏற்பாடுகள் செய்யப்பட்டால் மட்டுமே வடகிழக்கு இணைப்பைத் தாம் ஏற்க முடியும் என்ற அவரது நிபந்தனையிலுள்ள நியாயத் தன்மையை பொறுப்புணர்வோடு சிந்திக்கும் எவரும் அலட்சியம் செய்துவிட முடியாது. தீவிர தமிழ்த் தேசியவாத சக்திகளால் இதற்காக அவர் வன்மையாகக் கண்டிக்கப்பட்டு வந்த போதிலும் அவர் தனது நிலைப்பாட்டை விட்டுக்கொடுக்க வில்லை.

தனது இறுதிக் கட்டத்தில் மு.காவை கலைத்துவிட்டு தேசிய ஐக்கிய முன்னணியையே (நுஆ) தான் முன்னெடுக்கப்போவதாக அஷ்ரஃப் உறுதியாக அறிவித்திருந்தமை மிகப் பெரிய வரலாற்றுத் தவறாகும். முஸ்லிம்களுக்கென்று பலமான அர்சியல் இயக்கமொன்றை இல்லாமலாக்குவதன் பின் விளைவு மிகப் பாரதூரமானதாகவே அமையும்.

எமது அடிப்படை அபிலாஷைகளை விட்டுக்கொடுக்காது மற்ற சமூகங்களுடன் நல்லுறவையும், ஐக்கியத்தையும் இணக்கத்தையும் ஏற்படுத்துவதே ஒரு பன்மைச் சமூகத்தில் நாம் செய்ய வேண்டிய பணியாகும்.


அஷ்ரஃபுடன் நமக்கு நிறையக் கருத்துவேறுபாடுகள் இருந்தன. ஆனாலும் தான் சரியென நம்பிய கொள்கைகளுக்காக கடைசி வரை போராடும் துணிவும் வல்லமையும் அவருக்கிருந்தது. மைய நீரோட்ட அரசியலில் சிறுபான்மை மக்களது குரலை ஓங்கி ஒலிப்பதில் தனக்குச் சரியெனப் பட்டதை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துவதில் அஷ்ரஃபுக்கு அலாதியான ஆற்றல் இருந்தது. அஷ்ரஃபுடைய இழப்பால் முஸ்லிம் சமூகம் தனது குரலை இன்று இழந்திருக்கிறது. அந்தக் குரலை மீண்டும் உயிர்ப்பிக்கும் பணிதான் இன்று நம் முன்னுள்ள மிகப் பெரிய சவாலாகும்.

**ஸிராஜ் மஷ்ஹூர்**

# அஷ்ரஃப் இல்லாத அரசியல்!

## -முஸ்லிம், தமிழ் ஸ்ரீலங்கா மட்டங்களில் அஷ்ரஃப்பின் மறைவு ஏற்படுத்தியுள்ள தாக்கம் பற்றிய ஒரு முன் கூறல் குறிப்பு

இருபதாம் நூற்றாண்டுக் காலப்பிரிவில் தோன்றிய இலங்கை முஸ்லிம் தலைவர்களுள் அஷ்ரஃப் மிக வித்தியாசமானவராக இருந்தார். இதை ஐந்து முக்கிய அம்சங்களில் காணக் கூடியதாகவிருந்தது.



1. அஷ்ரஃப்புக்கு முன் வந்தவர்கள் தேசிய நீரோட்ட அரசியலில் பிரதான சிங்களக் கட்சிகளுள் ஒன்றான யு.என்.பி. அல்லது ஸ்ரீ.ல.சு.கவைச் சேர்ந்தவர்களாக நின்று அதனாலும், அதற்குள்ளும் தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்டவர்களே. ஜாயா, கலீல், பதியுதீன் ஆகிய மூவருக்கும் இது பொருந்தும். ராசீக் பரீது இரண்டு கட்சிகளுக்கும் சென்று சென்று வந்தவர். அசீசுக்குக் கட்சித் தெரிவில் பிரச்சினையிருந்தது.

   அஷ்ரஃப் முதலில் முஸ்லிம்களுக்கென ஒரு கட்சியை நில அடிப்படையில் வளர்த்தெடுத்து, அந்தப் பலத்தின் அடியாக சிங்களக் கட்சிகளிடையே தனது பலத்தை வளர்த்தெடுத்துக் கொண்டவர்.

   அஷ்ரஃப் கிழக்கில் உதித்து, மேற்கு நோக்கிச் சென்றவர். அவருக்கு முன் முஸ்லிம் தலைமை மேற்கிலும், மத்தியிலிருந்தும் கிழக்குக்குச் சென்றது.

   இதனால், சிங்களக் கட்சிகளின் முற்றுமுழுதான மேலாட்சிக்குள் சிக்கிவிடவில்லை.

2. இந்த நிலைப்பாடு காரணமாக, அஷ்ரஃப்பின் அரசியலில் இன்னொரு விஷேடதன்மை காணப்பட்டது. அதாவது, முஸ்லிம்களின் நன்மைகளுக்கு சிங்களக் கட்சிகளின் கைகளை எதிர்பார்த்திருக்க வேண்டிய அவசியம் அஷ்ரஃப்புக்கு இருக்கவில்லை. அதிலும் முக்கியம், சிங்களக் கட்சிகளை திருப்திப்படுத்துவதன் மூலமே முஸ்லிம்களுக்கானவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நிற்கவில்லை. (தனது அமைச்சை நிர்வகித்த முறைமை அதைக் காட்டிற்று)

3. அஷ்ரஃப் தனது மொழி அடையாளத்தை என்றும் மறைத்தது கிடையாது. தனது மொழி தமிழ் என்பதில் அவர் தயக்கம் காட்டியதில்லை.

   இதற்குக் காரணம், அவரின் தளம் தென் மாகாணமோ, மத்திய மாகாணமோ, மேல் மாகாணமோ அல்ல: தளம் கிழக்கு ஆகும். அதுவும் தென் கிழக்கு என்று வரையறுக்கப்பட்டும் சொல்லப்பட்டது.

   கிழக்கிலிருந்து கிளம்பி, இலங்கை முழுவதுக்குமான முஸ்லிம் தலைமை பற்றிய ஒரு கருத்தாடலைத் தொடக்கி வைத்ததே அஷ்ரஃப் தான்.

4. அஷ்ரஃப், முஸ்லிம் தலைமைத்துவத்திற்கு அப்பால் சென்று, நாடு முழுமைக்குமான, அனைத்திலங்கைக்குமான - ஒரு அரசியல் இலட்சியம் பற்றிப் பேசத் தொடங்கினார்.

5. சிங்களக் கட்சிகளிடையேயும் அனைத்திலங்கை மட்டத்திலும் அஷ்ரஃப்பின் அரசியல் முற்று முழுதான தமிழ் விரோத, தமிழர் விரோத அரசியலாக அமையவில்லை. அஷ்ரஃப் காலத்துத் தமிழர் அரசியலும் மாறியிருந்தது.



சிங்களத்தின் மேலவாரியான பொது ஆட்சிக்குள் இருந்து கொண்டு தங்களைப் பிரித்தெடுத்துக்கொள்ளாத முஸ்லிம் அரசியல்வாதிகளுக்குப் பழகிப் போயிருந்த சிங்களத் தலைமைகளுக்கு அஷ்ரஃப்பை "முகாமை செய்வது" என்பது மிகச் சிரமமாக இருந்தது.

சுருக்கமாகச் சொன்னால், இலங்கைத் தமிழரைப் பலவீனப்படுத்துவதற்கான எடுபிடிக் கருவியாக அஷ்ரப் இருக்கவில்லை. அவர் விரும்பாத எதையும் அவரைக் கொண்டு செய்விக்க முடியவில்லை.

இந்த நிலையின் காரணமாக சிங்களக் கட்சிகளுக்கும், சிங்களக் கட்சிகளுக்குள் இருந்து வந்த முஸ்லிம் தலைமைகளுக்கும் அஷ்ரப் பிரச்சினையானார்.

(யு.என்.பிக்குள்ளிலிருந்தும் அதற்கு அப்பாலான ஒரு ஆளுமையைப் பெற்றிருந்தவர் ஏ.சி.எஸ். ஹமீது. ஆனால், ஹமீது தன்னைக் கிழக்கிலங்கை முஸ்லிம் தலைவராக நோக்கியதில்லை.)

தமிழரைப் பொறுத்தவரையில் கூட பின்னோக்கிப் பார்க்கும் பொழுது அஷ்ரஃப்பிடம் இரண்டு முக்கிய அம்சங்கள் காணப்பட்டன.

1. தமிழர் போராட்ட முறையை அவர் எதிர்த்தார். ஆனால், போராட்டத்தைக் கொச்சைப்படுத்தவில்லை. குறிப்பாக அண்மைக் காலங்களில் தமிழர் - முஸ்லிம் நல்லுறவில் விரிசல் ஏற்படக் கூடாது என்பதில் கவனமாக இருந்தார்.

2. அஷ்ரஃப், வடக்கு - கிழக்குப் பிரதேசத் தனித்துவத்தை எதிர்க்கவில்லை. அவர் கேட்டது, வடக்கு - கிழக்குக்குள், அங்கு வாழும் முஸ்லிம்களின் நிலை என்ன என்பதே.

உண்மையை ஒத்துக்கொண்டால், இதுபற்றித் தமிழ்த் தரப்பில் நிச்சயமான தெளிவுகள் இருக்கவில்லை என்பதையும் ஒத்துக் கொள்ளவே வேண்டும்.

ஈழத்தின் தமிழர் பிரச்சினைத் தீர்வில் தமிழ் பேசும் மறு அலகான முஸ்லிம்களின் வகிபாகத்தைத் தெரிவு செய்வதன் அவசியத்தை அஷ்ரஃப் சின்னப்படுத்திக் கொண்டு நின்றார்.

இவை தான் அஷ்ரஃப் என்னும் ஆளுமை ஏற்படுத்திய தாக்கம், வகித்த இடம், குறிபிட்டு நின்ற தளம்.

(முஸ்லிம்களுக்குள் - குறிப்பாக முஸ்லிம் இளம் தலைமுறையினரிடம் அஷ்ரஃப் பெற்றிருந்த இடம்பற்றி இங்கு ஆராயப்படவில்லை.)

இப்பொழுது அஷ்ரஃப் இல்லை. அதுவும் மிக நெருக்கடியான ஒரு கட்டத்தில் (தேர்தல் காலத்தின் பொழுது) அவர் மறைந்து விட்டார். மறைவின் திடீர்த்தன்மை, மறைவுக்கான சந்தேகங்களைக் கிளப்பி விட்டுள்ளது.

என்ன சொல்லி என்ன, அஷ்ரப் என்ற ஆளுமை நம்மிடையே இல்லையென்று ஆகி விட்டது.

அந்த நிஜத்தோடு வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் யார் என்ன செய்வார்கள், செய்ய வேண்டும்?

அஷ்ரஃப்பின் வாழ்ந்த கால முக்கியத்துவம், அவர் இல்லாக் காலத்தின் தொடக்க கட்டங்களைச் சுழித்துச் சுழித்து நிற்கிறது. காலின் கீழுள்ள நிலம் அதிரத் தொடங்கியுள்ளது. அசையத் தொடங்கியுள்ளது. கால்கள் நடக்காமலேயே அசைவு தொடங்கியுள்ளது.

இரண்டு கேள்விகள் முக்கியம்.

0 அஷ்ரஃப்பின் முஸ்லிம் காங்கிரசின் நிலை என்ன?

0 கூட்டணி அரசியலில் (Coalition Politics) முஸ்லிம்களின் வகிபாகம் என்ன?

அஷ்ரஃப்பின் ஆளுமையின் இயல்பு இங்கே தான் புலப்படத் தொடங்குகின்றது.

1. அஷ்ரப் மு.காவுக்குள் தனக்கு அடுத்த ஒரு தலைமைத்துவம் வளர்வதில் கவனம் செலுத்தவில்லை.

2. அஷ்ரப்பின் தலைமைப் போக்குகள் சில மு.காவை ஒரு அஷ்ரப் கட்சியாகவே ஆக்கிவிட்டிருந்தது.

சுருங்கச் சொன்னால் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தோற்ற நியாயப்பாட்டை, நிறைவு செய்கிற, அதன் வேர்ப்பலத்தைச் சீர்குலையாத பின்னுறு தலைமை மு.காவுக்குள் **உடனடியாக** இல்லை. (சேகு இஸ்ஸதீனின் பெயர் ஒவ்வொருவர் மனதிலும் கிளம்புவதை அவதானிக்க வேண்டும்.)

தேர்தல் கால குறுவட்டத் தேவைகள் மு.காவின் நீண்டகால இலட்சியங்களுக்கு இடர்விளைவிப்பதாக அமையக் கூடாது.

ஒரு முக்கியமான அரசியல் உண்மையை மு.காவினர், மு.காவுக்குள் இன்று நடக்கும் இழுபறிக் குழுவினர்கள் (அப்படி இருப்பின்) உணர்ந்து கொள்ள வேண்டும். அதாவது மு.காவின் மேலாட்சித் தொடர்ச்சியை யு.என்.பி., சு.க. **விரும்பப் போவதில்லை.** அந்த இரு சக்திகளும் இதில் மிகக் கவனமாகவே இருக்கும்.

மற்றது, யு.என்.பி, ஸ்ரீ.ல.-சு.கவினுள் அரை மந்திரிமையுடன், திருப்தியுடன் வாழ்ந்து, கல்முனை, பொத்துவில், சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்றுகளில் தட்டிக் கேட்கப்படாத "ராஜ்ய பரிபாலனம்" செய்து வந்த சக்திகளும், மீண்டும் ஒரு அஷ்ரஃப் வருவதை விரும்பப் போவதில்லை.

ஆனால், இதிலுள்ள சிக்கல் என்னவென்றால், இலங்கையின் முஸ்லிம்களுக்கு அவர்கள் தங்கள், உண்மையான மத, மொழி, நில வேர்களைப் பேணிக்கொள்வதற்கு ஒரு 'அஷ்ரஃப்" தேவை.

அதைவிட முக்கியம் என்னவென்றால், வட கிழக்குக்குள், ஒரு தென் கிழக்கின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்ட ஆரம்பகால அஷ்ரப், தமிழ் அரசியலுக்கும் தேவைப் படுகின்றது.

வரலாற்றில் வெற்றிடங்கள் தொடர்ந்து இருப்பதில்லை. வரலாற்றின் நிர்ப்பந்தங்கள் அவற்றினை நிரப்பி விடும். அந்தத் தர்க்கத்தைப் புரிந்து கொண்டவர்களே சரியான நிரப்புகையை நிறைவேற்றுவார்கள்.

'வானத்து அமரன் வந்தான் காண் வந்தது போலப் போனான் காண்'

என்று சொல்லி, கையறு நிலையில் நிற்காமல், நிலபலத்தை மையமாகக் கொண்ட முஸ்லிம் தலைமையின் தொடர்ச்சியை, முஸ்லிம்கள் பேணுவார்களா, அது முடியுமா?

○

**க.மா. இராசையா**

நன்றி - நூலகத்திட்டம்



## பெண் வேட்பாளர் தெரிவு:

# ஆண்களின் உளப்பாங்கு மாற வேண்டும்

புதிய நூற்றாண்டின் முதலாவது பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் மும்முரமாக மேற்கொள்ளப்படுகின்றன. கட்சிகள் பிரச்சாரங்களிலும், சுவரொட்டிகள் ஒட்டுவதிலும், எதிரிகளை வசைபாடுவதிலும் அதிக நேரத்தைச் செலவிடுகின்றன.

பொதுவாக இன்றைய தேர்தல் மேடைகளில் தொனிக்கும் விடயங்கள் இரண்டு உள்ளன. ஒன்று, வாழ்க்கைச் செலவு பற்றியது. மற்றையது யுத்தம் பற்றியது. இரண்டுமே பெண்களை நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கும் விடயங்கள். ஆயினும் இவ்வாறு அரசியல் மேடைகளில் முழங்கப்படுகின்ற போதிலும் பொதுத் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவம் என்பது சற்று ஏமாற்றத்தை தரும் விடயமாக உள்ளது என பலரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

செப்டெம்பர் 5ம் திகதி பெயர்ப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டதன்படி பிரதான கட்சிகளில் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை திருப்திகரமானதாக இல்லை என்கின்றனர் பெண்ணிலைவாதிகள்.

குறிப்பாக பிரதான அரசியற் கட்சிகளான பொ.ஐ.மு, ஐ.தே.க, ஜே.வி.பி என்பனவற்றில் தேசியப் பட்டியலில் பொ.ஐ.மு,2, ஜே.வி.பி-3 என்ற அளவிலேயே பெண் வேட்பாளர்கள் பங்குபற்றுகின்றனர்.

இப் பொதுத் தேர்தலில் மொத்த வேட்பாளர்கள் எண்ணிக்கை 5015, ஆசனங்களின் எண்ணிக்கை 196 ஆகும். இவற்றில் பிரதான கட்சிகளின் பெண் வேட்பாளர்கள் எண்ணிக்கையை விட சுயாதீன, சிறுகட்சிகளின் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகமாக இருப்பதனைக் காணக் கூடியதாக உள்ளது.

எவ்வாறாயினும் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கையும் போட்டித் தன்மையையும் கொண்ட பிரதான கட்சிகள் பெண் வேட்பாளர்கள் நியமனம் குறித்து எத்தகைய ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதனை அட்டவணை காட்டுகின்றது.

நாட்டின் சனத்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பெண் வாக்காளர்கள். அரசியல் கட்சிகள் பெண் வாக்காளர்களின் வாக்குகளைக் கவருவதற்கு அதிக முயற்சிகளை எடுத்து வருகின்றது. ஆயினும், 225 உறுப்பினர்கள் கொண்ட பாராளுமன்றத்தில் குறைந்தது 100 பெண் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்து அனுப்ப முடியாத நிலை காணப்படுவது கவலைக்குரியதாகும்.

1994ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மொத்தம் 1410 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இவர்களில் 55 பெண் வேட்பாளர்கள் காணப்பட்டனர். இவர்களில் 11 பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலைமையானது பெண்கள் தேர்தலில் போட்டியிட முன்வருகிறார்கள். ஆனால் கட்சிகள் அதற்கான வாய்ப்புகளை வழங்க மறுக்கின்றன என்பதையே



குமுதினி சாமுவேல்

அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பெண்களை அதிகம் கட்சிகளில் வேட்பாளர்களாக இணைத்துக் கொள்ளுமாறு பெண்ணிலைவாதிகளும், பெண்ணிலை அமைப்புகளும் விடுத்த வேண்டுகோள்களுக்கு கட்சிகள் எவ்விதம் செவி சாய்த்துள்ளன என்பது கேள்விக்குரியதாகும்.

இது குறித்து பெண்கள் தொடர்பூடக் கூட்டமைப்பைச் சேர்ந்த குமுதினி சாமுவேலிடம் அபிப்பிராயம் கேட்ட பொழுது அவர் பின்வருமாறு தெரிவித்தார்.

"கட்சிகளில் உள்ள ஆண்கள் மத்தியில் இருக்கும் உளப்பாங்கு இன்னும் மாறவில்லை எனலாம். அரசியல் ஆண்களுக்குரியதானது என கருதப்படுவதின் விளைவு இது. கட்சிகளுக்கு பெண்கள் கோஷம் போடவும், கொடி பிடிக்கவும் தேவைப்படுகின்றனர். ஆனால் கட்சி தலைமைக்கு வர பயிற்சி அளிக்கும் செயல்முறையோ, ஊக்கப்படுத்தல்களோ இல்லை எனலாம். அவ்வாறு போட்டி போட முன்வரும் பெண்களுக்கு நிதி உதவி அளிக்கவும் கட்சிகள் தயாரில்லை. அவ்வாறு நிதி உதவி அளிக்கப்படுவதும், ஊக்கப் படுத்தப்படுவதும் கட்சிகளில் இருக்கும் ஆண்களின் மனைவிமார்களுக்கும், பெண் வாரிசுகளுக்குமே.

மேலும், இன்றைய வன்முறைச் சூழலைப் பெண்கள் அரசியலில் ஈடுபடாமைக்கு காரணமாகக் காட்டுகின்றனர். வன்முறையற்ற சூழலைக் கட்சிகள் தான் ஏற்படுத்த வேண்டும். போட்டியிடும் பெண்களுக்கு தகுந்த பாதுகாப்பு உத்தரவாதத்தை கட்சி உயர்மட்டம் உறுதிப்படுத்த வேண்டும்.

இவையெல்லாம் ஆண்களின் உளப்பாங்கில் மாற்றம் ஏற்படாத வரை சாத்தியமில்லை. அத்துடன் பிரதேச மட்டத்திலிருந்து அதற்கான நடவடிக்கைகளைக் கட்சிகள் எடுக்க வேண்டும். பெரும்பாலும் பெண்கள் தான் அரசியலுக்கு வரத் தயங்குகிறார்கள் எனக் குற்றம் சுமத்தப்படுகின்ற போதிலும் பிரதேச மட்ட அரசியலில் செல்வாக்கு செலுத்திய பெண்களில் சரோஜினி யோகேஸ்வரன், சந்திரா ரணராஜா போன்றோர் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்பிரச்சினைகளை கருத்திற் கொண்டு தான் நாம் 25 சதவீத ஒதுக்கீட்டை வலியுறுத்தினோம்."

குமுதினி சாமுவேலின் கருத்து இவ்வாறு கூறுகின்ற போதும் அதிகாரம் பற்றிய பிரச்சினை வேட்பாளர் தெரிவில் முக்கியத்துவம் பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

கட்சிகளில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது பாராளுமன்றத்தில் ஆண்களின் அதிகாரத்தைக் கேள்விக்குட்படுத்தும் செயற்பாடாக மாற்றிவிடுகின்றது என்பது முக்கியமான ஒரு விடயமாகும்.

இம்முறை பிரதான தேசியக் கட்சிகளில் ஜே.வி.பி சற்று பெண்களுக்கு இடமளித்துள்ளதைக் காணலாம். போட்டியிடும் இவர்களில் பெரும்பாலான பெண்கள் மாவட்ட மட்ட அமைப்பாளர்கள். ஐக்கிய தேசியக் கட்சி தேசியப் பட்டியலில் ஒரு பெண்களும் இல்லை என்பது கருத்திற் கொள்ளத்தக்கதாகும்.

எவ்வாறாயினும், அதிகாரத்தை விட்டுக் கொடுக்க விரும்பாத கட்சித் தலைமைகள், சமூகப் பாங்கு என்பன இங்கு செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதையும் மறத்தலாகாது.

ரத்னா

## 2000 பொதுத்தேர்தலில் பிரதான கட்சிகளின் பெண் வேட்பாளர்கள்

| மாவட்டம் | கட்சி | பெயர் |
|---|---|---|
| கொழும்பு | ஜே.வி.பி. | திமுத்து ஆட்டிகல |
| | | பி. சமன்மலி குணசிங்க |
| | பொ.ஐ.மு | சுவினீத்தா குணரத்ன |
| | ஐ.தே.க | சுனேத்ரா ரணசிங்க |
| கம்பஹா | பொ.ஐ.மு | ------ |
| | ஐ.தே.க | சமந்தாதேவி கருணாரத்ன |
| | ஜே.வி.பி | அஞ்ஞான் உம்மா |
| | | சவர்ண சந்திரலத்தா |
| இரத்தினபுரி | பொ.ஐ.மு. | பவித்ரா வன்னியராச்சி |
| | | சுரங்கனி எல்லாவல |
| | ஜே.வி.பி | தங்தெனிய கமகே மாலினி |
| | ஐ.தேக. | ------- |
| காலி | பொ.ஐ.மு. | ------ |
| | ஐ.தே.க | ------- |
| | ஜே.வி.பி | கே.எம்.சிறியாவத்தி |
| பதுளை | பொ.ஐ.மு. | ஹேமா ரத்னாயக்கா |
| | ஜே.வி.பி | கலைச்செல்வி கிருஷ்ணா |
| புத்தளம் | ஜே.வி.பி. | ஹேமாலி அபேரத்ன |
| | | நயனா பிரியங்கனி |
| | ஐ.தே.க | சுஜாதா தர்மவதன |
| | பொ.ஐ.மு | இவோன் சிறியாணி பெர்ணாந்து |
| மாத்தறை | பொ.ஐ.மு | ------------ |
| | ஜே.வி.பி. | சேப்பாலிக்கா ரணசிங்க |
| மொனராகலை | பொ.ஐ.மு. | சுமேதா குணவதி ஜயசேன |
| | | ஐராங்கனி தசநாயக்க |
| | ஜே.வி.பி. | எஸ்.எம். சிறியாவத்தி |
| திருகோணமலை | ஐ.தே.க | |
| களுத்துறை | பொ.ஐ.மு | சுமித்தா பிரியங்கனி அபேவீர |
| திகாமடுல்லை | பொ.ஐ.மு | நந்தா ஜே. இந்திரவன்ச |
| | ஜே.வி.பி. | குமுது பிரியந்தி முணசிங்க |
| நுவரெலியா | பொ.ஐ.மு | சீலா யாப்பா யசவத்தி |
| | | விமாலி கருணாரத்ன |
| | ஜே.வி.பி. | ருவினி ஜயரத்ன |
| | ஐ.தே.க | ரேணுகா ஹேரத் |
| ஹம்பாந்தோட்டை | பொ.ஐ.மு | நிரூபமா தீபிகா ராஜபக்ச |
| குருணாகலை | பொ.ஐ.மு | குமாரி தென்னக்கோன் |
| | | பத்மா குமாரி வெத்தேவ |
| | ஜே.வி.பி. | மெனிக் குணசேக்கர |
| | ஐ.தே.க | அமரா பியசீலி ரத்நாயக்க |
| பொலனறுவை | பொ.ஐ.மு | ஐராங்கனி சிசி விதான |
| | ஜே.வி.பி. | சீத்தா ஐராங்கனி |
| கேகாலை | பொ.ஐ.மு | இந்திரா களுகல்ல |
| | ஜே.வி.பி. | கல்யாணி ஜயசேக்கர |
| அனுராதபுரம் | ஜே.வி.பி | சமந்திகா சோமரத்ன |
| | ஐ.தே.க | சந்திராணி பண்டார |
| வன்னி | ஐ.தே.க | ஆர்.எம்புலேந்திரன் |
| கண்டி | ஐ.தே.க | ரூப்பா சிறியாணி டேனியல் |

### தேசியப் பட்டியல்

**ஜே.வி.பி 03**

*தீபிக்கா சந்திரமாலி, முதித்தா குமாரி, ரேலின் சுனேத்ரா*

**பொ.ஐ.மு 02**

*ஜெஸீமா இஸ்மாயில், மனோரி முத்தட்டுவேகம*

**ஐ.தே.க.0**

நன்றி - நூலகத்திட்டம்



# தா(த்)தாக்களின் பிடியில் தமிழ் சினிமா!

முதுமையிலும் காதல் வரலாம் என்றாலும் சினிமாக் காதல்கள் அனைத்தும் முதுமைக் காதலாகவேதான் இருக்கிறது. தன் மகள் வயதை ஒத்த பெண்ணின் காதலுக்காகச் சோறு தண்ணி இல்லாமல் பட்டினி கிடக்கிறார்கள் தமிழ் சினிமா கதாநாயகர்கள்.

ஒரு பக்கம் தாதாக்களின் பிடியில் தமிழ் சினிமா சிக்கும்



வாய்ப்புள்ளது என்று பேசினாலும், உண்மையில் தாத்தாக்களின் (வயோதிகக் கதாநாயகர்கள்) பிடியில் தான் உள்ளது தமிழ் சினிமா.

கதாநாயகர்களுக்கு ஜோடியாக நடித்த பெண் அம்மாவாக நடிப்பது என்பது சிவாஜி கணேசன், பண்டரிபாய் காலந்தொட்டு இருந்து வருகிறது என்றாலும், சமீபத்தில் இப்போக்கு அதிகப்படியாகவே உள்ளது. எழுபதுகளில் முன்னணிக் கதாநாயகிகளாக இருந்த ஸ்ரீவித்யா, சுஜாதாவுடன் ஜோடியாக நடிப்பதைப் பெருமையாகக் கருதினார்கள் கமல், ரஜினி போன்றோர். ஆனால், இன்றைய தினங்களில் கமல், ரஜினிக்கு அம்மாவாக நடிக்கும் நிலைமை தான் அந்த முன்னாள் கதாநாயகிகளுக்கு உள்ளது.

இதில் வேடிக்கை என்னவென்றால் தனக்கு மகளாக நடித்த மீனாவைத் தனக்கு ஜோடியாக்கிக் கொண்டவர் ரஜனி. மீனாவிற்கு மகனாகவும் நடிப்பேன் என்று வெட்கம் இல்லாமல் வேறு சொல்லிக் கொள்கிறார்.

முன்பு ஐம்பது வயதைத் தாண்டிய கதாநாயகர்கள் மரத்தைச் சுற்றி ஆடிப் பாடிக் கொண்டிருந்தனர். தற்போது அவர்கள் பாலைவனங்களில் உருகித் தவிக்கிறார்கள் காதலுக்காக. அப்படி அவர்கள் தவிக்கும் பொழுது காதல் மட்டும் தெரிவதில்லை. முகத்தில் உள்ள தோல் சுருக்கங்களும் சேர்ந்து தான் தெரிகிறது.

கதாநாயகிகளின் எடை கொஞ்சம் அதிகரித்தாலும் அவர்களின் வயது இருபத்தைந்தைத்



தாண்டி விட்டாலும் வீட்டுக்கு அனுப்புவது இல்லையேல் அக்காவாகவோ, அண்ணியாகவோ 'மரியாதையாக' நடத்துவது என்றிருக்கும் தமிழ்ச் சினிமா, அறுபது வயதுக் கதாநாயகர்களின் கால்ஷீட்டுக்காக அவர்கள் பின்னால் அலைந்து கொண்டிருக்கிறது.

சமீப காலமாய்த் தமிழ்ச் சினிமாவிற்குக் காதல் நோய் வேறு பீடித்துள்ளது. காதலை அக்கு வேறு ஆணி வேறாகப் பிரித்து ஆராய்ந்து கொண்டிருக்கும் இயக்குநர்கள், எங்கே தங்களை மறந்து விடுவார்களோ என்று தங்கள் பங்குக்குக் காதல தியாகத்திற்குத் தயாராகிவிட்டார்கள் இந்த வயோதிகக் கதாநாயகர்கள்.

பெரும்பாலும் காவல்துறை அதிகாரியாகவும், ஏழை மக்களின் ஒட்டு மொத்தப் பாதுகாவலனாகவும் உள்ள கதாபாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து நடித்து வந்த விஜயகாந்த் திடீரென்று காதல் சிறகை விரிக்க ஆரம்பித்து விட்டார். தற்போது வெளிவந்திருக்கும் ஒரு படத்தில் மீனாவின் மீதுள்ள தன் பால்ய காலக் காதலுக்காக வளையல்



வாங்கி வந்து காத்துக் கொண்டிருக்கிறார், தேர்வு எழுதிவிட்டு முடிவுக்குக் காத்திருக்கும் மாணவனைப் போல.

இவர்கள் எப்போதாவது முதுமைத் தோற்றம் கொண்ட கதாபாத்திரங்களைத் தேர்வு செய்து நடிக்கின்றனர். அப்படி நடிக்கும் போது இளமைக்கால ப்ளாஷ்பேக் காட்சிகள் இருக்குமாறு பார்த்துக் கொள்கின்றனர். அல்லது அதே படத்தில் அவர்களே மற்றுமொரு இளமையான ஒரு வேடத்தையும் ஏற்றுக் கொள்கின்றனர்.

அஜித், விஜய், பிரசாந்த், சூர்யா போன்ற இளைஞர்கள் நடிக்க வந்த பின்பும் தமிழ்ச் சினிமாவில் ஏழு நட்சத்திரங்கள் என்று அழைக்கப்படும் (ரஜினி, கமல், விஜயகாந்த், சத்யராஜ், சரத்குமார், பிரபு, கார்த்திக்) கதாநாயகர்கள் இன்னும் காதலைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருப்பதில் எந்தவித நியாயமும் இல்லை.

வயோதிகத் தோற்றத்தைப் பற்றிக் கவலைப்படாமல் பொது இடங்களிலும், மேடைகளிலும் தோன்றி வரும் சத்யராஜ் கூடக்



காதலி ரோஜாவைப் பெண் கேட்டுத் தட்டேந்திச் செல்கிறார் சமீபத்தில் வெளியான படமொன்றில்.

தொடர்ந்து 15 ஆண்டுகளுக்கும் மேலாக, நிறையப் படங்களில் கல்லூரி மாணவராக நடித்து வந்த முரளி, பல்வேறு கேலிக்கும், கிண்டலுக்கும் ஆளான பின் தற்போது அந்த வேடத்தைத் துறந்திருக்கிறார்.


கதாநாயகர்கள் மட்டும் என்றில்லை. தமிழ்ச் சினிமா



நகைச்சுவை நடிகர்களும் இளமையான வேடங்களில் தான் நடிக்கிறார்கள். அறுபது வயதான கவுண்டமணி, ரஜினிக்கும் நண்பனாக வருகிறார். 'காதலர் தினம்' படத்தில் நடித்த இருபது வயது குணாலுக்கும் நண்பனாக வருகிறார்.

இவர்களைத் தமிழ்ச் சினிமாவில் நடிக்க வேண்டாம் என்று சொல்லவில்லை. உங்கள் வயதுக்கு ஏற்றாற் போன்ற கதாபாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து நடியுங்கள் என்று தான் சொல்கின்றோம்.

எங்கள் ரசிகர்கள் விரும்பு-



கிறார்கள், அவர்கள் இரசிக்கும் வரை நாங்கள் காதலர்களாகத் தான் வலம் வருவோம் என்று நீங்கள் உங்கள் ரசிகர்கள் மீது பழியைச் சுமத்தாதீர்கள். தொடர்ந்து நீங்கள் இப்படி நடித்துக் கொண்டிருந்தால், உங்கள் இரசிகர்கள் உங்களைத் தூக்கி எறியவும் தயங்க மாட்டார்கள்.

வரலாற்றில் சினிமா என்பது, நமது கலாசாரங்களையும், வாழ்க்கையையும் பிரதிபலிக்கும் ஒரு சாதனமாக இருந்து வருகிறது. இன்னும் ஐம்பது வருடங்களுக்குப் பிறகு தமிழ்ச் சினிமாவைப் பார்த்தாலும், தமிழர்கள் காதலைத் தவிர உருப்படியாக வேறெதுவும் செய்யவில்லை என்று தோன்றும்.

இந்த நிலை இந்தக் கதாநாயகர்களுக்கும், தமிழ்ச் சினிமாவிற்கும் ஆரோக்கியமானது அல்ல.

சந்திரா.

நன்றி: ஆறாம்திணை

---

# தேர்தல் ஜனநாயகத்துக்கான வன்முறை

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் நடைபெறப்போகின்றது என்ற பிரச்சாரம் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்க மறுபுறத்தில் தேர்தல் என்றாலே கட்டற்ற வன்முறைகள் என்றவாறு தேர்தல் பிரச்சார வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து உத்தியோக பூர்வமான ஆட்கடத்தல்கள், படுகொலைகள், கோஷ்டி மோதல்கள், காரியாலயங்களை சேதப்படுத்தல் போன்ற பல்வேறு விதமான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால், பல்வேறு விதமான வன்முறைச் சம்பவங்கள் ஒரே கட்சிக்குள்ளேயே இடம்பெற்றுள்ளன என்பது தான்

குறிப்பாக பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள்ளேயே இதுவரையில் நான்கு வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. நமது அரசியலமைப்பின் தேர்தல் முறையில் உள்ள குறைபாடும், அமைச்சுப் பதவியில் கிடைக்கும் சொகுசு வாழ்க்கையும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற முக்கிய காரணமாக அமைகின்றன என்பதை மறுக்க முடியாதுள்ளது. நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடாத்துவதில் வேட்பாளர்கள் பெரிதும் அக்கறை கொண்டுள்ளனர் என்பதை பல்வேறு வழிகளிலும் உறுதிப்படுத்த முழு முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பாக வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்துள்ள தமிழ் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதில் அவர்கள் காட்டும் அக்கறைக்கு அளவே இல்லை எனலாம். இதேபோன்று சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளின் வாக்களிக்கும் உரிமை தொடர்பாகவும் பெரும் அக்கறை காட்டி வருகின்றனர். இதெல்லாம் வேறெந்த நோக்கத்திற்காகவுமல்ல, பிரஜைகளின் வாக்களிக்கும் உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகத் தான் என்று வேறு சாதிக்கிறார்கள். மக்களின் ஜனநாயக உரிமைகளில் இவர்களுக்கு ஏற்பட்டுள்ள அக்கறையைப் பார்த்தால் இந்தத் தேர்தலுக்கு நன்றி சொல்லத் தான் தோன்றும்.

தேர்தலுக்கான வேலைகள் ஒருபுறமும் வேட்பாளர்களை கடத்துதல், படுகொலை செய்தல், வாபஸ் பெறச் செய்தல் போன்ற நடவடிக்கைகள் மறுபுறமாக பிரச்சார வேலைகள் விமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

வன்முறைகளினால் இதுவரை ஏழு மரணங்கள் இடம்பெற்றுள்ளன. 500 வன்முறைச் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் நீதியானதும் சுதந்திரமானதுமான பொதுத் தேர்தல் நடைபெறும் என்பது சந்தேகத்திற்கு இடமற்ற கேள்வியாக உள்ளது. கட்சிகள் சார்பில் பிரச்சார வேலைகளை மேற்கொள்கின்ற சாதாரண இளைஞர்கள் பலிகடாக்களாக்கப்பட்டு வருகின்றனர். இந்த வகையில் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த ஆதரவாளர் சம்பிக்க சுகந்த சில்வா என்பவர் இனந்தெரியாதவர்களால் தாக்கப்பட்டு பின்னர் இறந்துள்ளார். ஐ.தே.க. ஆதரவாளரான சத்துரசமன் குமார என்பவர் கேகாலையில் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருக்கையில் இனந்தெரியாத கோஷ்டியொன்றினால் துப்பாக்கிப்பிரயோகத்திற்கு இலக்காகி மரணமடைந்துள்ளார். முகத்துவாரத்தில் இவ்வாறு சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த பொ.ஐ.மு ஆதரவாளர்களான இரு சகோதரர்கள் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர். இவற்றைவிட மட்டக்களப்பு மாவட்ட பொ.ஐ.மு வேட்பாளரான செழியனும் அம்பாறை தமிழ் அமைப்பாளரான மனோகரன் பிள்ளையும் பாண்டிருப்பில் படுகொலை செய்யப்பட்டது வரை படுகொலைச் சம்பவங்கள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன.

0

- தர்ஷினி

நன்றி - நூலகத்திட்டம்



# பிறந்த நாளின் மரணம்

"நிஹல்.. நிஹல்" சத்தம் என் தூக்கத்தைக் குழப்பியது. "கெதியா எழும்பு.. பாடசாலைக்குப் போக வேணும்". அம்மா தான் குசினிக்குள் இருந்து கொண்டு கூப்பிடுகிறா. எனக்குச் சரியான தூக்கம். கண்களைத் திறக்க சரியான கஷ்டமாக இருந்தது. கடும் தூக்கத்தில் இருப்பது போல் நடித்துக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக அம்மா ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லி ஞாபகப்படுத்தினா. இல்லாவிட்டால் அப்படியே தூங்கி வழிந்து கொண்டிருந்திருப்பேன். இன்று மாதத்தின் இறுதி நாளென்று எனக்கும் ஞாபகம் வந்தது. நாளைய எனது பிறந்த நாளைக்காக நான் எனது நண்பர்களையெல்லாம் அழைக்க வேண்டும். கட்டிலிருந்து பாய்ந்தெழும்பி நேராகக் குசினிக்குப் போனேன். அம்மா எனக்கான காலைச் சாப்பாட்டை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தா. அம்மா ஏதாவது வேலை செய்து கொண்டிருக்கும் போது நல்ல அழகாக இருப்பது போலிருக்கும். அவளைப் பார்த்துக் கொண்டு நின்று கொண்டிருந்த என்னைப் பார்த்துத் திரும்பிப் புன்னகைத்தாள். "அப்பா நிச்சயம் நாளைக்கு வருவார் தானே?" என்றேன். "ஓமோம்... நிச்சயமாய்... அவர் போக முதல் உன்னிடமும் சொல்லி விட்டுத் தானே போனவர்... இல்லையா?" என்று திருப்பிக் கேட்டாள். "போன வருஷமும் இப்படித் தான் சத்தியம் பண்ணிக் கொண்டு போனவர். பிறந்த நாள் முடிந்து மறுநாள் தானே வந்தார்... நானும் பிரண்ட்ஸ்மாரும் எவ்வளவு ஆவலோடு அவரைப் பார்த்துக் கொண்டிருந்தோம் தெரியுமா!?", "நீ அதை இன்னும் மறக்கவில்லைப் போல" அம்மா சொல்லி விட்டுச் சிரித்தா. "சரி... அப்படியெல்லாம் இந்த முறை நடக்காது... நீ கெதியா ரெடியாகு... பிந்திப் போவாய்"

பாத்ரூமில் தண்ணீர் வாளிக்கு முன்னால் குந்திக் கொண்டிருந்தேன். இளஞ் சூடான தண்ணீரில் கைகள் அலைந்து கொண்டிருந்தன. சூடு இதமாக இருந்தது. நாளை நான் கொண்டாடப் போகும் எனது இரண்டாவது பிறந்த நாள் பற்றியே சிந்தனை போகத் தொடங்கியது. நாளை ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்து நான்கு. நவம்பர் முதலாம் திகதி. எனது இரண்டாவது பிறந்த நாளென்றால் எனக்கு இரண்டு வயதாகிறது என்று அர்த்தமல்ல. எனக்கு ஒன்பது வயது முடியப் போகிறதென்று அம்மா சொல்லிக்கொண்டிருந்தா. நான் ஏன் அப்படிச் சொன்னேனென்றால், எனக்குப் போன வருஷத்துப் பிறந்த நாளைவிட வேறெதுவும் ஞாபகத்திலில்லை. அதற்காகத் தான். எத்தனை வாக்குறுதிகள் நிரம்பிய நாள் தெரியுமா அது! பப்பா - என் அப்பா தான் - சர்தார் அம்ரித் சிங். இது தான் அவரின் பெயர். இப்படித் தான் வெளியே பெயர்ப் பலகையில் எழுதப்பட்டிருக்கிறது. - பிஸ்னஸ் விஷயமாக பம்பாய் போனவர் திரும்பவேயில்லை. பிறந்த நாள் பார்ட்டிற்கு வந்திருந்த அன்ரிமார், அங்கிள்மார், என் பிரண்ட்ஸ்மார் எல்லோரும் போய்க் கொண்டிருந்தார்கள். எனக்கு அழுகை முட்டிக் கொண்டு வந்தது. எவ்வளவு நேரமாகியும் அவர் வரவேயில்லை. எல்லாம் முடிய மறுநாள் தான் வந்தார். அவர் வந்தாலும் அவரோடு கதைக்கக் கூடாதென்று நேரத்துடனேயே நான் முடிவெடுத்து விட்டிருந்தேன். வீட்டுக்கு வந்தவுடன் என்னைத் தூக்கி கட்டியணைத்து முத்தமிட்டார். எனக்குத் தெரியும். இதெல்லாம் என்னை சமாதானப் படுத்துவதற்காகவென்று. அவர் வாங்கிவந்த அன்பளிப்புப் பொருட்களையெல்லாம் காட்டினார். ஆனால், எனக்கென்றால், நான் அவரிடம் இதெல்லாம் கேட்டேனா என்பது ஞாபகத்திலில்லை. ஆனால், அவரை பல தடவை பேர்த்டேக்கு வந்து விடுங்கள் என்று கேட்டது மட்டும் நல்ல ஞாபகம். இதெல்லாம் நான் கேட்காதது. நான் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டிருந்தேன். இருந்தாலும் கொஞ்ச நேரத்திலெல்லாம் என் பொய்க் கோபம் உடைந்து விட்டது. ஓடிப்போய் அவரைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழத் தொடங்கினேன்.

"நிஹல்... நீ எவ்வளவு நேரத்துக்குப் பாத்ரூமில் இருந்து கொண்டிருப்பாய்?" அம்மாவின் சத்தம் தான். ஏதோ கனவிலிருந்து விடுபட்டது போல் நிதானத்துக்கு வந்தேன். அவசரமாகக் குளித்துவிட்டு இடுப்பில் துவாயைக் கட்டிக்கொண்டு வெளியே வந்தேன். அம்மா கையில் ஸ்கூல் யுனிபோமுடன் நின்று கொண்டிருந்தா. "நீ என்ன பாத்ரூமில் தூங்கிக் கொண்டாயிருந்தாய்?" கேட்டுக்கொண்டே என் சின்ன உடம்பை துவட்டி விட்டா. நான் பழிப்புக் காட்டி விட்டுச் சிரித்தேன். இதுவும் மற்றொரு நாள் தான். நான் இப்படி எப்போதிலும் பாத்ரூமில் கொஞ்சம் நேரத்தைப் போக்கினால் இப்படிக் கேட்பது அம்மாவுக்கு வழமையாகி விட்டது. இது எனக்கும் ஒரு இன்ட்ரஸ்ட்டான விடயம் தான்! பாத்ரூம் தூங்குவதற்கான இடமா...? ம்... நன்றாகத்தானிருக்கும் போல! அவள் தலையை வாரிக்கொண்டிருக்க நான் யுனிபோமைப் போட்டுக் கொண்டிருந்தேன். அவ தலையை வாரிக் கோதியெடுத்து ஒரு முடிச்சு போலாக்கி மென் நீல நிறத்தில் ஒரு ரிப்பனைக் கட்டிவிட்டா. "நான் அப்பாவைப் போல எப்போதம்மா தலைப்பாகை கட்டுவது? என்றேன் "நீ இப்போது சின்னப் பையன் தானே... பிறகு அதைக் கட்டிக்கொள்ளலாம்..." என்றாள்.



ஸ்கூல் ரிக்ஷோவுக்காகக் காத்துக்கொண்டு வாசலில் நின்று கொண்டிருந்தேன். அம்மாவும் என்னை வழியனுப்புவதற்காக நின்று கொண்டிருந்தா. எதிர்ப்புற வீட்டில் தகூரும் ராய் அன்ரியும் நின்று கொண்டிருந்தார்கள். என்னையும் தகூரையும் ஏற்றிச் செல்கிற ரிக்ஷோவுக்காகத் தான் எல்லோரும் காத்துக் கொண்டிருந்தோம். ரிக்ஷோ வந்ததும் இருவரும் கையசைத்துச் சொல்லி விட்டு ஏறிக்கொண்டோம். நாங்கள் ஏறிக்கொண்டிருக்கையில் ராய் அன்ரி அம்மாவிடம் ஏதோ கேட்டாள். அது என்னவென்று எனக்குச் சரியாக விளங்கவில்லை. பதிலுக்கு அம்மா..." ஓமோம்.. நாளை மாலை ஏழு மணிக்கு" ஏன்றாள். தகூர் அன்ரி எனது பேர்த்டே பற்றித் தான் கேட்டிருக்கா என்று புரிந்து கொண்டேன். அவர்கள் எல்லோருக்கும் என்னில் விருப்பு அதிகம். கிட்டத் தட்ட அக்கம் பக்கத்திலுள்ள எல்லோருமே நாளைய எனது பேர்த்டேயை அறிந்திருப்பார்கள். இங்கிருக்கிற எல்லோரும் அப்பாவின் நல்ல நண்பர்கள் தானே... அதனால் தானிருக்கும். உண்மைதான். அப்பா இங்குள்ள எல்லோருடனும் நன்றாகப் பழகுவார். உதவிகள் செய்வார். எனக்கு நல்ல ஞாபகம்... கொஞ்ச நாட்களுக்கு முன்னர் சின்ஹா அங்கிள் ஒரு பெரிய அக்சிடென்ட் பட்டிருந்த போது அப்பா தான் அவருக்கு இரத்தம் கொடுத்தார். அந்த நாட்களில் அப்பா சரியான பிசி. அவரின் கூட்டாளிமார்களுடன் தான் காலத்தைக் கழிப்பார். ஒரே பேச்சும் சிரிப்புமாய் அவர்களின் நேரம் போகும். சிலவேளை இவர்களின் இந்தப் பொழுது போக்கு பின்னிரவாகித் தான் முடிவதுண்டு. இது அம்மாவுக்கு சரியான எரிச்சலான விஷயம். இதனாலே அப்பாவும் அம்மாவும் பட்டடவை பிரச்சினைப்பட்டுச் சண்டையெல்லாம் பிடித்திருக்கிறார்கள்.

000

அது மூன்றாம் பாட நேரம் ஆனால், என் நினைவெல்லாம் எங்கேயோ அலைந்து கொண்டிருந்தது. நாளைய என் பிறந்த நாள் பற்றிய எத்தனையோ திட்டங்கள் என்னிடம் இருந்தன. என் வீட்டிலிருந்து தூரத்திலிருக்கிற சில நண்பர்கள் வரமாட்டார்கள் போலிருந்தது எனக்குக் கவலையளித்தது. நாளைக்குச் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருப்பதால் பாடசாலைக்கு வரக் கூடாதென்று நினைத்துக் கொண்டேன். வகுப்புக்குள் நுழைந்த டீச்சரால் எனது நினைவுகள் குழம்பின, மரியாதைக்காக எழும்பியிருந்த எங்களை இருக்கச் சொல்லாமல் அவ தன் பாட்டில் எங்கள் வகுப்பு டீச்சருடன் கதைத்துக் கொண்டிருந்தா. பேசிக்கொண்டிருக்கையில் எங்கள் கிளாஸ் டீச்சரின் முகம் மாறுவதைப் பார்க்க முடிந்தது. அவவின் கையிலிருந்த புத்தகத்தை ஒரு மாதிரி இறுகப் பிடித்துக் கொண்டா. கொஞ்ச நேரத்திலெல்லாம் அவர்களிருவரும் வகுப்பை விட்டு வெளியேறிவிட்டார்கள். போனது தான் தாமதம் எல்லோரும் சத்தம் போடத் தொடங்கி விட்டார்கள். திடீரென்று ஸ்கூல் விடுகிற நீண்ட பெல் சத்தத்தைக் கேட்க எனக்கு ஆச்சரியமாயிருந்தது. இது ஒன்றும் பாடசாலை விடுகிற நேரமில்லை.

என் புத்தகங்களையெல்லாம் ஒழுங்கு படுத்தி பேக்கில் போட்டுக் கொண்டு பாடசாலை கேட் பக்கம் ஓடினேன். வெளியே வழமைக்கு மாற்றமாக பெரிய வகுப்பு மாணவர்களெல்லாம் குழுக்குழுவாக குழுமியிருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு குழுவினரை நான் கடந்து சென்ற போது அதிலிருந்த ஒருவன் என் தலையைத் திருகி ஓங்கி அறைந்தான். நான் தடுமாறிப் போய் இரும்புக் கேட்டில் முகம் பட வீழ்ந்தேன். அழுது கொண்டே திரும்பிப் பார்த்தேன். அவன் எனக்கு மிக நெருக்கமாக நின்று கொண்டிருந்தான். அவன் கண்கள் கோபத்தால் சிவந்திருந்தது. ஒரு மாதிரி சுதாரித்துக் கொண்டு வெளியே வந்தேன். பின்னால் பெரிய நக்கல் சிரிப்புச் சத்தம் கேட்டது. அவன் ஏன் என்னை அடித்தான் என்பது எனக்கு விளங்கவில்லை. சிலவேளை நான் வந்த வேகத்தில் அவனின் காலை மிதித்திருப்பேனோ... அல்லது தள்ளியிருப்பேனாக்கும்... ஆனால், எனக்கு அப்படி ஏதும் நடந்ததாக நினைவில்லை. கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. அநியாயமாக அடிபட்டு விட்டோமே என்ற வெப்புசாரம் வேறு வந்தது. ரிக்ஷோவுக்குக் கூடக் காத்திருக்காமல் விர்விர்ரென்று நடக்கத் தொடங்கினேன். இந்தச் சம்பவத்தை அம்மாவிடம் சொல்லக்கூடாதென நினைத்துக் கொண்டேன். சொன்னால் அவ அப்செட்டாகி விடுவா.

மத்திய கடைத்தொகுதி வளைவை நெருங்கிய போது அங்கிருந்து பொலிஸ் வாகனங்கள் கிட்டத்தட்ட எல்லாப் பக்கமுமாக விரைந்து கொண்டிருந்தன. அவ்விடத்திலுள்ள இரண்டோ மூன்று வெற்றிலைக் கடைகளில் சிலர் குழுமிருந்தவாறு ரேடியோ கேட்டுக்கொண்டிருந்தார்கள். சிலர் ஒரு வகைப் பதட்டத்துடன் கதைத்துக் கொண்டிருந்தார்கள். கிரிக்கெட் மெட்ச் ஏதாவது நடக்கிறதாக்கும் என்று நினைத்தவாறே வளைவைக் கடந்து இடது பக்கம் திரும்பி நடந்தேன். இந்த ரோட்டால் நேரே போனால் எனது வீடு வரும்!

000

அம்மா எனக்காக வீட்டு வாசலடியில் காத்துக் கொண்டிருந்தா. அவவின் முகம் ஒரு மாதிரியாக கவலை படிந்த மாதிரி இருந்தது. ஏன் தனியே வந்தாய்? ஏன் நேரத்தோடு வந்தாய்? வரும் வழியில் ஏதாவது கண்டியா? என்று அவ மூச்சு விடாமல் என்னைப் பார்த்துக் கேட்ட கேள்விகளால் நான் ஆச்சரியப்பட்டுப் போனேன். நான் நேரத்தோடு வருவதும் தனியே நடந்து வருவதும் அவவுக்கு ஒன்றும் புதிய விடயமல்ல. அவ என்னிடம் கேள்வி கேட்டுக் கொண்டிருந்த போதே அவவின் கண்கள் எங்கேயோ மேய்ந்து கொண்டிருந்தன. மிஷ்ராஅன்ரியின் தோட்டத்தில் குழுமி நின்று கொண்டிருந்த பெண்களைத் தான் அம்மா பார்க்கிறா என நினைத்துக் கொண்டேன். இன்று வெள்ளிக்கிழமையா...? அம்மாவும் லேடீஸ் கிளப் கூட்டத்தில் கலந்து கொள்வாவே என்று எண்ணியவாறு உள்ளே போனேன். உள்ளே பாட்டி கையில் டிரான்சிஸ்டரை வைத்துக் கொண்டு கேட்டுக் கொண்டிருந்தது எனக்கு இன்னும்

சரிநிகர் இதழ் - 202, செப். 24 - செப். 30, 2000 15

வியப்பைத் தந்தது. எனக்குத் தெரிந்தவரை அவ எப்போதும் இப்படி மிகக் கவனமாக ரேடியோ கேட்டதேயில்லை! அதில் மிக மெதுவான இசை போய்க்கொண்டிருந்தது. எனது பேக்கை கட்டிலில் வீசி விட்டு பாத்ரூமுக்குள் ஓடினேன். கை கால் கழுவிக் கொண்டிருந்தபோது யாரோ கதைப்பது போலிருந்தது. உற்றுக் கேட்டேன். ரேடியோவில் செய்தி போய்க் கொண்டிருந்தது.

000

நான் எனது ரூமில் புத்தகங்களையும், விளையாட்டுச் சாமான்களையும் அடுக்கிக் கொண்டிருந்தேன். வருகிற சின்னப் பெடியன்கள் அதையும் இதையும் எடுத்துக் குழப்பி விடுவார்கள் என்று அம்மாவும் ஒழுங்குபடுத்தச் சொல்லி பல தடவை சொல்லியிருந்தா. எல்லாவற்றையும் தனியே நான் தான் செய்து கொண்டிருந்தேன். அம்மா ஏன் போன வருஷம் மாதிரி என்னோடு கூட வந்து ஒத்தாசை புரியவில்லை என்பது எனக்கு விளங்கவில்லை. திடீரென்று அவவின் சத்தம் கேட்டது. என்னைத் தான் இரவுச் சாப்பாட்டுக்குக்



கூப்பிட்டா. பாடசாலை முடிந்து வந்ததிலிருந்து இதுவரைக்கும் அவவின் சத்தத்தை நான் கேட்கவில்லை. எனக்கு உணவு பரிமாறுகையில் "பாட்டி இப்படி ரேடியோ கேட்டுக் கொண்டிருந்ததை நான் ஒரு போதும் கண்டதேயில்லையே" என்றேன். சாப்பிட்டும் முடித்து விட்டேன். அம்மா என் கைகளைப் பிடித்து அழைத்துக் கொண்டு முன் விறாந்தைக்குக் கூட்டிப்போனா. அங்கு கொழுவியிருந்த ஒரு பெண்ணின் பெரிய படமொன்றைக் காட்டி" இவ செத்துட்டா... இவவைக் கொலை செய்து போட்டார்கள்" என்றா. எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. ஏன் இவவைக் கொலை செய்யவேணும்? எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கிறது அப்பா ஒருமுறை அவவின் படங்கள்

ஆங்கிலத்தில்: நாகேஷ் சுக்லா
தமிழில்: எம்.கே.எம். ஷகீப்

நிறைய இருந்த புத்தகத்தை எனக்கு காட்டியிருக்கிறார். அது ஆங்கிலத்தில் இருந்தபடியால் அப்பா தான் அதை வாசித்து எனக்கு விளங்கப்படுத்திச் சொன்னார். அவவைப் பற்றி அப்பா மிகப் பெருமையாகக் கதைத்தார். அவவைப் புகழ்ந்தார்.

000

ஏதோ சத்தம் கேட்க விழித்துக் கொண்டேன். நேரத்தைப் பார்த்தேன். ஒன்பதேகால், அம்மா ஏன் என்னை எழுப்பவில்லை? முன் விறாந்தைக்குப் போகையில் கதைக்கும் சத்தம் கேட்டது. நிறையப் பொலிஸ்காரர்கள் நின்று கொண்டிருந்தார்கள். விறாந்தை ஜன்னல், விசிட்டர் ரூம் ஜன்னல்களெல்லாம் உடைந்திருந்தன. ரூமெல்லாம் நிறையக் கற்கள் கிடந்தன. அம்மாவும் பாட்டியும் ஓரமாய்க் கிடந்த சோபாவில் ஒன்றாக அமர்ந்திருந்தார்கள். அம்மாவிடம்

போனேன். அவ அவவின் கண்களில் வடிந்து கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்து விட்டுக் கொண்டா. ஒரு பொலிஸ்காரர் வந்து தன்மையாகவும், தாழ்ந்த தொனியிலும் ஏதோ கேட்டார். அவ எழும்பி அவரைத் தொடர்ந்து சென்று வீட்டுக்கு வெளியே போனா. இரவு ஏதாவது நில நடுக்கம் ஏற்பட்டிருக்கிறது போல என்று நினைத்துக் கொண்டேன். அதனால், தான் இப்படியான சேதங்கள் நடக்கின்றன என்பதை ஒரு படத்தில் நான் பார்த்திருக்கிறேன். டியுப் லைட்கள், பூச்சாடிகள் எல்லாம் உடைந்து கிடந்தன. அப்பாவின் பெயர்ப்பலகையும் உடைந்து நிலத்தில் கிடந்தது. அம்மா கேற்றடியில் நின்று கொண்டு பொலிஸ்காரனுடன் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தா. அவர்களுக்கு அருகே கறுப்பாய் புகைபடிந்து போய் ஏதோ ஒன்று தெரிந்தது. கிட்டப்போய் பார்த்தேன். எனக்கு இதயம் வெடித்து விட்டது போலிருந்தது. அது... அது அப்பாவின் ஸ்கூட்டர். கருகிச் சாம்பலாகிவிட்டிருந்தது. வாசலடியில் நின்றவாறே சுற்றுமுற்றும் பார்த்தேன். நிறையப் பேர் வெளியே குழுமியிருந்து எங்கள் வளவுக்குள் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மிஷ்ரா, தகூர், சொய்சா அங்கிள்மாரும் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். மிஷ்ராஅன்ரியின் வீட்டு பெல்கனியிலும் பல பெண்கள் நின்று கொண்டு அம்மாவைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களெல்லாரும் பொலிசுக்குப் பயந்தவர்கள் போல... பின் ஏன் அவர்கள் யாரும் எங்களுக்கு உதவி செய்ய வரவில்லை?

000

பின்னேரம் நான்கு மணி பொலிஸ்காரர்கள் போய் நீண்ட நேரமாகி விட்டது. இந்த வேலையைச் செய்தவர்களைப் பிடித்தார்கள் என்றால் நல்ல தண்டனை கொடுப்பார்கள். அப்பாவும் சொல்லியிருக்கிறார்... சட்டத்தை மீறுபவர்களிடம் பொலிஸ்காரர்கள் மிகக் கடுமையாக நடந்து கொள்வார்களென்று. பேர்த்டே பார்ட்டிக்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு அம்மாவிடம் சொல்ல எனக்கு ஏனோ துணிவு வரவில்லை. அப்பா வந்து விட வேண்டுமென்று நான் வேண்டிக்கொண்டிருந்தேன். பாட்டியும் அம்மாவும் ரேடியோவில் ஓட்டிக் கொண்டு விட்டார்கள். பாட்டி அம்மாவுடன் மெதுவாகக் கதைத்துக்கொண்டே அவவின் தலையையும் தடவி விட்டுக் கொண்டிருந்தா. நான் டென்னிஸ் பந்தை எடுத்துக் கொண்டு வெளிப்புறத்துக்குப் போனேன்.

பந்து எங்கேயோ பற்றைக்குள் தொலைந்து போய்விட்டது. இது நான்காவது தடவை. பின்னேர வெளிச்சத்தில் பந்தைத் தேடிக்கொண்டிருந்த போது அம்மாவின் பெருத்த ஒப்பாரிச் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். வீட்டுக்குள்ளிருந்து நீல உடையணிந்த இருவர் கேற்றடிப்பக்கம் போய்க் கொண்டிருந்தார்கள். அங்கே சிவப்புக் கலரில் கூட்டல் அடையாளம் போட்ட வெள்ளை வேன் ஒன்று நின்று கொண்டிருந்தது. நான் வாசலை நோக்கி ஓடினேன். காலில் ஏதோ தட்டுப்பட்டது... குனிந்து பார்த்தேன். அப்பாவின் உடைந்த பெயர்ப் பலகை... அம்மா எடுக்க மறந்து விட்டா போல!



# அவர்களுக்குத் தெரியும்

நிம்மதி குடியிருந்த கிராமத்தின் மீது
வந்து விழுந்தன கோர நகமுடைய கரங்கள்
எங்களைக் குதறிடக் குறி பார்த்தவாறே......

00

எமது கல்லூரி வளவினுள்ளே வன விலங்குகள் ஒளிந்திருக்கவில்லை
எமது நூலகத்தின் புத்தக அடுக்குகளை ஓநாய்களும்
கழுகுகளும் தம் வாழிடங்களாய்க் கொண்டதில்லை.
நிலாக்கால இரவுகளில் உப்புக் காற்று மேனி தழுவிட
விவாதங்கள் அரங்கேறிடும் கடற்கரை மணற்றிடலில்
பாம்புப் புற்றுகளெதுவும் இருக்கவில்லை
மாலைகளில் ஆரவாரம் விண்ணளாவிட
எமதிளைஞர் உதைப்பந்தையன்றி வேறெதையும் உதைத்ததுமில்லை
பக்திப் பரவசத்தில் ஊர் திளைக்கும் நாட்களில் எமதன்னையர்
நிவேதனத்தையன்றி வேறெதையும் இருகரமேந்தி
ஆலயமேகவுமில்லை

00

இங்கெல்லாம் புரியாத மொழி பேசியவாறு துப்பாக்கி மனிதர்கள்
ஊடுருவத் தொடங்கிய வேளை விக்கித்துப் போனோம்:
வார்த்தைகள் மறந்தோம்.
எமது கல்லூரி, நூலகம், கடற்கரை, விளையாட்டுத்திடல்
ஆலயமெங்கெங்கிலும் அச்சம் விதைக்கப்பட்ட ஆனந்தம் பிடுங்கப்பட்டதை
விழித்துவாரங்களினூடே மௌனமாய்ப் பார்த்திருந்தோம்.

அறிமுகமற்ற பேய் பிசாசுகளையெல்லாம்
அழைத்துக் கொண்டு இரவுகள் வந்தடைந்தன
எமது வானவெளியை அவசரப்பட்டுக் கொண்டு அந்தகாரம் ஆக்கிரமித்தது.
அடர்ந்து கிளைவிரித்துக் காற்றைத் துழாவியபடி எம்மீது
பூச்சொரிந்த வேம்பின் கிளைகள் முறிந்து தொடங்கிட அதனிடையே
அட்டுப்பிடித்த கவச வாகனங்கள் யாரையோ எதிர்கொள்ளக்
காத்திருந்தன.

எமதண்ணன்மார் அடிக்கடி காணாமல் போயினர்
எமது பெண்களின் வாழ்வில் கிரகணம் பிடித்திட
எதிர்காலப் பலாபலன்கள் யாவும் சூனியத்திற் கரைந்தன!

00

இப்போதெல்லாம் குழந்தைகள் இருளை வெறுத்து விட்டு
சூரியனைப் பற்றியே அதிகம் கதைக்கிறார்கள்
அவர் தம் பாடகொப்பிகளில் துப்பாக்கிகளை வரைகிறார்கள்
பூக்களும் பொம்மைகளும் பட்டாம் பூச்சிகளும் அவர்களை விட்டும்
தூரமாய்ப் போயின
எங்கள் தேசத்தின் இனிய கதைகளைப் பற்றிப் பாட்டிமார் கதைக்கிறார்கள்
அந்த வரலாறு இனி எமது குழந்தைகளின் ஆனந்தங்களை
மீட்டெடுக்கட்டும்.

பஹீமா ஜஹான்

04.09.2000

நன்றி - நூலகத்திட்டம்






திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சி எனும் ஊரைச்சேர்ந்தவர் இளங்கவிஞர் சல்மா. இஸ்லாமியக் குடும்பப் பின்னணி. பெண்ணிலை அனுபவங்களும் அந்த அனுபவங்களுக்கூடாகப் புடமிடப்பட்டுத் தெறித்து விழும் அவருடைய சொற்களும் மொழியும் ஈழத்துப் பெண் கவிஞர்களின் குரலை நினைவூட்டுபவையாக உள்ளன.

"தனக்குள்ளே வசிக்க நேர்ந்து விட்ட நீண்ட தனிமையும், எனது மொழியும் கூடி இங்கே கவிதைகளாகி இருக்கின்றன' என்று தன்னுடைய கவிதைகளைப் பற்றிக் கூறுகிறார் சல்மா.

"கவிதை எழுதுவது குறித்து அவரவர்க்கும் அவரவர்க்கான காரணங்கள் இருக்கலாம். எனக்கோ இது வேறெதையும் விட ஆறுதல் அளிப்பதாக இருக்கிறது. தோல்விகளும் இயலாமைகளும் மொழியாக உருவாகும்போது ஏதோ ஒரு நிம்மதி' என்று சொல்கிற சல்மாவின் கவிதைத் தொகுதி ஒரு மாலையும் இன்னொரு மாலையும் காலச்சுவடு பதிப்பக வெளியீடாகத் தமிழ் இனி 2000 இலக்கிய அரங்கை ஒட்டி வெளியிடப்பட்டது. அத்தொகுதியிலிருந்து சில கவிதைகளை இங்கு மறு பிரசுரம் செய்கிறோம்.

ஆ-ர்

## இரண்டாம்
## ஜாமத்துக் கதை

குழந்தைகளைப் பெற்றதற்குப் பிந்தைய
இரவுகளில்
பழகிய நிர்வாணத்திற்கிடையில்
அதிருப்தியுற்றுத் தேடுகிறாய்
என் அழகின் களங்கமின்மையை

பெருத்த உடலும்
பிரசவக் கோடுகள் நிரம்பிய வயிறும்
ரொம்பவும் தான் அருவெறுப்பூட்டுவதாய்ச்
சொல்கிறாய்
இன்றும் இனியும்
எப்போதும் மாறுவதில்லை எனது
உடலென்றும்

நிசப்தத்தின் பள்ளத்தாக்கில்
புதையுண்டிருக்கும் என் குரல்
தனக்குள்ளாகவே முனகிக்கொண்டிருக்கும்

உண்மைதான்
என் உடலைப் போலல்ல
உன்னுடையது
பறைசாற்றிக்கொள்வதில்
வெளிப்படையாக இருப்பதில்

இதற்கு முன்னும் கூட
உன்குழந்தைகள் வேறு எங்கெங்கோ
யார் யாருக்கோ பிறந்திருக்கலாம்
உன்னிடம் தடயங்களில்லை என்பதால்
நீ பெருமை கொள்ளலாம்

நான் என்ன செய்ய?
என் நசிவைப் போலத்தான்
இந்தப் பிரசவக் கோடுகளும்
எளிதில் செப்பனிட முடிவதில்லை
வெட்டி ஒட்டிவிட இவ்வுடல் காகிதமில்லை

உன்னைக் காட்டிலும்
மோசமான துரோகத்தினைப் புரிந்திருக்கிறது
இயற்கை எனக்கு
உன்னிலிருந்துதானே தொடங்கிற்று
எனது தோல்வியின் முதலாவது நிலை

முதல் ஜாமத்தைக் காட்டிலும்
விபரீதமானது
கனவுகள் பெருகும் இரண்டாம் ஜாமம்

சுவரோவியத்தில் அமைதியாக
அமர்ந்திருந்த புலி
இவ்விரண்டாம் ஜாமத்தில் தான்
என் தலைமாட்டிலமர்ந்து
உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

O

## ஒப்பந்தம்

ஒவ்வொரு முறையும்
அம்மா நாசூக்காய்ச் சொல்வதை
அக்கா கோபமாய்ச் சொல்வாள்
படுக்கையறையின்
தவறுகளெல்லாம்
என்னுடையதென

தினமும் படுக்கையறையில்
எதிர்கொள்ளும் முதல் பேச்சு
'இன்றைக்கு என்ன?'
அநேகமாக
இறுதிப் பேச்சும்
இதுவாகவே இருக்கும்

வேசைத்தனத்தினைச் சுட்டும் விரல்
ஒளிரும் கோடி நட்சத்திரங்களிலிருந்து மீள
நடுங்கும் இரவுகளில்
மிதக்கும் அறிவுரைகள்

குட்டிக்கு உணவூட்ட
இயலாப் பூனையின்
தேம்பியழும்குழந்தைக்குரல்
கவ்விப் பிடிக்கிறது ஈரலை

உனக்கும் கூடப்
புகார்கள் இருக்கலாம்
என் நிலைப்பாடு
காலத்தாலும்
வரலாற்றாலும்
தெளிவாக்கப்பட்டிருக்கிறது

உன்னிடமிருந்து
கலங்கலானதே எனினும்
சிறிது அன்பைப் பெற

உனதுகுழந்தையின்
தாய் என்னும் பொறுப்பை
நிறைவேற்ற

வெளியுலகில் இருந்து
சானிட்டரி நாப்கின்களையும்
கருத்தடை சாதனங்களையும் பெற
இன்னும் சிறு சிறு உதவிகள் வேண்டி

முடியுமானால்
உன்னைச் சிறிதளவு அதிகாரம் செய்ய

நான் சிறிதளவு அதிகாரத்தை
ஸ்திரப்படுத்திக் கொள்ள

எல்லா அறிதல்களுடனும்
விரிகிறதென் யோனி.

O

## நம் உறவைப்பற்றிச்
## சில குறிப்புகள்

முன் எப்போதும் சென்றிராத பாதையில்
சற்று முன்
நீயும் நானும் வருவதென்பது
தற்செயலாய் நிகழ்கிறது

முதல் சந்திப்புகள் உண்டாக்கும்
பதற்றமும் அபிப்ராயமின்மைகளும்
என்னிடத்தில் இல்லை

இந்த வாழ்வின் பேரில்
தீராத விரோதமோ
ஆழ்ந்த வெறுப்போ
எப்போதும் நமக்கிருந்திருக்குமா

பிந்தைய காலங்களில்
பின் ஏன் அப்படி ஆயிற்று?

நமது மொழி நமது போதாமைகளுள்
எப்படிச் சுருங்கிப் போயிற்று?

சம்பிரதாயமான உரையாடலுக்குப்
பொறுக்கும் வார்த்தைகள்
எல்லா நேரத்திலும் பொருந்திப்போவதில்லை
பொருந்தாத சமயங்களில் தவறிச் சிதறும்
கண்ணாடிப் பாத்திரம் போல

பகிர்ந்துகொள்ளும் மக்கிப்போன
வார்த்தைகள் கூட
இலக்கிலிருந்து நழுவி
முனை முறிந்து விழும் ஓசை
நமக்குக் கேட்கிறது

இந்த மௌனம்தான்
எத்தனை கச்சிதமாகப்
பொருந்துகிறது
எல்லா நேரங்களிலும்
முக்கியமாக விழித்திருக்கும்
போது

பெரும்பாலும்
தனக்குள்ளாகவே வசிக்க
நேரும் நானும் என் மொழியும்
சற்று
கடுமையாகவே
வெளிப்படக்கூடும்
என்றைக்கேனும்

O

## புன்னகைகள்

வீட்டு மூலையில்
இடிபாடுகளுக்கிடையில்
குவிந்திருக்கும்
எனது புன்னகைகள்

பழைய புன்னகைகள்
மலர்ச்சியான
அழகான
உண்மையான
புன்னகைகள்

என் புன்னகைகளைத்
தூசு தட்டி எடுக்கிறேன்

அவை மலர்ச்சியானவை
மலர்களால் ஆனவை
மதிப்பு வாய்ந்தவை
இனி வரும் காலங்களில்
அத்தகையதாய்
யாராலும் உருவாக்க இயலாதவை

இனி வரும் புன்னகைகளெல்லாம்
வலிந்து பெறப்பட்டு
குறைபாடுகளுடன் இருக்கும்
அந்தப் புன்னகைகள்
யாருக்குமே உதவ முடியாது
எனக்கும் கூட

எனது பழைய புன்னகைகளை
அழும்குழந்தைகளுக்கும்
துயருறும் மனைவியருக்கும்
வெறுப்பு மிகுந்த கணவர்களுக்கும் தருவேன்

அவர்களுக்கு உபதேசிப்பேன்
புன்னகையின் பயனை
அதைக் கையாளும் வழிமுறைகளை

O

## இந்த உன் வீடு

உன் வீட்டிற்குள் பதுங்கிக்கிடக்கும்
என் காலடிச் சுவடுகள்
இங்கே நானிருப்பதன் தடயங்களேயன்றி

இந்த உன் வீடு தரும் சௌகரியங்கள்
என்னுள் உருவாக்குகின்ற
வெளி உலகின் மீதான பீதியை
பெரும் பதற்றத்தை
என் மீதே ஒரு அவநம்பிக்கையை
கடும் வெயிலிலோ
பெருகும் மழையிலோ
மற்றைப்போதைக் காட்டிலும் அதிகமாக

வீட்டிற்குள்ளிருப்பதைக் காட்டிலும்
வீட்டிற்கு வெளியே செல்லும் பயணங்களில்
கூடவே பயணித்து இம்சிக்கும்
அறிவுரைகளால் நோயுற்ற என் மனம்

உன்னைப் பற்றிய என் அபிப்பிராயங்கள்
என்னுள்ளே வளர்த்தெடுக்கும்
உலகில் மிச்சமிருக்கும்
ஏனைய ஆண்களின்
மோசமான பிம்பங்களை.

உன் குறி கீறிப் பிறந்த
நம் குழந்தைகளின் எதிர்காலம்
பின்னப்பட்டிருப்பது
எனது ஒழுக்கமான நடத்தையாலும்
பணிவாலும்

உன் காதில் விழாமலிருக்க
என்னுடைய குரலல்ல,
கேவல்

வெறுமனேகுரல்களோடும்
உடல்களோடும் மட்டுமே
ஜீவித்து
தூசி படிந்த ஆன்மாவில்
குடியேறும் ஆந்தைகளின் கூட்டம்
துளையிடும் என் அன்றாட காரியங்களில்
பெரும் ஓட்டையை

வானில் எரியும் நட்சத்திரங்களுக்கு
மத்தியில்
வெகு அமைதியாகவே இருக்கிறது
நான் மட்டுமேயிருக்கும்
இந்த உன் வீடு

O

மஞ்சுள வெடிவர்த்தனவின்

# 'மேரி எனும் மரியா' சிறுகதைத் தொகுதிக்கு தடை!

ராவய சிங்கள வாராந்தப் பத்திரிகையில் கடமையாற்றும் மஞ்சுள வெடிவர்த்தனவின் "மேரி நம் வு மாரியா" (மேரி எனும் மரியா) சிறுகதைத் தொகுப்பு, கிறிஸ்தவ மதத்தை இழிவு-படுத்துகின்றது என்ற குற்றச்-சாட்டின் பேரில் தடை செய்யப்பட்டுள்ளது.



சந்தமண்டல சஹா அம்மா (சந்திர மண்டலமும் அம்மாவும்), சுகத்தி உத்யானயென் நெரபீம (அழகிய பூங்காவிலிருந்து நீங்குதல்), சாந்துவரயா சஹா தெக்கே காசிய (பாதிரியாரும் இரண்டு ரூபா நாணயமும்), எத்தேனம பிஸ்ஸ பளு கதாவக் (உண்மையான விசர்நாய்க் கதை), சுத்தவூ யூதாஸ் (பரிசுத்தமான யூதாஸ்). மேரி நம் வு மாரியா(மேரி எனும் மரியா) ஆகிய 6 சிறுகதைகள் இந்நூலில் அடங்கியுள்ளன.

கடந்த ஓகஸ்ட் 31 அன்று கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நூல் வெளியீட்டு விழா நடைபெறவிருந்த சூழ்நிலையிலேயே நூலுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## நாலாம் மாடியில் எழுத்தாளர் மீது விசாரணை!

தேசிய கத்தோலிக்க மக்கள் தொடர்பூடக கேந்திரத்தைச் சேர்ந்த (ஓ.சி.ஐ.சி) மதத்தலைவர்கள் இந்நூலுக்கெதிரான முறைப்பாட்டைச் செய்து தடையை நீடிக்கவும் கோரியுள்ளனர். இது குறித்து மஞ்சுள அவர்கள் சி.ஐ.டியினரினால் 4ம் மாடிக்கு கொண்டு சென்று விசாரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நூல் புனித பைபிளில் அடங்கியுள்ள விடயங்களை இழிவு படுத்துவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்நூல் குறித்து பிரபல சிங்கள எழுத்தாளர் டெனிசன் பெரேரா தெரிவிக்-கையில், "மேரி நம்வு மாரியா சிறுகதைத் தொகுதி திறனாய்வு ரீதியில் நோக்க வேண்டிய கலைப்படைப்பே அன்றி கத்தோலிக்க மதத்திற்கு எதிராக கட்டியெழுப்பப்பட்ட இழிவான படைப்பு என எவராவது கூறுவார்களாயின் அது புத்திஜீவித்தனமான செயற்பாடு எனக் கூற முடியாது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் நூலுக்குத் தடையுத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மஞ்சுள வெடிவர்தனவுடன் தொடர்பு கொண்ட போது பின்வரும் தகவல்கள் கிடைத்தன.

ஓகஸ்ட் 31ம் திகதி பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் மஞ்சுளவினதும், இன்னொரு எழுத்தாளரினதும் நூல் வெளியீட்டு விழா இடம்பெற சகல ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்ட நிலையில் ஓகஸ்ட் 30 மாலை 5 மணியளவில் சி.ஐ.டியினர் நூல் அச்சிடப்பட்ட அச்சகத்திற்குச் சென்று நூல்கள் அனைத்தையும் எடுத்துச் சென்றுள்ளனர். ஓ.சி.ஐ.சி மத நிறுவனத்தைச் சேர்ந்த சிறில் காமினியின் முறைப்பாட்டின் பேரில் தாம் இந்த நடவடிக்கையை எடுத்ததாகவும், ஓகஸ்ட் 31ம் திகதி இரவு மஞ்சுளவுடன் சி.ஐ.டியினர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மறுநாள் காலை சி.ஐ.டி அலுவலகத்திற்கு வருமாறு பணித்துள்ளனர். பின்னர் செப். 1ம் திகதி பிற்பகல் மஞ்சுள நீதிமன்ற ஆணையின் பேரில் கைது செய்யப்பட்டு மாளிகாகந்த நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு ஒரு லட்ச ரூபா சரீரப் பிணையில் அவரை விடுவித்துள்ளனர்.

செப். 12 அன்று கிரிமினல் குற்றத்தின் பேரில் சி.ஐ.டியினர் விசாரணை நடாத்தியதாகவும், செப்.17 வரை தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு மீண்டும் செப். 27 அன்று அளுத்கடை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறவுள்ளதாகவும் மஞ்சுள தெரிவித்தார்.

ஒரு நூலை படைப்பது கிரிமினல் குற்றமா என்று தனது சட்டத்தரணி ரண்-பண்டா செனவிரத்ன வினவிய பொழு-திலும் எந்தவித பல-னும் ஏற்படவில்லை என மஞ்சுள வெடி-வர்தன சரிநிகரிடம் தெரிவித்தார்.

ஜனநாயக நாடொன்றில் ஒரு நூல் படைக்கப்-படுவது கிரிமினல் குற்றமென வலியு-றுத்தப்படுவது குறித்-துத் தான் சிரிப்பதா, அழுவதா எனவும் தெரியவில்லை என்-கிறார் மஞ்சுள.

பிரபல சிங்கள எழுத்தாளர்கள், பேராசிரியர்கள், புத்திஜீவிகள் , இலக்கிய ஆர்வலர்கள் இந்த மூடத்தனமான நடைமுறை குறித்து பத்திரிகைகளில்,



சஞ்சிகைகளில் பலத்த எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர். எனினும் நிறுவன-மயப்பட்டுள்ள புனிதமான அமைப்பின் வணக்கத்துக்குரிய புனிதங்கள் இழிவாக சித்திரிக்கப்பட்டுள்ளது என்ற தர்க்கத்தின் முன் ஜனநாயகமாவது, படைப்பாளியாவது என்றே தோன்றுகின்றது.

இச்சிறுகதைத் தொகுதியில் உள்ள சிறுகதைகள் ஏற்கெனவே ராவய பத்திரிகை-யில் வெளிவந்தவை. எதிர்ப்பு தெரிவிப்-பவர்கள் அவற்றைக் கவனிக்கவில்லை போலும்.

விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட விடயங்களை விமர்சனங்களுக்கு உட்-படுத்துவது கிரிமினல் குற்றமாகி விட்ட நிலையில் மஞ்சுள வெடிவர்தனவின் உளக்குமுறல் இப்படியிருக்கிறது:-

"நான் ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தேன். பிறந்து கண்-விழிக்கும் முன்னரேயே அதனைக் கொன்று விட்டனர். என் கவலை-யெல்லாம் நான் பெற்றெடுத்த குழந்தையை என்னால் கண்டுகளிக்க முடியாமற் போய்விட்டது என்பதே."

~ ரத்னா

# எலிவேட்டை

எலிகள் பற்றி எழுத வேண்டும் என்ற எந்தச் சிந்தனையும் எனக்கு ஆரம்பத்தில் இருக்கவில்லை. அப்படி எழுதப்படக் கூடியளவுக்கு அது முக்கியமான ஒன்றுமல்ல... ஆனால், நாட்கள் செல்லச் செல்லத்தான் அதன் முக்கியத்துவம், அது எங்களில் ஏற்படுத்திய பாதிப்புக்களை எங்களால் உணர முடிந்தது. இங்கு நான் எங்கள் என்று பன்மையில் குறிப்பிடுவது எனது அறைக்காரரையும் சேர்த்துதான். அவர் தான், எங்களின் நவீன வசதிகள் கொண்ட, ஏசி பூட்டப்பட்ட அறையில் எலியின் வருகையை முதலில் அறிந்து கொண்டவர். அவர் இலங்கையின் பெரும்பான்மை மொழிக்காரர். இங்கு வந்தபோது நானும் அவரும் எந்தத் தெரிவுகளுமின்றி இருக்க வேண்டியேற்பட்டது. உண்மையிலேயே எங்களுக்கிடையிலான எந்தப் பிரிவுகளும் எங்களை அந்நியப்படுத்துகிற ஒன்றாய் அமையவில்லை. ஒரே நாடு என்ற வெளிநாட்டில் இருக்கிறபோது வருகிற ஓர் உணர்வு எங்களைப் பிணைத்தது. பொதுவாக எங்களை நாட்டுப்பற்று இல்லாதவர்கள் என்று குற்றம் சாட்டுவார்கள் பெரும்பான்மையினர். இது கிரிக்கெட் நடைபெறும் காலங்களில் மிக மோசமாக வெளிப்படுவதுண்டு. கிரிக்கெட்டின் போது இலங்கை முஸ்லிம்கள் பாகிஸ்தானுக்கு சப்போட் பண்ணுகிறவர்கள் என்றும், தமிழர்கள் இந்தியாவுக்கு சப்போட் பண்ணுகிறவர்ளென்றும் எதிர்ப்புணர்வுகள் பரவலாகவே வளர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால், இங்கு ஆச்சரியந்தந்த விடயம் என்னவென்றால் குற்றஞ்சாட்டப்படுகிறவர்கள் இலங்கையின் தீவிர ஆதரவாளர்களாய் இருப்பதோடு விளையாடும் மற்ற நாட்டினருடன் (குறிப்பாக இந்திய பாகிஸ்தான்) சில வேளைகளில் சண்டையும் பிடித்துக்கொள்கிறார்கள். அந்தளவுக்கு அவர்களின் பற்று வெளிப்படுகிறது. ஆனால், கிரிக்கெட் தொடர்பான எல்லா ஆர்வங்களும் பைத்தியக்காரத்தரனம் என்பது நல்ல சிந்தனையுள்ள ஒருவனுக்கு இப்போது புரிந்திருக்கும். ஏற்கெனவே வெற்றி தோல்விகள் நிர்ணயிக்கப்படுகிற பந்தயத்தை நாம் வாய் பிளந்து போய் பார்த்துக்கொண்டிருந்தது எவ்வளவு முட்டாள் தனம் என்பது இப்போது தெரிகிறது தானே.

எலி பற்றி எழுத எங்கேயோ போகிறனே...? எல்லாம் எலியுடனான தொடர்பால் வந்தவைதான்! எனது அறைக்காரர். அவருக்கு ஆழ்ந்த தூக்கம் வராத ஒரு இரவில் எங்கள் மின்சார சமையலடுப்பின் மேலே.. தெறித்துச் சிதறியிருந்து... நாங்கள் துடைக்க மறந்த சில உணவுப் பருக்கைகளை எலியொன்று மோப்பம் பிடித்து மேய்ந்து கொண்டிருந்ததைக் கண்டிருக்கிறார். விழிப்போட அதை அடிக்கும் முயற்சியில் எழும்பிப்போ அது புத்திசாலித்தனமாக தப்பியோடிவிட்டது. காலையில் தான் இதை அவர் என்னிடம் சொன்னார். நாங்கள் எங்கள் உணவு உடை மற்றும் பிற பொருட்கள் மீது கவனமாக இருக்க வேண்டும் என்றும் எச்சரித்தார். எலிக்கு முதல் ஈர்ப்புத் தருகிற உணவுப் பொருட்களை, எச்சங்களை எந்த விதத்திலும் வெளித்தெரியச் செய்யக்கூடாதென்றும் சொன்னார். அதன் ஒரு கட்டமாக நாங்கள் எச்சங்களைச் சேர்த்து வைத்திருக்கிற கழிவுக்கூடையை இரவிலேயே துப்பரவாக்கிவிட வேண்டுமென்று முடிவெடுத்தோம். வழமையாக அதை நாங்கள் காலையில் வேலைக்குச் செல்கையிலேயே கொண்டு போய்க் கொட்டுவதுண்டு.

தற்செயலான விழிப்பு நிலையில் எலியின் வருகையை அறிந்தவர் மறுநாளிலிருந்தே அதற்கென்றே விழிப்பாயிருக்கத் தொடங்கிவிட்டார். உண்மையில் எலியானது ஆரம்பம் தொட்டே எனக்கு எந்த அலட்டலையும் தந்த ஒன்றல்ல. ஆனால், இவரின் இந்த தீவிர ஈடுபாடு என்னையும் தவிர்க்க முடியாதபடி உள்ளிழுத்தது. நானும் அது பற்றிய அக்கறையை வெளிப்படுத்த வேண்டியேற்பட்டது. மறுநாள் இரவு இரண்டு மூன்று தடவை சமையல் கட்டில் அது மேய்ந்து கொண்டிருந்ததைக் கண்டோம். அவர் அருகே எடுத்து வைத்திருந்த தும்புத்தடியால் மங்கிய வெளிச்சத்தில் அதை அடிக்க முற்பட்டார். அது ஓடித் தப்பி விட்டது. அவரின் செய்கை எனக்கு ஒரு நகைச்சுவைக்காட்சி போலிருந்தது. "நாளை மறக்காதீர்கள். ஒரு எலிபொறி அல்லது மருந்து வாங்க வேண்டும்" என்றார். "ஆமென்று விட்டு நான் தூங்கிவிட்டேன். அவர் உடனே தூங்கியிருக் மாட்டார் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்.

காலையில் வேலைக்குத் தயாராகும் போது "இது எங்கால வருகுதோ தெரியாது!" என்றார். நான் "பின்னால் ஏதாவது ஓட்டைகள் இருக்குமாக்கும்" என்றேன். எலி நுழைவதற்கான எந்தச் சாத்தியங்களும் அற்றதாகத் தான் எமது அறை இருந்தது. நாம் வந்த இந்த பல மாதங்களுக்கும் எந்த எலியின் வருகையுமே நிகழவில்லை!

அன்று மாலை வேலையால் வந்தவுடன் "மார்க்கட் பக்கம் போனால் எலி மருந்து பாருங்கள்" என்றார். சரியென்றேன். எலி பற்றி அன்று நிறையக் கதைத்தார். உணவில் வாய் போட்டு விடும் என்றார். நோய் பரவும் என்று பயப்பட்டார். நான் பிடித்து விடலாம் என்று நம்பிக்கை தெரிவித்தேன். ஒரேயொரு எலிதான் திரிகிறது என்று நம்பகமான தகவல் தந்தார்.

இருவரும் பங்கு போட்டு எலி மருந்து வாங்கினோம். அது பசை போன்றது. ஏதாவது ஒரு தட்டில் பூசிவிட்டு எலி வருகிற இடத்தில் வைத்தால் அது மேய்கின்ற போது ஒட்டிக்கொள்ளும் என அதன் பெட்டியில் தயாரிப்பாளர்களின் விளக்கம் இருந்தது. படுக்கைக்கு போக முன்னர் அதை ஒரு காட்போட்டில் பூசி எலி வருகிற இடத்தில் வைத்துவிட்டு நாங்கள் கட்டிலில் ஏறிக்கொண்டோம். எலி பிடிப்பதிலேயே எங்கள் முழுக்கவனமும் அன்று திரும்பி விட்டிருந்தது. அதனால், வழமையாகக் கேட்கும் பிபிசி ஆங்கிலச் செய்தியைக் கேட்காமலேயே மிக அமைதியாக இருந்து கொண்டோம். ஒரு எலி எப்படி வலையில் மாட்டிக்கொள்கிறது என்பதை இன்று நேரடி ஒளிபரப்பில் பார்ப்பது போன்று பார்க்கப்போகிறோமென நான் நினைத்துக்கொண்டேன். கிட்தட்ட ஒரு மணி நேரமாக விழித்துக் கொண்டிருந்தோம் அதன் எந்த அசைவுகளும் இல்லை. இதற்கு மேல் விழித்திருந்தால் வேலைகாகாது என நான் தூங்கிவிட்டேன். காலையில் வேறொரு பக்கத்தைக் காட்டி பின்னிரவில் எலிச் சத்தம் கேட்தென்றார்.

பிறகு கிட்டத்தட்ட பத்து நாட்களாக வெவ்வேறு இடங்களில் வைத்து வேட்டையைத் தொடர்ந்தோம். நாங்கள் வைக்கும் இடங்களின் பக்கம் எலி எட்டிப்பாக்கவேயில்லை. ஆனால், வெவ்வேறு இடங்களில் அதன் நடமாட்டம் இருந்ததை நாங்கள் அறிந்தோம். தூக்கம் குழம்புளவுக்கு அது சத்தங்களை எழுப்பியது. இந்த ஓட்டல் வேட்டை இனியும் உசிதமானதல்ல. லாபமானதுமல்ல என்று நினைத்தோம். எலிப்பொறி கிடைக்காதா? என்றார். தேடிப்பார்ப்போம் என்றேன். ஆக, இன்றுவரை எங்களால் அந்த எலியைப் பிடித்துக்கொள்ள முடியவில்லை.

இப்படிப்போன நாட்களில் தான் என் நண்பனொருவனின் அறையில் எலிவேட்டை என்ற ஆங்கிலப் படம் ஒன்று பார்க்கக் கிடைத்தது. அதில் எலிதான் கதாபாத்திரம்! ஒரு எலியை வேட்டையாட எடுக்கும் முயற்சிகளும் அதை எலி எவ்வாறு தாண்டிச் செல்கிறது என்பதுவும் நகைச்சுவையோடும், விறுவிறுப்போடும் படமாக்கப்பட்டிருக்கிறது. எங்கள் முயற்சிகளும் திரைப்பட அளவுக்கு முக்கியமானதென்றும் அதன் மூலம் புரிந்து கொள்ள முடிந்தது. தமிழில் இப்படியெல்லாம் படமெடுத்து வீணடிக்கமாட்டார்கள் தானே.அதுதான் அது பற்றி எழுதி கொஞ்சம் அறுப்போமென்று...? நீ அந்தப் படத்தைப் பார்த்திருக்கிறாயா? வெள்ளைக்காரர்கள் எதை எடுத்தாலும் பார்ப்பாய் தானே. நாங்கள் எழுதினால் அறுவையாக்கும்?

சரி, சரி உனக்கு எலி பிடிக்கவில்லையென்றால், எலியில் வருகிற "எ"வுக்கு பதிலாக "பு"போட்டு வாசி பிடித்துக் போகும். அல்லது படத்தை பார்.

நன்றி - நூலகத்திட்டம்



# ஆண்கள் உலகத்தை ஆட்சி செய்யும் "தாய்க் கடவுள்"

எல்லா உறவுகளும் அதிகாரத்தினால் பிணைக்கப்பட்டவை. சமூகத்தில் ஆண்கள் அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருப்பதால் பெண்கள் இரண்டாம் தரத்திற்கு பிற்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான சூழலில் பெண்கள் அதிகாரத்தை கைப்பற்றினால்...? என்ற வினாவுக்கு ஒரு பரந்த விளக்கத்தை தரும் படமாக God Mother விளங்குகின்றது. A woman who dare to rule man's world என்பது திரைப்படத்தின் கருக்கக் குறிப்பு. இயக்குனர் வினய் சுக்லா இப்படத்தை இயக்கியுள்ளார். தற்போதைய தேர்தல் சூழலில் இப்படம் அரங்கு நிறைந்த காட்சிகளாக அன்றி அரங்கு வெறிச்சோடிய காட்சிகளாக கொழும்பு அசோகா திரையரங்கில் காட்டப்படுகிறது.

சபனா ஆஸ்மி ரம்பி தேவியாக, ஒரு God Mother ஆக திரைப்படத்தில் விஸ்வரூபமெடுத்துள்ளார். சாதாரண ஒரு பெண்ணாக தன் கணவனின் சாதித் தலைமைத்துவ செயற்பாடுகளை அவதானித்துக் கொண்டு, கணவனின் அரசியல் வளர்ச்சியை


சபனா ஆஸ்மி

எச்சரித்து ஆசுவாசப்படுத்துபவளாக, கணவனின் மரணத்தின் பின் மைத்துனனின் அவதூறுகளை தாங்கொணாது பஞ்சாயத்துத் தேர்தலில் தன் அரசியல் ஆணவத்தை வெளிக்காட்டுபவளாக, அதிகாரத்திற்காக தன் எதிரிகளை ஈவிரக்கமின்றி தன் உதவியாளனின் உதவியுடன் கூறுபோடுபவளாகவும், தன் மகனின் பலவந்தமான காதலுக்குட்படும் பெண்ணை காப்பாற்றி வேறு ஒரு சாதியைச் சேர்ந்த ஆணுக்கு (அப் பெண்ணின் காதலன்) மணம் முடித்து வைப்பவளாகவும் இறுதியில் இந்த ஒரே காரணத்திற்காக கொலைக்காளாகுபவளாகவும் சபனா ஆஸ்மி படம் முழுவதும் வியாபிக்கும் ஒரு முழுமையான பாத்திரமாக (Round Character) உள்ளார்.

அரசியல் ஒரு சிறந்த விளையாட்டு என்று வரிக்கு வரி கூறிக் கொண்டு ஆண்நிலைப் படுத்தப்பட்ட தலைமைத்துவங்களை கேள்விக்குட்படுத்தும் பாத்திரம். அதேநேரம் மீளவும், ஒரு பெண் அரசியலுக்குள் பிரவேசித்து அதிகாரங்களை கைப்பற்ற, தன் அடையாளத்தைப் பேண, தன் கணவனின், தன் தந்தையின் பின்னணி அவசியம் என்ற விடயம் புலப்படுத்தப்-[illegible] குறிப்பாக ரம்பி தேவி அரசியலில் ஈடுபடுவது தொடக்கம், தன் இறப்புவரை மறைப்பட்ட ஆண்களை சந்திக்கிறாள். தன் எதிரிகளாகவும், கேடு நினைப்பவர்களாகவும் கருதும் அவர்களை ஈவிரக்கமின்றி கொல்லும் ஆழ்ந்த அனுதாபங்களுடன் மரணச் சடங்குகளில் கலந்து கொள்ளும் ஒரு வன்முறை போக்கு கொண்டவராக ரம்பி தேவி சித்திரிக்கப்பட்டிருத்தலானது அதிகாரம் என்ற விடயத்தின் முன் ஆண்கள் பெண்கள் என்ற பேதம் இல்லை என்பது தெளிவுறுத்தப்படுகின்றது எனக் கொள்ளலாம்.

ரம்பிதேவி ஒரு இறுக்கமான பெண், "மர்" கோத்திரத்தை சேர்ந்தவள். தன் தாய் மண்ணை நேசிப்பவள். கொடூரமான வரட்சி சூழல் காரணமாக உற்றார் உறவினருடன் வேறிடம் தஞ்சம் அடைய மாட்டு வண்டிகளில் கண்ணீருடன் புறப்படும் அவர்களில் ரம்பிதேவி மட்டும் உணர்ச்சிகளை வெளிப்படுத்தாது இறுக்கமான முகத்துடன் புறப்படுகிறாள்.

தஞ்சமடையும் இடத்தில் மேர் கோத்திரத்தின் பரம எதிரி கிகனை கொல்லும் அவளது கணவன் வீரம் அச்சாதி மக்களிடையே பிரபலமானவனாகிறான். மக்கள் அவளை தலைவனாக ஏற்றுக் கொள்கின்றனர். கெசம்பாய் எனும் அரசியல்வாதி தனக்கு சாதகமாக 'வீரத்'தை பயன்படுத்தி தலைவன் என்ற மட்டத்தில் வழமை போல் அவன் பலவித துன்பங்களுக்கு ஆளாகுகின்றான். தன் இன மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய எதிரிகளைக் கொன்றும், நண்பர்களைத் தேடியும் கொள்கிறான். பின்னர் வசதி வாய்ப்புகளுடன் முன்னேறும் ரம்பிதேவியின் கணவன் அரசியல் சதியினால் கொல்லப்படுகிறான். எதற்கும் கலங்காத மனப்பக்குவம் கொண்ட ரம்பி மீண்டும் அதே இறுக்கமான முகத்துடன் சாவு வீட்டில் வீற்றிருக்க தன் மைத்துனன் மேருவின் வரவின் போது மட்டும் சற்று நெகிழ்வடைகிறாள். கணவனின் மரணத்தின் பின் அரசியல் தலைமைத்துவத்தைப் பெற மைத்துனன் முனைந்து ரம்பிதேவி ஒரு பெண் அவளால் அடுப்பங் கரையில் மட்டுமே ஆட்சி செய்ய முடியும் என சவாலிட அதை கேட்கும் ரம்பிதேவி, துணிவுற்று 'விதான் சபா' தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றி பெற்று தலைவியாகிறாள். ரம்பிதேவியின் மெய்க்காப்பாளன் ஜக்ரா தன் தங்கை வேறு ஒரு சாதி ஆணை காதலித்த குற்றத்திற்காக கௌரவ கொலை செய்தவன். பதவியில் இருக்கும் வேளை கோடிக்கணக்கில் ஊழல் செய்யும் பேர்வழிகளை மெய்க்காப்பாளனின் உதவியுடன் தீர்த்துக்கட்டுகிறாள். கிராமங்களில் பெண்களின் தேவைகளை பூர்த்தி செய்து அவர்களுடன் ஆடிப்பாடி மகிழ்கிறாள். இறுதியில் சமூகத்தினால், சாதியினால் மதிக்கப்படுபவளாகவும் மாறுகிறாள்.

தாயின் வன்முறைகளைப் பார்த்து வன்முறையாளனாகவும், தன்முனைப்பு வாய்ந்தவனாகவும் மாறும் ரம்பிதேவியின் மகன் கார்சன் தன்னை விரும்பாத ஆனால், வேறு ஒரு சாதியைச் சேர்ந்த ஆணை காதலிக்கும் பெண்ணான சேஜலை திருமணம் புரிந்து வைக்குமாறு ரம்பிதேவியிடம் கோர ரம்பிதேவி, உண்மை நிலையை அறிந்து அப்பெண்ணை காதலனுடன் சேர்த்து வைக்கிறாள். ஆத்திரமுறும் ரம்பிதேவியின் மகன் அப்பெண்ணின் காதலனை ஆட்களுடன் சென்று துவம்சம் செய்கிறான். இதனை சாதகமாக பயன்படுத்தும் கெசம்பாய் கலவரச் சூழலை ஏற்படுத்துகின்றான். ரம்பிதேவிக்கு எதிரான அரசியல்வாதிகள் கலவரத்துக்கு தூபமிடுகின்றனர். இறுதியில் எல்லாவற்றுக்கும் முடிவு காணும் முகமாக ரம்பிதேவி மேர் கோத்திரத்தின் கண்மூடித்தனமான சாதிவேற்றுமையையும் ஆதிக்க அரசியலையும் சாடிவிட்டு துப்பாக்கிச் சூட்டுக்கு இரையாகி நிசப்தமடைகிறாள்.

இது God Motherன் திரைக்கதையாகும்.

இயக்குனர் வினய் சுக்லா சாதாரணப் பெண் ஒருவரின் கையில் அதிகாரங்களை வழங்கி அரசியலில் அப் பெண் அனுபவிக்கும், முகம்கொடுக்கும் சவால்களை துன்பங்களை நேர்த்தியாக சித்திரித்துள்ளார். சாதிக்க நினைக்கும் பெண்கள் அரசியலில் ஈடுபடும் போது வன்முறையாளர்களாகவும், பெண்ணுக்குரிய இயல்புகளை தவிர்ப்பவர்களாகவும், தாயன்பு போன்ற பாசப்பிணைப்புகளை கைவிட வேண்டியவர்களாகவும் மாற வேண்டிய சூழல் ஏற்படும் என்பது இயக்குனர் திரைக்கதை மூலம் கூற வந்த விடயம் என்பதை அனுமானிக்கலாம்.

கதையம்சத்திற்கு பொருத்தமாக சபனா ஆஸ்மியின் இயல்பான ஆணவம் மிகுந்த நடிப்பும், பாத்திரத்துடன் ஒன்றும் சுபாவமும் அருந்தலானது. ஒரு கட்டத்தில் தலைமுக்காட்டை மிகக் கவனமாக இழுத்துப் பிடிக்கும் அவள் இறுதிக் கட்டத்தில் சுயமாக முக்காட்டை பறக்கவிட்டு கொண்டே ஜீப் வண்டியை ஓட்டுவதும், துப்பாக்கியில் மிகக் கவனமாக குறிபார்ப்பதும் வீறுகொண்ட பெண்ணியல்புகளை வெளிப்படுத்துகின்றன.

எவ்வாறாயினும், படம் முழுவதும் விரவிக் கிடக்கும் வன்முறைகள், பசுமையற்ற பாழ்வெளிகள், குழப்பமும், கொடூர வெறியையும் உள்வாங்கும் முகங்கள், வாழ்வின் அவநம்பிக்கைகளை அவலங்களை குறியீடு செய்கின்றன.

சமகாலத்தில் பெண்கள் அரசியலில் ஈடுபடுவதற்கு வன்முறை அரசியல் பெரும் தடையாக இருக்கின்றது எனக் குற்றம் சாட்டப்படுகின்றது. எனினும், God Mother ரம்பிதேவி இந்த வன்முறைகளுக்கு விதிவிலக்கானவர் அல்ல என்பது சித்திரிக்கப்படுகின்றது. ரம்பிதேவி போன்ற பெண் அரசியல்வாதிகளை நம்மத்தியில் காண முடியாவிட்டாலும், அதிகாரத்தினால், அதிகார வெறியினால் அனைத்தையும் ஆட்டிப் படைக்கும் "ரம்பிதேவிக்களை" காணக் கூடியதாகவே உள்ளது.


- ரத்னா

# தலை மறைவு வாழ்க்கை

- றெஜி சிறிவர்த்தன

இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்றில் லங்கா சம சமாஜக் கட்சிக்கும், ட்ரொட்ஸ்கியத்துக்கும் ஒரு சிறப்பான இடம் இருக்கிறது. இலங்கையில் ட்ரொட்ஸ்கியம் பற்றிய ஆவணப் படுத்தப்பட்ட சீரிய ஆய்வுகள் வெளிவராமை ஒரு வெற்றிடமாகவே உணரப்பட்டிருந்தது. ட்ரொட்ஸ்கியம் பற்றி நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டிருந்த ஒரு நூல் இப்போது வெளியாகி உள்ளது.

பேராசிரியர் வை. ரஞ்சித் அமரசிங்ஹ எழுதியுள்ள Revolutionary Idealism and Parliamentary Politics : A Study of Trotskyism in Sri Lanka என்பதே அந்நூலாகும். இந்த நூலை சமூக விஞ்ஞானிகள் சங்கம் (Social Scientists' Associa-





tion - SSA) வெளியிட்டுள்ளனது. இன்னுமொரு முக்கியமான நூலும் இப்போது வெளிவந்துள்ளது. றெஜி சிறிவர்தன எழுதியுள்ள Working Underground, The LSSP in Wartime : A Memoir of Happenings and Personalities என்பதே மற்றைய நூல். இதனை இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையம் (International Centre for Ethnic Studies - ICES) வெளியிட்டுள்ளது.

றெஜி சிறிவர்தனவின் நூல் லங்கா சம சமாஜக் கட்சியுடனும் ட்ரொட்ஸ்கியத்துடனுமான அவருடைய அனுபவங்களையும் நினைவுகளையும் மீட்டிப் பார்க்கிற ஒரு "நினைவெழுதல்" முயற்சியாக அமைகிறது.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஐந்து வருடங்கள் றெஜி சிறிவர்தன லங்கா சம சமாஜக் கட்சியில் பணியாற்றினார். அந்த வருடங்களில் லங்கா சமசமாஜக் கட்சி தடைசெய்யப்பட்ட ஒரு கட்சியாகத் தலைமறைவாக இயங்கி வந்தது. அதனுடைய முக்கியமான தலைவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளால் சிறையிலடைக்கப்பட்டிருந்தனர்.

இந்தக் காலகட்டத்தில் தான் லங்கா சம சமாஜக்கட்சி ட்ரொட்ஸ்கியத்தை முற்றுமுழுதான வழிகாட்டும் இலட்சியமாக வரித்துக் கொண்டதுடன் இந்தியாவிலும், இந்திய




முழுமைக்குமான ஒரு ட்ரொட்ஸ்கிய கட்சியை உருவாக்க முனைந்தது. இரகசிய அச்சகங்களை நிறுவி காலனித்துவ எதிர்ப்புப் பிரசுரங்களையும் செய்தித் தாள்களையும் அச்சடித்து விநியோகிப்பதிலிருந்து சிறையிலடைக்கப்பட்டிருந்த தலைவர்களுள் நால்வரை வெற்றிகரமாகச் சிறையும் மீட்டது வரை இந்தக் காலகட்டம் லங்கா சம சமாஜக் கட்சியின் வரலாற்றில் ஒரு முக்கியமான கால கட்டமாகும்.

இந்தக் காலகட்டம், பற்றிய தன்னுடைய அனுபவங்களையும் தான் சந்தித்துப்பழக நேர்ந்த, இணைந்து பணிபுரிந்த முக்கியமான இடதுசாரித் தலைவர்கள் பற்றியும் இந்நூலில் சுவைபட விவரிக்கிறார் றெஜி சிறிவர்தன. பேர்னாட் சொய்ஸா, பீற்றர் கெனமன், நா.சண்முகதாசன், கொல்வின் ஆர். த சில்வா, பிலிப் குணவர்த்தன, டொறிக் த சூஸா போன்ற பலர் பற்றிய உயிர்ப்பான சித்திரங்கள் இந்த நூலூடாக எமக்குக் கிடைக்கின்றன.

றெஜி சிறிவர்த்தன ஒரு கவிஞர், பத்திரிகையாளர், நாடகாசிரியர், இலக்கியத் திறனாய்வாளர். அவருடைய கட்டுரைகளின் தொகுதி ஒன்று, சோவியத் யூனியனின் உடைவு எனும் நூலாகத் தமிழில் வெளிவந்துள்ளது. அவருடைய ஆங்கில நூல்கள் Poems and Selected Translations (1993), Octet: Collected Plays (1995), The Lost Lenore (1996), Among My Souvenirs (1997).

றெஜி சிறிவர்தனவின் working Underground, The LSSP in Wartime A Memoir of happenings and Personalities நூலின் முக்கிய பகுதிகளின் தமிழ் மொழிபெயர்ப்பு அடுத்த இதழிலிருந்து தொடர்ச்சியாக [illegible]

- அரவிந்






# மாற்று மறுப்பதேன்?

தமிழ் இனி 2000 மாநாடு தொடங்க முன் குமுதம் பத்திரிகையில் இருந்து வந்த ஞானபாரதி காட்டிய அறிக்கை ஏன் சரிநிகர் இதழ் 201ல் பிரசுரிக்கவில்லை. அதற்கு பதிலாக நிறப்பிரிகை செப்டெம்பர் 2000 இதழில் பார்க்குமாறு சரிநிகர் எழுதியுள்ளது. ஏனெனில் தமிழில் மாற்றுக்கருத்துக்கு களம் அமைத்து கொடுத்து வருகிறோம் என கூறும் சரிநிகர் அ. மார்க்ஸ் எழுதிய பிரசுரித்தை பிரசுரிக்க மறுப்பதேன்? ஆவலர்களும் அ. மார்க்ஸ் எழுதிய அறிக்கையை அறிய ஆவலோடு உள்ளனர். ஏனெனில் கவிஞர் மனுஷ்யபுத்திரன் கூறுவது போல் நாங்களும் மதிக்கிற மிக முக்கிய மனிதர் மார்க்ஸ் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டிய மார்க்ஸ் ஏன் கலந்து கொள்ளவில்லை?

தமிழ் இனி மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்களால் எடுக்கப்பட்ட மாநாட்டு தீர்மானங்களில், தீர்மானம் ஒன்று தொடர்பாக சில கோரிக்கைகள் எழுகின்றன.

கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகப் புரையோடிப் போயுள்ள தமிழ்த் தேசிய விடுதலைப் போரை உடனடித் தீர்வு ஒன்றின் மூலமாக நிறுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். ஆனால், தமிழ்த் தேசிய விடுதலைப் போருக்கான தீர்வு காணப்பட வேண்டும் என உண்மையான அக்கறை மாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்கு இருந்ததா? அவ்வாறு இருக்குமாயின் இந்திய அரசிடம் தீர்வு காணுமாறு கோரிக்கை விட்டு இருக்கலாம். வெறுமனே உயிர் அழிவும், சொத்து அழிவும் ஏற்படுகிறது. நோயும் வறுமையும் அடுத்த சந்ததியை பாதிக்கும் என இவர்களின் தீர்மானம் கூறுகிறது. சர்வதேச மத்தியஸ்தத்தின் ஊடாகவும் அணுகி தீர்க்க முடியாமல் பேரினவாதம் தலைவிரித்து ஆடும் போது ஒரு இலக்கிய மாநாடு - தீர்வு காணுமாறு தீர்மானம் நிறைவேற்றி இருப்பது கவலை தருகிறது. இந்தக் கோரிக்கையை தமிழக அரசிடம் அல்லது வெளிநாடு ஒன்றிடம் முன்வைத்து இருக்கலாம்.

**நயினை ஆனந்தன**



பெண்கள் உரிமைகளை கட்சிகளின் கொள்கைகளில் செயற்படுத்தப்படுவது குறித்து பெண்களை அறிவூட்டும் கூட்டம் ஒன்று செப். 20 கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் இடம்பெற்றது.

பொதுத்தேர்தலில் போட்டியிடும் பெண் வேட்பாளர்களான ஐ.தே.கவைச் சேர்ந்த சுனேத்ரா ரணசிங்க, புதிய இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த நிமல்கா பெர்ணாந்து, லிபரல் கட்சியைச் சேர்ந்த மாலின் புறோக்கன்விச் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டதுடன் பலதரப்பட்ட பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்தோரும் பங்குபற்றினர்.

*படப்பிடிப்பு: ஜனப்பிரிய சமரதிவாகர*

# திருமலை:

கொள்வதில் அக்கறை காட்டுவது தெளிவாகத் தெரிகிறது.

டெலோ, ஈ.பி.டி.பியினர் வேட்பாளர்களுக்கு முக்கியத்துவம் கொடாமல் கட்சிக்கே வாக்களிக்குமாறு கோரி வருகிறார்கள். வரதர் அணி சார்ந்த சுயேச்சைக்குழுவினர் சில வேட்பாளர்களை முதன்மைப்படுத்திப் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரசும், சூரியமூர்த்தி, பாக்கியதுரை ஆகியோர் தலைமையிலான சுயேச்சைக் குழுக்களும் முதன்மை வேட்பாளர்களைச் சுற்றியே தங்கள் பிரச்சாரத்தை முடுக்கி விட்டிருக்கிறார்கள்.

பொதுஜன முன்னணியைச் சேர்ந்த தமிழ் வேட்பாளர்கள் ஒருவர் பொ.ஐ.மு. மூன்று பாராளுமன்ற ஆசனங்களைத் திருகோணமலையில் பெற்றுக்கொள்ளும் என்றும், தான் மூன்றாவது பாராளுமன்ற உறுப்பினராக வர வாய்ப்புண்டு என்றும் துண்டுப்பிரசுரம் வெளியிட்டு தனது அறிவு பூஜ்ஜியத்தை வெளிப்படுத்தியுள்ளார். ஐ.தே.க-வின் தமிழ் வேட்பாளர்களில் ஒருவர் சுவரொட்டி மூலம் தன்னைப் பாராளுமன்றம் அனுப்புமாறு கோரிக்கை விடுப்பதுடன், "உங்கள் விருப்பு வாக்குகளை ரஞ்சனி சேரசிங்கவுக்கு அளியுங்கள்" என்று அப்பாவித் தனமாகக் கேட்டிருக்கிறார்.

திருகோணமலையில் இம்முறை 17 கட்சிகளும், 6 சுயேச்சைக்குழுக்களும் களத்தில் குதித்துள்ளன. நான்கு ஆசனங்களைப் பெறுவதற்காக 161 வேட்பாளர்கள் மோதுகிறார்கள்.

அரசியற்கட்சி சார்ந்தோரிடையும் ஆதரவாளர்களிடையேயும் காணப்படும் தேர்தல் பரபரப்பு எதுவும் மக்களிடம் காணப்படவில்லை. எதைக்கண்டும் அலட்டிக் கொள்ளாமல் தங்கள் கருமத்தில் கண்ணாயிருக்கிறார்கள் மக்கள்.

*விவேகி*

## தமிழ் இனி 2000

**தமிழ் இனி 2000 சென்னை மாநாட்டில் நடைபெற்ற அமர்வுகளில் இலங்கையிலிருந்து பேராளர்களாகக் கலந்து கொண்டோர் பெயர்களும், அவர்களின் அமர்வுகளும்.**

| உரையாளர் | அமர்வுகள் |
|---|---|
| 1. பேராசிரியர் கா. சிவத்தம்பி | தொடக்கவுரை |
| 2. மகாலிங்கம் தேவகௌரி | ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை |
| 3. வ. தவராசா | ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை |
| 4. அம்மன்கிளி முருகதாஸ் | ஈழத்துத் தமிழ் நாவல் |
| 5. மு. பொன்னம்பலம் | ஈழத்துத் தமிழ்க் கவிதை |
| 6. செ. யோகராசா | ஈழத்துத் தமிழ்க் கவிதை |
| 7. எம். ஏ. எம். நுஃமான் | மார்க்சிய விமர்சனம் |
| 8. ப. சூரியகுமாரி | பெண்ணிய விமர்சனம் |
| 9. சித்ரா மௌனகுரு | இலக்கியத்தில் புதிய போக்குகள் |
| 10. ஜீ. ஆர். கொன்ஸ்ரன்ரைன் | இலக்கியத்தில் புதிய போக்குகள் |
| 11. சு. வில்வரட்ணம் | ஈழத்துத் தமிழ்த் தேசிய இலக்கியம் |
| 12. நந்தினி சேவியர் | மார்க்சிய இலக்கியம் |
| 13. எஸ். ரஞ்சகுமார் | எதிர்ப்பு இலக்கியம் |
| 14. எம். பௌஸர் | எதிர்ப்பு இலக்கியம் |
| 15. எம். ஐ. எம். ஜபார் | விமர்சனம் புதிய போக்குகள் |
| 16. எம். ஏ. இக்பால் | நாட்டார் வாய்மொழி இலக்கியம் |
| 17. சி. ஜெயசங்கர் | ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு |
| 18. க. சிறீகணேசன் | ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு |
| 19. த. சனாதனன் | ஓவியமும் இலக்கியமும் |
| 20. மௌ. சித்தார்த்தன் | இலக்கியத்தில் தமிழ் அடையாளம் |
| 21. எஸ். எல். எம். ஹனீபா | இதழியலும் இலக்கியமும் |
| 22. தெளிவத்தை ஜோசப் | இதழியலும் இலக்கியமும் |
| 23. சாரல் நாடன் | மலையக இலக்கியம் |
| 24. ந. ரவீந்திரன் | தலித்திய இலக்கியம் |
| 25. ஔவை விக்னேஸ்வரன் | பெண்ணிய இலக்கியம் |
| 26. வி. என். எஸ். உதயச்சந்திரன் | சிறுவர் இலக்கியம் |
| 27. க. லோரன்ஸ் | பார்வை ஊடகங்களும் இலக்கியமும் |

**குறிப்பு : கட்டுரையாளர்கள் படித்த கட்டுரைகளின் தலைப்புக்கள் இங்கு தரப்படவில்லை.**

## சரிநிகர் வார இதழ்ச் சந்தாதாரர்களுக்கு ஒரு அறிவித்தல் !

உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

புதிய சந்தா விபரம் ;

**இலங்கை**

| | |
|---|---|
| ஆறு(06) மாதங்கள் : | ரூபாய் 300.00 |
| ஒரு(01) வருடம் : | ரூபாய் 600.00 |

**இந்தியா**

| | |
|---|---|
| ஆறு(06) மாதங்கள் : | ரூபாய் 300.00 |
| ஒரு(01) வருடம் : | ரூபாய் 600.00 |

**பிற நாடுகள்**

| | |
|---|---|
| ஆறு(06) மாதங்கள் : | ரூபாய் 300.00 |
| ஒரு(01) வருடம் : | ரூபாய் 600.00 |

**ஏற்கனவே சந்தா கட்டியுள்ளவர்களுக்கு வார இதழ் சந்தா விபரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

## நூல் வெளியீடு

சி.அ.யோதிலிங்கத்தின் "இலங்கையின் இனக்குழும அரசியல்" எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு தமிழ் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

தலைமை :

பேராசிரியர் சோ.சந்திரசேகரம் (தலைவர், கல்விப்பீடம் கொழும்பு பல்கலைக்கழகம்)

காலம்: 24.09.2000

மாலை 4.30 மணிக்கு

இடம்: கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபம்

இல: 7, 57ம் ஒழுங்கை

(உருத்திராமாவத்தை)

கொழும்பு - 06

## மறைந்த எழுத்தாளர் செ. கதிர்காமநாதன் நினைவாக....

**கடல் கடந்து புலம்பெயராத இலங்கையில் வசிப்பவர்களுக்கான ஒரு லட்சம் ரூபா பரிசுச் சிறுகதைப் போட்டி**

**போட்டிக்கான விதிகள்:**

1. புலம்பெயராத தமிழ் மொழி பேசும் இலங்கையில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
2. சிறுகதைகள் முன்னர் பிரசுரிக்கப்படாதவையாக இருத்தல் வேண்டும்.
3. சிறுகதைகள் படைப்பாளிகளின் சொந்த ஆக்கங்களாக இருத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு சிறுகதை மட்டுமே போட்டிக்காக அனுப்பி வைக்க முடியும்.
5. போட்டியாளர்கள் தமது சிறுகதைகளுடன் அவர்களுடைய முழுப்பெயர், பிறந்த திகதி, தற்போதைய வதிவிட விபரங்கள் ஆகியவற்றை அறியத் தரவேண்டும்.
6. சிறுகதைகள் அனைத்தும் 30 ஒக்டோபர் 2000க்கு முன்னர் கிடைக்கப்பெற வேண்டும்.

* மூவர் கொண்ட நடுவர் குழுவினால் சிறுகதைகள் பரிசீலிக்கப்பட்டு பரிசு தீர்மானிக்கப்படும்.
* தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று சிறுகதைகளுக்கும் முறையே ரூபாய் 35,000, ரூபாய் 25,000, ரூபாய் 15,000 தலா வழங்கப்படும். மற்றும் ஆறு சிறுகதைகளுக்கு தலா ரூபாய் 5000 வழங்கப்படும்.
* முடிவுகள் 31.12.2000க்கு முன்னர் அறிவிக்கப்படும்.
* பரிசுகள் இலங்கையில் வைத்து கையளிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

**Uyirnizhal,**
EXIL, 27 Rue Jean Moulin,-
92400 Courbevoie,
FRANCE.

Registered as a Newspaper in Sri Lanka


# சரிநிகர்

"சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே"
-பாரதி

இல. 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொட.
தொலைபேசி / தொலைமடல் : 814859, 815003, 815004.
மின்னஞ்சல்: sarini@sltnet.lk


## ஒரு சகாப்தத்தின் முடிவு?

முஸ்லீம் காங்கிரஸின் தலைவர் அஷ்ரஃப் அவர்கள் அகாலமாகி விட்டார்.

அவரது அகால மரணத்திற்குக் காரணம் விபத்தா அல்லது திட்டமிட்ட சதியா அன்றிப் புலிகளின் கொலைத் தாக்குதல் நடவடிக்கையா என்ற சர்ச்சைகள் இப்போது பரவலாக அடிபடத் தொடங்கியுள்ளன.

முதலில் இதை ஒரு விபத்து என்று செய்தி ஊடகங்கள் அறிவித்திருந்த போதும் எடுத்த எடுப்பிலேயே அரசியல்வாதிகள் பலரும்_ அஷ்ரஃப்புடன் அடிக்கடி சர்ச்சைப்படும் பௌசி உட்பட இதைச் சதி என்று தாம் சந்தேகிப்பதாக அறிவித்தனர்.

இப்போது புலிகளுக்கும்; இச் சம்பவத்திற்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகத்தை அம்பாறை வேட்பாளருடன் வந்த ஒரு இளைஞன் பற்றிய செய்தி மூலம் கிளப்பியுள்ளன அரச ஊடகங்கள்.

எப்படியோ; இந்த விசாரணைகள் சம்பவத்திற்கான காரணத்தைத் தேடிக் கண்டு பிடிக்கலாம். அல்லது அதை மூடி மறைக்கப் பயன்பட்டுப் போகலாம். எனினும்; அவற்றால் அஷ்ரஃப் அவர்களை மீளக் கொண்டு வந்து நிறுத்திவிட முடியாது என்பது உண்மையில் ஒரு திகைப்பூட்டுகின்ற நிஜம்.

ஆம். அஷ்ரஃப் என்ற அந்த மனிதர் இனித் திரும்பி வரப்போவதில்லை. எந்த விசாரணைகளும் விசாரணைக் கமிசன்களும் அவரை மீட்டுத் தரப் போவதில்லை. அவர் விட்டுச்சென்ற இடம் நிரப்பப்பட முடியாத ஒரு வெற்றிடமாய் நிலைக்கப் போகிறது குறைந்தது ஒரு சில காலங்கட்காவது.

ஆம்;அவரது இழப்பு அத்தகையதோர் பெரிய இழப்பு. ஏனென்றால் அவர் வெறும் பாராளுமன்ற அரசியற்கட்சி ஒன்றின் தலைவரோ அல்லது அரசாங்கத்தின் ஒரு முக்கிய அமைச்சரோ மட்டுமல்ல. அவர் ஒரு சமூகத்தின் எதிர்காலம் குறித்த நம்பிக்கையின் குறியீடாகவும் இருந்தவர்.

அஷ்ரஃப் என்ற அரசியல்வாதியின் தவறுகள்; தடுமாற்றங்கள் எவ்வளவு தான் விமர்சிக்கப்பட்டிருப்பினும் அவை எல்லாவற்றுக்கும் அப்பால் அவர் முஸ்லீம் மக்களின் அரசியல் உரிமைப் போரின் குறியீடாகத் திகழ்ந்தார்.

முஸ்லீம் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு ஏற்ற விதத்தில் அவர் செயற்பட்டாரா என்பது குறித்த கேள்விகளும்; விமர்சனங்களும் அவர் மீது முன்வைக்கப்பட்டிருக்கின்றன. அவரது காலத்தில் அவரைப் போல் நாட்டின் அனைத்துச் சமூகங்களைச் சேர்ந்தவர்களாலும் அதிகம் பேசப்பட்ட; விமர்சிக்கப்பட்ட வேறு அரசியல்வாதி யாரும் இல்லை என்று சொல்லலாம். அவ்வளவுக்கு முஸ்லீம் அரசியல் அவருடன் பின்னிப் பிணைந்திருந்தது.

அஷ்ரஃப் அவர்களின் மறைவு முஸ்லீம் மக்களின் அரசியல் அபிலாஷைகளிற்கு ஏற்பட்ட ஒரு பெரும் இழப்பு. முன்னொரு முறை எப்படிப் புலிகளின் தோல்வி; தமிழ் மக்களின் தோல்வியாக அமையும் என்று இப்பத்தியில் எழுதினோமோ அப்படியே அஷ்ரஃபின் மறைவையும் கருத வேண்டும். சமீப கால வரலாற்று நாயகர்களின்; குறிப்பாகத் தமிழ்; முஸ்லீம் மக்களின் தலைவர்களது அரசியல் முக்கியத்துவம் அவ்வாறான ஒரு போக்கையே வெளிப்படுத்தி வந்திருக்கிறது.

தலைவர்களின் வெற்றிகளால் மக்கள் பெறும் பயன்களை விட அவர்களது இழப்பால் மக்கள் இழப்பவை அதிகம் என்பது இன்றைய அரசியல் சூழலின் விசித்திர நிலை.

முஸ்லீம் மக்களிற்கு என ஒரு புதிய அரசியல் போக்கையும்; அவர்களின் அரசியல் உரிமைக்கு என ஒரு ஒருங்கிணைந்த அரசியல் இயக்கத்தையும் முன்நின்று உருவாக்கியவர் அஷ்ரஃப். முஸ்லீம் மக்களின் வரலாற்றில்; முதன் முதலாகத் தோற்றம் கண்ட அவர்கள் தம்மை ஒரு தேசமாக இனங்காண வைத்த அரசியலின் காரண கர்த்தா அவர்.

அவரது அரசியல் இயக்கமும் அவரும் தான் முதன் முதலாக இலங்கையில் உள்ள முஸ்லீம்கள் தம்மை ஒரு தனியானதும் தனித்துவமானதுமான தேசிய இனக் குழுமமாக இனங் காண்பதற்கான காரணம் என்பதில் யாருக்கும் மறுப்பிருக்க முடியாது.

இன்று அவர் அம் மக்கள் முன் இல்லை.


அவருடன் முஸ்லிம் காங்கிரஸின் தோற்றத்திற்குக் காரணமான அரசியலுக்கான சகாப்தம் முடிவுற்று விடக் கூடாது.

அது அடுத்தவர்களால் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

அதன் மூலம் தான் அவர் பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் இந்த நாட்டில் வெற்றி பெற முடியும் !

# ஐ.சி.ஆர்.சியிடம் உண்மையைச் சொன்ன மாணவன் படையினரால் கைது!

மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவன் மகாலிங்கம் சந்திரமோகன் கடந்த 02.09.2000 அன்று வவுனியா சனசஜ இடைத்தங்கல் முகாமில் வைத்து இராணுவப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். இவர் கடந்த யூலை மாதம் 29ந் திகதி கலாசாலை விடுமுறையின் நிமித்தம் தனது சொந்த இடமான முல்லைத்தீவு அம்பலவன் பொக்கணையிலுள்ள தனது வீட்டுக்கு சென்று திரும்பும் போதே கைது செய்யப்பட்டிருக்கிறார்.




சந்திரமோகனின் கைது கலாசாலை ஆசிரிய மாணவர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது. ஏனெனில் என்றுமில்லாதவாறு இவ்வருடம் ஆசிரியர் கலாசாலைக்கு வன்னிப்பகுதியில் இருந்து கிட்டத்தட்ட 200 ஆசிரிய மாணவர்கள் வந்து சேர்ந்திருக்கின்றனர்.

இது நீண்ட காலத்துக்குப் பிறகு வன்னி-மட்டக்களப்பு போக்குவரத்து உறவுகளையும் தொடர்புகளையும் வலுப்படுத்தியிருக்கிறது. என்னதானிருந்தாலும் சந்தேகத்தின் பேரில் கைது என்பது தங்களை இரண்டு வருடமும் மட்டக்களப்பிலே முடக்கி விடுமோ என்ற அச்சமும் ஆசிரிய மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இது ஒரு புறமிருக்க சந்தேகம் என்ற பேரில் சந்திரமோகன் இராணுவத்தினரால் திட்மிட்டு கைதுசெய்யப்பட்டார் என்பதே உண்மையாகும். விடுமுறைக்கு வீட்டுக்குச் சென்றிருந்த சந்திரமோகன் தான் கலாசாலைக்கு வரும் முன் கல்வி கற்பித்த அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலயத்தில் விடுமுறையைக் கழிப்பதற்காக பிரத்தியேகமாக மாணவர்களுக்கு வகுப்புக்களை நடத்தி வந்திருக்கின்றார்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 15ந் திகதியும் வகுப்புக்களை நடத்திக் கொண்டிருக்கும் போது சிறிலங்கா விமானப்படையினர் அப்பகுதியில் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டிருந்தனர். இதனால் அப்பாடசாலையின் மூன்று கொட்டில்கள் தீக்கிரையாகின. ஆனால், சிறிலங்கா அரசும் விமானப்படையினரும் தாங்கள் புலிகளின் முக்கிய மூன்று தளங்களை அழித்தொழித்து விட்டதாகப் பிரச்சாரம் செய்தனர். விமானப்படையினர் அழித்தொழித்ததாக கூறிய மூன்று தளங்களும் அம்பலவன் பொக்கணை மகாவித்தியாலயத்துக்கு யூ.என்.எச்.சி.ஆரினால் கட்டிக் கொடுத்த கொட்டில்களாகும். சம்பவம் நடந்து இரண்டுநாட்களின் பின் அம்பலவன் பொக்கணைக்கு வந்த ஐ.சி.ஆர்.சியினர் சம்பவம் நடந்த இடத்தையும் பார்வையிட்டு சம்பவத்தை நேரில் கண்ட சந்திரமோகனையும் செவ்வி கண்டு ஒளிப்பதிவும் செய்தனர்.

இந்த செவ்வியே சந்திரமோகனுக்கு வினையாக வந்து முடிந்தது. சனச இடைத்தங்கல் முகாமைத் தாண்டி வருபவர்களிடம் சந்திரமோகனை இராணுத்தினர் விசாரித்திருக்கிறார்கள். கடைசியிலேயே மோகன் -2ந் திகதி புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். தடுப்புக்காவலில் இருக்கும் மகனைப் பார்க்கச் சென்ற தாயிடம் தன்னிடம் ஐ.சி.ஆர்.சிக்கு கொடுத்த செவ்வியைப் பற்றியே கேட்டு அடித்ததாக சந்திரமோகன் கூறியிருக்கின்றார். சந்திரமோகனின் கைதைக் கண்டித்து சக ஆசிரியமாணவர்கள் செப்.11 இலிருந்து இரண்டு நாட்களுக்கு விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.



ஆனால் இச்செய்தி எழுதும் வரையில் சந்திரமோகன் விடுதலை செய்யப்படவில்லை.

இதேவேளை மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவர்கள் வீதிகளில் வைத்தும் பொலீசாரினாலும், இராணுவத்தினராலும் மோசமான முறையில் நடத்தப்படுகின்றனர். கலாசாலையில் எல்லா மாணவர்களுக்கும் தங்குமிடவசதி இல்லாத காரணத்தினால் அந்தப்பகுதியிலுள்ள வீடுகளிலேயே தங்களுடைய விடுதி வசதிகளை ஏற்படுத்த வேண்டிய நிலையுள்ளது. இந்நிலைமையில் தங்களுடைய தேவைகளுக்காக வெளியே செல்லும் போதும் கலாசாலையில் இருந்து விடுதிக்கு வரும்போதுமே இவ்வாறான சம்பவங்களுக்கு ஆசிரிய மாணவர்கள் இலக்காக வேண்டியுள்ளது. ஆசிரியர்களிடம் சேட்கொலரையும் கழுத்தையும் பிடித்து அடையாள அட்டை பார்க்குமளவுக்கு மட்டக்களப்பில் ஜனநாயகமும், மனித உரிமையும் மதிக்கப்படுகின்றது. யாரை நோவோம்? யார்க்கெடுத்துரைப்போம்.


எரியும் இனப்பிரச்சினை ! மக்களின் அவலங்கள் போதும் !!

இன நல்லிணக்கம் மூலமான சமாதானத்திற்கு
இளையவர்களின் பணி !!!

இலங்கையின் வரலாற்றில் இனப்பிரச்சினை தொடர்பான
முதலாவது தமிழ் தொலைக்காட்சி சஞ்சிகை நிகழ்ச்சி



பிரதி **செவ்வாய்** தோறும் இரவு **7.25**
மணிக்கு **T.N.L.** தொலைக்காட்சியில்

*சமஉரிமை, சகவாழ்வு, சமாதானம்*

இம் மாதம் 26ஆம் திகதி ஒளிபரப்பாகும் விழிப்பில் எதிர்பாருங்கள்......

* அன்று தேசிய மொழியாக இனம் காணப்பட்ட தமிழ் மொழியின் இன்றைய நிலையென்ன?
* பாடப் புத்தகங்களில் திரிபடையும் வரலாறுகள்?


ஆசிரியர்: பாலசுப்ரமணியம் வசந்தன், வெளியீட்டாசிரியர்: எஸ்.கே.விக்னேஸ்வரன், 19/04, 01/01, நாவல வீதி, நுகேகொடை. அச்சுப்பதிவு: நவமக, 66/04, தர்மாராம வீதி, இரத்மலானை. 21.09.2000